பத்தாம் ஆண்டு
நீங்காத நினைவாக...



கிட்டண்ணா...

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஜனவரி 2003

குண்டுச் சத்தங்கள் இல்லை.
குலைநடுங்க உச்சிப்பறக்கின்ற விமானத்தின் கொலை இரைச்சல் இல்லை.
மூச்சுக் காற்றில் கந்தகப்புகை வாடை இல்லை.

**எங்கள் முற்றத்து மலர்களுக்கு இப்போதுதான் மகிழ்ச்சி – இந்த வசந்தம் மாறாத வரம் வேண்டும் மண்ணுக்கு.**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






தேசியத் தலைவரினதும், சிறீலங்காப் பிரதமரினதும் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட சமாதானக் கடிகாரங்கள் கொழும்பில் அதிகளவு விற்பனையாகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

உள்ளே...


## கட்டுரைகள்

சமாதானத்துக்கான தந்திரம் பக்கம் - 06

காட்சி மாறுகிறது... கருத்தும் மாறுகிறது... பக்கம் - 08

இராணுவத்தின் பாதுகாப்புச் சிந்தனை மக்களின் பாதுகாப்பின்மையே பக்கம் - 10

யாழ்ப்பாணத்தின் ஆறாக்காயம் பக்கம் - 14

உயர்பாதுகாப்பு வலயங்களும் அச்சப்படும் தமிழ் மக்களும் பக்கம் - 16

எல்லாளனை ஆக்கிரமிப்பாளனாகச் சித்தரிக்கும் மகாவம்சம் பக்கம் - 28

பயனற்றவர்களாகிவிட்ட பெண்கள் பக்கம் - 32

## அணையாத தீபங்கள்

கேணல் கிட்டு பக்கம் - 24

## கவிதை

முல்லைக்கமல் கவிதைகள் பக்கம் - 12

இயந்திரன் - தா. பாலகணேசன் பக்கம் - 17

கருணாகரன் கவிதைகள் பக்கம் - 18

கறுப்பு நங்கையின் கண்ணீர் -இந்திரன் பக்கம் - 27

அமரதாஸ் கவிதைகள் பக்கம் - 38

## சிறுகதை

ஆரண்யக்கனவுகள் - பிரதீபகுமரன் பக்கம் - 20

வேப்பமரங்கள் சிரஞ்சீவிகள் - சிவேந்திரன் பக்கம் - 30

படைப்பு - எம்.ஏ.ரஹ்மான் பக்கம் - 34

புள்ளிகளும் கோடுகளும் -ரேணுகா செயறூபன் பக்கம் - 36

இது எனக்கு மட்டுமேயாகட்டும் - சூரிய நிலா பக்கம் - 40

## தொகுப்பு

நினைவுக்குறிப்பு.... பக்கம் - 42

மீள்பார்வை பக்கம் - 43

பதிவுகள்...... பக்கம் - 44




எமது வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்கள்

2003: சமாதானத்தின் ஆண்டுப் பலன்

04



24



கிட்டண்ணா...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையில் இருந்து...

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும், இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக, நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.



தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்தியிரண்டாம் ஆண்டு

ஜனவரி

2003

திருவள்ளுவர் ஆண்டு 2034

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

# தலைவாசல்

## மனச்சுத்தியைப் பரிசோதித்தல்

தமிழீழ - சிறீலங்கா தரப்புக்களுக்கு இடையேயான இணக்க முயற்சிகள் புதிய முக்கிய தடைக்கற்களை தாண்ட வேண்டிய காலநிர்ப்பந்தத்தில் நிற்கின்றது. தற்போது தமிழர்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி இயல்புநிலை உருவாக்கும் விடயம் முக்கியத்துவம் பெற்றதொன்றாகிவிட்டது.

கடந்த ஆண்டு பெப். இல் தமிழீழ தேசிய தலைவரும், சிறீலங்காப் பிரதமரும் கையொப்பமிட்ட உடன்பாட்டின் அடித்தளமாக நிற்கும் இயல்பு நிலைய்யை உருவாக்கல் எனும் நோக்கிற்கு இது ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்தில், குறிப்பாக யாழ்க்குடாவில் பெருமளவு மக்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கின்றது. வலிகாமம் பகுதியில் தமிழர்களின் தொன்மையான பல கிராமங்கள் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு சிதறுண்டு போயுள்ளது. இவ்விடங்களைச் சேர்ந்த மக்கள் போக்கிடமற்றவர்களாக சிதறுண்டு கிடக்கின்றனர். இராணுவ முகாம்களைச் சுற்றிவர உயர் பாதுகாப்பு வலயங்கள் என்கின்ற பெயரில் தமிழர்களின் வாழ்விடங்களை எதிரி அரசு கையகப்படுத்தி வைத்துள்ளது. இது இரு தரப்பு உடன்பாட்டின் நோக்கிற்கு எதிரானது.

தற்போது சிங்கள இராணுவம் இந்த விடயத்தில் நியாயப்படி நடப்பதற்கு தயாராகவில்லை என்பதை தெளிவாக அறிவித்துவிட்டது. இராணுவ நோக்கில் பிரச்சினையைப் பார்க்கும் சர்வதேச இராணுவ நிபுணர்கள் கூட மாற்றுக்கருத்தை இவ்விடயத்தில் கொண்டு வருவார்கள் என நம்பமுடியாது. சிங்கள அரசு (ரணில் அரசு) இவ்விடயத்தில் தட்டுத்தடுமாறி இராணுவத்தின் இழுப்புக்கு நடனமாடுகின்றது போன்றதொரு போக்கையே வெளிக்காட்டி வருகின்றது.

இந்தப் பின்னணியில் இணக்கப் பேச்சுக்கள் மிக கூர்மையான விடயத்தினை கையாள வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இனவாத நோக்கையும், வெறும் குருட்டுத்தனமான இராணுவ எண்ணங்களையும் ஒருபுறம் தள்ளிவிட்டு தமிழர்கள் தமது தாயகத்தில் - கிராமங்களில் - வீடுகளில் நிம்மதியாக குடியமர்வதற்கான வாய்ப்பை ஏற்றுக் கொள்ளும் தலைமைத்துவம் இன்று சிங்கள அமைப்புக்கு தேவைப்படுகின்றது.

புலிகள் தரப்பிற்கு இது பெருமளவு விட்டுக்கொடுப்புக்களைத் தரமுடியாத பிரச்சினை. இது மக்களின் அடிப்படை வாழ்வுடன் இணைந்த பிரச்சினை. மக்களின் விடுதலை இயக்கமான புலிகள் மக்களின் வாழ்வினைப் பாதிக்கும் விடயத்தில் கண்மூடி மௌனிகளாக இருக்கமாட்டார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்த விடயமாகும்.

இச்சிக்கலினை கூர்மையாக நோக்குபவர்களுக்கு முக்கியமான விடயமாக இதன் சர்வதேச பிரதிபலிப்புக்கள் அமையப் போகின்றன. இலங்கைத் தீவின் இணக்க முயற்சிகளை முன்மாதிரி என விபரித்து - ஆதரித்துவரும் உலக சமூகம், இந்த விடயத்தில் என்ன நிலையை எடுக்கப் போகின்றது?.

முற்றுமுழுதான குருட்டுத்தனமான இராணுவ நோக்கை ஆதரிக்கப் போகின்றதா அல்லது மனிதாபிமானக் கண்ணுடன் இப்பிரச்சினைக்கான தீர்வை அணுகுமா?

முடிவில், இது இச்சிக்கலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரதும் மனச்சுத்தியை பரிசோதிக்கும் விடயமாகவே உருவாகிவிட்டது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்







# 2003: சமாதானத்தின்



பிந்திக்கிடைத்த தகவல்களின்படி சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியிலிருந்து சிலகட்சிகள் வெளியேறலாம் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே. வி. பி. க்கும் இடையில் விரைவில் ஒரு புதிய கூட்டு உருவாகலாம் என்றும் இப்புதிய கூட்டு சமாதானத்துக்கெதிராக சிங்களப் பொது சனங்களைத் திரட்டுவதை தனது இலக்கானதாகக் கொண்டிருக்கும் என்றும் கூறப்படுகின்றது. இதொரு புறம்.

இன்னொரு புறம்- விரைவில் தென்னிலங்கையில் தொழிற்சங்கங்கள் அரசின் தனியார் மயமாக்கலுக்கு எதிராக பரந்தளவிலான தொடர்ச்சியான போராட்டம் ஒன்றைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவை எதைக்காட்டுகின்றன என்றால்- இவ்வாண்டு ரணிலுக்கு ஒரு சோதனையாண்டாக அமையக்கூடும் என்பதையே.

ரணிலுக்கு சோதனையென்றால் அது சமாதானத்துக்கும் சோதனைதான் இதை இரண்டு விதமாக நிரூபிக்கலாம்.

முதலாவது - சமாதானத்தில் ஈடுபடும் இருதரப்பில் ஒருதரப்பின் தலைவராக அவர் இருப்பதால் அவருக்கு வரும் சோதனைகள் சமாதானத்திற்கென்றாகிவிடும்

மற்றது - பொதுவாகச் சிங்களத் தலைவர்கள் தமக்கு வரும் சோதனைகளைத் தமிழர்களின் தலைகளின் மீது உருட்டி விடுவதே வழமை. தமக்கு நெருக்கடிகள் வரும் போதெல்லாம் சிங்களத் தலைவர்கள் தமது இராஜ போகத்தையும் பதவிச் சுகங்களையும் காப்பாற்றுவதற்காக சமாதானத்தைக் காட்டிக் கொடுப்பதே வழமை. இந்தப் பாரம்பரியத்தை ரணில் பின்பற்றுவராக இருந்தால் தொழிற்சங்கப் போராட்டங்கள் மற்றும் சமாதானத்துக்கு எதிரான அரசியல் கூட்டுக்கள் போன்றவற்றை வெற்றிகொள்ள சமாதானத்தைப் பலியிடமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஏற்கனவே உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய சர்ச்சையில் சமாதானம் தொங்கத் தொடங்கி விட்டது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகியதிலிருந்து கடந்த சுமார் பத்து மாதகால முயற்சிகளில் தோன்றிய ஒப்பீட்டளவில் பெரிய சோதனையாக இது மாறிவருகிறது. இது விடயத்தில் சந்திரிகா என்ன நினைக்கிறார், ரணில் என்ன நினைக்கிறார், என்பதை விடவும் தமிழர்களைப் பொறுத்தவரை அதிகம் அக்கறைக்குரிய அதிகம் கவலைக்குரிய ஒரு விடயமாக இருப்பது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலைபாடுதான் புலிகளால் கடுமையாக விமர்சிக்கப்படும் இந்த நிலைப்பாடு, பெருமளவு, இராணுவத்தின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் ஒன்றாக இருப்பதே இங்கு பிரச்சினை.

முன்பு காஞ்சிரங்குடா சம்பவத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு விட்ட முதல் நிலை அறிக்கை தமிழர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

இம்முறையும் மீளக் குடியமர்வு விவகாரத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை தமிழர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

இம்முறை சமாதானம் செய்வதிலுள்ள மிகவும் ஆறுதலான விடயமே பக்கச் சார்பற்ற பிராந்திய நலன்கள் எதுவுமற்ற அனுசரணையாளர் பாத்திரம்தான். இந்த அனுசரணையாளர்களின் ஒரு அங்கமாய் இருப்பது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு. எனவே இக்குழு இருதரப்பினரதும் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பே நியாயமானது.

பதிலாக ஓராண்டுக்கு முந்திய யுத்தகள வலுச்சமநிலைபற்றி அவர்கள் கதைப்பதானது கடந்த சுமார் பத்து மாதகால சமாதான முயற்சிகளின் வளர்ச்சிகள் எதையும் அவர்கள் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டார்களோ என்ற அச்சத்தை தமிழர்க்கு உருவாக்கி உள்ளது.

இது சமாதானம் செய்வதில் உள்ள மிகவும் ஆறுதலான அம்சத்தையே சோதனைக் குள்ளாக்கிவிடும் போலிருக்கிறது.

மீளக் குடியமர்வு பற்றிய சர்ச்சையில் இராணுவம் விடாப்பிடியாக வற்புறுத்தும் அம்சம் இந்த வலுச்சமநிலைதான். இங்கே அவர்கள் வலுச்சமநிலை என்று கதைப்பது ஓராண்டுக்கு முன்பு அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக முன்பு காணப்பட்ட ஒன்றைத்தான்.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி சுமார் பத்து மாதங்களாகிவிட்டது. இந்த பத்து மாத



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நிலாந்தன்

# ஆண்டுப் பலன்

காலத்துள் சமாதானம் மெல்லத் துளிர்த்து ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து விட்டது அந்த வளர்ச்சிகளின் பிரகாரம் உபகுழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதவி வளங்கும் நாடுகள் சர்வதேச அரங்கில் இரு தரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்தாயிற்று. இந்நிலையில் உருவாக்கப்பட்ட உபகுழு அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்க முடியவில்லை என்றால் சமாதானம் 'றிவேஸ்சில்' போகிறது அல்லது இறுகிப் போய் நிற்கிறது என்றுதானே அர்த்தம்?

இதை இன்னொரு விதமாகவும் பார்க்கலாம் சுமார் ஓராண்டுக்கு முன்பிருந்த யுத்தகள வலுச்சமநிலையே புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாகக் காரணம். இந்த வலுச்சமநிலையில் மீது கட்டப்பட்டதே புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த சுமார் ஓராண்டு கால யுத்தநிறுத்தத்திலும் இது மாறாதிருக்கிறது. எனவே யுத்த களத்தில் நிலவுவது அதே பழைய வலுச்சமநிலைதான்.

ஆனால் கடந்த பத்து மாத காலமாக சர்வதேச அரங்கில் நிலைமைகள் மாறிவருகின்றன. புலிகளுக்கு எதிராய் இருந்த உலகின் அபிப்பிராயத்தில் உண்டாகிவரும் மாற்றத்தால் சர்வதேச அரங்கில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான வலுச்சமநிலை புலிகளுக்குச் சாதகமாக மாறத் தொடங்கிவிட்டது.

சரியாகச் சொன்னால்- இப்பொழுது ஈழப்போரின் களம் சர்வதேச அரங்கிற்கு நகர்ந்து விட்டது. எனவே அங்கே உண்டாகிவரும் புதிய வலுச்சமநிலையை கவனத்தில் எடுத்தே இனி எதையும் செய்ய வேண்டியிருக்கும்.

இப்புதிய வலுச்சமநிலையையின் பிரகாரமே உபகுழு உருவாக்கப்பட்டது.

உபகுழு எனப்படுவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடுத்தகட்ட வளர்ச்சிமட்டுமல்ல சர்வதேச அரங்கின் ஈழப்போரின் மாறிவரும் வலுச்சமநிலைக்கேற்ப உருவாக்கப்பட்ட அமைப்பே அது. இப்புதிய வலுச்சமநிலையை யுத்த களத்திலும் உருவாக்க அதாவது - ஓராண்டுக்கு முன்பிருந்துவரும் பழைய வலுச்சமநிலையை புதிய வலுச்சம நிலைக்கேற்ப மாற்றியமைப்பதற்கென்றே உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன.

அவை இப்பொழுது இறுகிப் போய்நிற்கின்றன. சூனியப் பிரதேசத்தில் கூடிய உபகுழு சாதித்தவைகளும் சூனியம்தானா என்று கேட்கும் ஒரு நிலை.

அதிலும் இதிலுள்ள மிகவும் ஆபத்தான அம்சம் என்னவென்றால் - கடைசியாகக் கிடைத்திருக்கும் ஒருதகவலின்படி மீளக் குடியமர்வு தொடர்பான இராணுவத்தின் முன் மொழிவுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராலேயே வரையப்பட்டன என்று யாழ்ப்பாணத்தில் உள்ள படைத்துறை உயர்மட்டத்தில் கூறப்படுகின்றது என்பது.

அவ்வாறாயின் ரணில் விக்கிரமசிங்க இப்பந்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்டது போல சமாதானத்தைப் பலியிடப் போகிறாரா?

உண்மையில் குடியமர்த்துவது என்பது ஒரு படைத்துறைத்தீர்மானம் மட்டுமல்ல அதில் இராணுவம் சம்மந்தப்பட்டிருக்கும் அளவுக்கு சிவிலியன்களும் சம்மந்தப்பட்டடிருக்கிறார்கள். இதில் யாருடைய நலன்களுக்கு முதன்மை தருவது என்பதே இங்குள்ள பிரச்சினை.

இது சமாதானத்தின் வளர்ச்சிப்போக்கை கணக்கிலெடுத்து முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரு விடயம். இதன்படி - உப குழுக்களை உருவாக்குவதென்று ஒரு அரசியல் தீர்மானத்தை எடுத்துவிட்டு மீளக்குடியமர்த்துவதை படைத்துறையிடம் தீர்மானிக்க விடுவதென்பது சமாதானத்துக்கு விசுவாசம் இல்லாத ஒரு செயலே.

உபகுழுக்களை உருவாக்கியது ஒரு அரசியல் தீர்மானம் என்பதால் மீளக்குடியமர்த்துவதும் ஒரு அரசியல் தீர்மானமே. வேண்டுமானால் இதில் இராணுவத்தைக் கலந்தாலோசிக்கலாம். மற்றும்படி இராணுவம் மட்டும் முடிவெடுக்க முடியாது தவிர இராணுவமே கூறுகிறது அது பாதுகாப்பு அமைச்சின் முடிவுதான் என்று அவ்வாறாயின் உபகுழுவின் கதி என்னவாகும்?



சமாதானத்துக்கான இந்த ஆண்டின் பலனெனப்படுவது அதிகமதிகம் உபகுழுவின் தலைவிதியிலேயே தங்கி இருக்கிறது.



www.tamileelamarchive.com

# சமாதானத்துக்க

இ.விவேகானந்தன்



சிறீலங்காவின் இரு தசாப்தங்களாக நடந்த யுத்தமும் சனநாயகத்தின் வாரிசான கட்சியரசியலின் சீரழிவும், அச்சீரழிவின் பயனாக ஆட்சியைக் கைப்பற்றவும் தக்கவைக்கவும், இனவாதத்தையும் யுத்தத்தையுமே துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தியதும், பயன்படுத்தவேண்டி வந்ததும் சிறீலங்காவின் அரசியலில் 'இராணுவத்தை' இனவாதமும் தன்னாதிக்கமுள்ள ஒரு சக்தியாக வளர்த்து விட்டமை வெளிப்படையானது. இதன் தர்க்கபூர்வ வளர்ச்சியானது, அரசாங்கங்கள் இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மாறாக இராணுவத்துடன் சமரசப் போக்கை கடைப்பிடிக்க வேண்டிய அளவுக்கு நிலைமையினை விபரீதமாக்கியுள்ளது. இந்த விபரீதம் ஏற்படுத்தப் போகின்ற கடுமையான நெருக்கடியை, தாக்கத்தை அவை பார்க்க வேண்டிய சூழல். அச்சூழலுக்கு அடிகோலிய கட்சிகளுக்கு ஏற்பட்டு விட்டமை வேடிக்கையானதுதான். ஆனால் அது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பாதிப்பதும் நசுக்குவதும் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ முடியாத விடயங்களாகும்.

சீனாவில் சனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டவுடன் 'சீன மக்கள் இராணுவம்' தனது பணிவை உடனடியாகவே அவருக்குத் தெரியப்படுத்தும். அதன் மூலம் அவர் தனது ஆட்சியினைத் தங்கு தடையின்றி நடத்திச் செல்ல முடிகிறது. "சிறீலங்காவில் என்ன நடக்கிறது" இராணுவமானது (இங்கு இராணுவம் எனக் குறிப்பிடப்படுவது ஒட்டு மொத்த பாதுகாப்புப் படைகளை மட்டுமேயாகும்)

அரச இயந்திரத்தின் ஒரு பகுதி என்பதையும் மீறி அரசாங்கத்தின் பங்காளி போன்றோ, அன்றி அரசாங்கத்துக்குச் சமமான அந்தஸ்துள்ள ஒரு அமைப்புப் போன்றோ இயங்க முற்படுவது வேடிக்கையானதும் விபரீதமானதுமாகும்.

மேற்படி செல்நெறியின் மிக அண்மைக்கால வெளிப்பாடுகளாகவே 'உயர்பாதுகாப்பு வலயங்கள்' விடயம் விளங்குகிறது. சிறீலங்காவின் இராணுவத் தளபதியும். அதன் யாழ். குடாவுக்கான பொதுக்கட்டளையிடும் (Genaral Officer Commanding) அதிகாரியும் நடந்து கொள்கின்ற கருத்துக்களும் ஒரு நாட்டின் பாதுகாப்பு விவகாரம் அல்லது நாட்டின் இராணுவ நலன்கள் என்பதாக அல்லாமல் இராணுவத்தின் நலன்களைப் பேணுவதற்கு அவர்கள் முற்படுவதனையே சுட்டிக்காட்டுகின்றன. இவர்களுக்குத் தாளம் போடும் வகையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த சிவில் அதிகாரிகளினதும் கருத்து வெளிப்பாடுகள் அமைந்துள்ளமை சோகமானதும் விரக்தியை ஏற்படுத்துபவையுமாகும்.

கடந்த சில நாட்களின் முன்னர் கண்டியில் வைத்து (மகாநாயக்கர்களிடம் ஆசிபெற்ற பின்னர்) சிறீலங்காவின் இராணுவத் தளபதி தெரிவித்த கருத்துக்கள் மேற்சொன்ன விடயங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தப் போதுமானவையாகும். "அரசியல் தீர்வு ஏற்பட்டாலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது. அத்தோடு இராணுவத்தின் நலன்கள் கவனத்திலெடுக்கப்படும்" இதுவே அவரது கூற்று.

இக் கூற்றினைக் கவனமாகப் பரிசீலித்துப் பாருங்கள் அரசியல்தீர்வு ஏற்பட்டதன் பின்னரும் நாட்டில் இராணுவம் தனது பிடியினைத் தளர்த்துவதற்குத் தயாராக இல்லை என்பதனை இது காட்டவில்லையா? அத்துடன் நாட்டின் இராணுவ நலன் என்பதாக இல்லாமல் 'இராணுவத்தின் நலன்' என்பதிலேயே இராணுவத்தின் கவனம் குவிந்துள்ளதையும் இது தெளிவாக்கவில்லையா?

இப்போது, முன்னாள் அரசாங்க அதிபரும் நிர்வாக சேவையில் மூத்த ஒரு அதிகாரியுமான சிறீலங்காவின் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கூற்றைக் கவனியுங்கள். "அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள சொத்துக்களுக்கான உரிமையாளர்கள் யார் என்பதைக் கண்டறிவதில் பிரச்சினை உள்ளது. அத்தோடு அவற்றிலிருந்து இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை பற்றியும் பிரச்சினை உள்ளது. அதனால் அவற்றை ஒப்படைப்பதில் பிரச்சினை காணப்படுகிறது"

பாருங்கள் இராணுவம் தன் பிடியைத் தளர்த்த மறுக்கும் சூழலுக்கு எவ்வாறானதொரு நிர்வாக ரீதியான விளக்கத்தை அவர் வழங்குகிறார். அப்படியாயின் உரிமையாளர் இல்லாத அல்லது தனது உடமைதான் அது என்பதை நிரூபிக்க முடியாத ஒருவருடைய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ான தந்திரம்

சொத்தினை இராணுவம் ஆக்கிரமித்துக் கொள்வது நியாயம்தான் என்பதா ஒஸ்ரின் பெர்னாண்டோவினுடைய நிலைப்பாடு?

உண்மையில் இலங்கைத்தீவில் சமாதானம் ஏற்பட வேண்டுமெனில் சிங்கள ஆளும் வர்க்கத்திடமும், அதிகார இயந்திரத்திடமும் ஆழ்மனதில் தமிழ் மக்களுடைய உரிமையை அங்கீகரிக்கும் மனப்பதிவு உருவாகும் வரைக்கும் இலங்கைத்தீவில் சமாதானம் என்பது பகற்கனவேதான். இராஜதந்திர நகர்வுகள் பேச்சுவார்த்தைகள், தீர்மானங்கள் என்பவையெல்லாம் அவற்றின் அமுலாக்கலில்தான், அவை நடைமுறைக்கிடப்படுவதில்தான் தங்கியுள்ளன. மாறாக வெறும் வார்த்தை ஜாலங்களாகப் பேச்சுவார்த்தை முடிவுகள், கொள்கைத் தீர்மானங்கள் அறிவிக்கப்படுவதும், பின்னர் அவை 'காற்றில் கரைந்த கற்பூரமாகக் கழிந்து கவனிக்கப்படாமற்' போவதும் மக்கள் மனதில் சமாதான நகர்வுகள் மீதான நம்பிக்கையின்மையையே தோற்றுவிக்கும். இதனையே சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்களித்த பேட்டியில் கேணல் கருணா அவர்கள் "மக்களிடமிருந்து எங்களுக்கு அழுத்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு மாற்றத்தையும் காணவில்லையென்று. எனவே அரசு இராணுவத்தைச் சாட்டிக் கொண்டிருக்காமல். தான் விடயங்களை நிறைவேற்ற வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

உண்மையில் இது மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட இலங்கையில் சமாதானத்தை எட்டுவதற்கான சூத்திரமாகும். மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டுமெனில் அரசு இராணுவத்தைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். எடுக்கப்படும் முடிவுகளை மதிக்கும், அமுல்படுத்தும் மனநிலைக்கு இராணுவத்தைக் கொண்டுவரல் வேண்டும்.

இங்கே நாங்கள் மிக முக்கியமான விடயத்தின் விளிம்புக்கு வந்துள்ளோம். அது, இராணுவத்தை யுத்தத்துக்குப் பின்னான மனநிலைக்குத் தயார்படுதல், என்ற மிக முக்கியமான பாரிய நடவடிக்கையேயாகும். இதற்கு சிறீலங்காவின் பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளர்களும், அதனை நடை முறைக்கிடுபவர்களுமான உயர்பீடத்தினர் முதலில் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும். நான் நினைக்கிறேன், இவர்கள் இந்தக் கட்டத்துக்கு வருவதற்கு முன்னதாகவே ரணிலின் அரசு சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பித்து விட்டதென்று. எனவேதான் யுத்த முனைப்பிலும் அதற்கான தயார் நிலையிலுமே இருக்க முனையும் பாதுகாப்புத் தரப்புடன் மல்லுக்கட்ட வேண்டிய சூழமைவுக்குள் விழிபிதுக்க வேண்டியேற்பட்டு விட்டது.

உண்மையிலேயே யுத்தத்துக்குப் பின்னான சூழலுக்கு இராணுவத்தைத் தயார்ப்படுத்த வேண்டுமாயின், அதற்கென உயர் அதிகாரிகளின் குழாமொன்றினை முதலில் பயிற்றி அவர்களை யுத்தம் நடைபெற்ற பிராந்தியங்களுக்கான கட்டளையதிகாரிகளாக அனுப்பியிருத்தல் வேண்டும். அத்தோடு தீவிர போர் முனைப்புடன் பயிற்றுவிக்கப்பட்ட படையணிகளைப் பின் விலத்திக் கொண்டிருத்தலும் வேண்டும்.

யாழ். குடாநாடு கைப்பற்றப்பட்டவுடனே இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த உளவியற் போர் நிபுணர்களே அங்கு கட்டளையதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் அங்கே 'மக்கள் மனங்களை வெல்லுதல்' என்ற நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடுத்தார்கள். தற்போதய இராணுவத்தளபதியே அதற்குத் தலைமை தாங்கியவர் என்பதுவும் இங்கே கவனிக்கத்தக்கது. அத்தோடு அவரின் 'இராணுவத்தின் நலன்கள் கவனிக்கப்படும்' என்ற கூற்றும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆகவே, இராணுவத்தை யுத்தத்துக்குப் பின்னான சூழலுக்கு 'உண்மையிலேயே தயார்ப்படுத்த' சிறீலங்கா அரசாங்கமும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் முனைகிறார்களெனில், தமது தீர்மானங்களுக்குப் பணிந்து, ஏற்று அதனை நடைமுறைக்கிடும் பக்குவத்துக்கு இராணுவத்தைக் கொண்டு வருவதாயின் அதற்குப் பயிற்றப்பட்ட ஒரு தொகுதி உயர் இராணுவ அதிகாரிகள் மிக உடனடியாகத் தேவைப்படுகின்றனர். இவர்கள் கட்டளையதிகாரிகளாக நியமிக்கப்பட்டு படிப்படியாக இராணுவத்தின் யுத்தமுனைப்பும் தமிழர்கள் மீதான அதன் காழ்ப்புணர்வும் தணிக்கப்பட்டுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படல் வேண்டும்.

இதனை, குடாநாட்டில் உள்ள இராணுவத்தினரின் 'போரிடும் மனநிலை பாதிப்படைவதை' தடுத்து அவர்களின் மனோநிலையைக் கட்டியெழுப்புவதற்கு அனுப்பப்பட்ட மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவிடம் எதிர்பார்ப்பதென்பது அடிமுட்டாள் தனமாகும். கிராமத்து மொழியிற் சொன்னால் 'சுரைக் கொட்டை போட்டால் பாவற் கொட்டையா முளைக்கும்' எனவே புதிதாகப் பாவற் கொட்டைகள் போடப்படுதல் வேண்டும்.

அதனை விடுத்து இராணுவத்தரப்பை கருத்து வெளியிடுவதற்கும் தீர்மானங்களை முன்வைப்பதற்கும் அனுமதிப்பது விருப்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும். அத்தோடு இப்போக்கு யாழ். ஆயர் குறிப்பிடுவதைப் போன்று 'தலையிருக்க வால் ஆடுவதைப் போன்றும்' 'மக்களை எரிச்சலடையச் செய்வதுமாகும்' மக்கள் எரிச்சலடைவதென்பது கேணல் கருணா அவர்கள் குறிப்பிடுவதைப்போன்று 'மக்களிடம் இருந்து அழுத்தங்களைத் தோற்றுவிக்கவும் அவர்களை ஏமாற்றமடையவைக்கும்' என்பதிலும் சந்தேகமில்லை.



*சிறீலங்காவின் இரு தசாப்தங்களாக நடந்த யுத்தமும் சனநாயகத்தின் வாரிசான கட்சியரசியலின் சீரழிவும், அச்சீரழிவின் பயனாக ஆட்சியைக் கைப்பற்றவும் தக்கவைக்கவும், இனவாதத்தையும் யுத்தத்தையுமே துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தியதும், பயன்படுத்தவேண்டி வந்ததும் சிறீலங்காவின் அரசியலில் 'இராணுவத்தை' இனவாதமும் தன்னாதிக்கமுள்ள ஒரு சக்தியாக வளர்த்து விட்டமை வெளிப்படையானது. இதன் தர்க்கபூர்வ வளர்ச்சியானது, அரசாங்கங்கள் இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மாறாக இராணுவத்துடன் சமரசப் போக்கை கடைப்பிடிக்க வேண்டிய அளவுக்கு நிலைமையினை விபரீதமாக்கியுள்ளது.*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காட்சி மாறுகிறது... கருத்தும் மாறுகிறது...

> “ தனது கணவரைக் கொன்ற இரத்தக்கறை படிந்த கரங்களுடன் கைகுலுக்க வேண்டிய அவமானகரமான பரிதாபத்திற்குரிய ஒருவராக சந்திரிகா மாற்றங் கொண்டார். தன் சகோதரியின் கணவரை கொன்றவர்களுடன் அநுராவின் 'தோழமை' பிரிக்க முடியாததாகியது ”

பொது சன ஐக்கிய முன்னணியுடன் மக்கள் விடுதலை முன்னணியென்று கூறப்படும் ஜே. வி. பியினர் நிரந்தரமாகவே இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.


கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக, ஐ. தே. கட்சிக்கு எதிராகவும், சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும், புரிந்துணர்வுடன் ஒரு ஒட்டாத ஒட்டுறவைக் கொண்டிருந்த பொ. ஐ. முன்னணியும் ஒருவரை ஒருவர் விட்டு விலகி சுயாதீனமாக இயங்க முடியாத நிலை யொன்று உருவாகியுள்ளது.

இப்புதிய கூட்டுக்கு பொ. ஐ. முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களும், குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணி மூத்த தலைவர்களும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ள போதிலும், சந்திரிகாவின் உள்வட்டத்தினரும், நெருங்கிய சகாக்களான மங்கள சமரவீர போன்ற சிலரும் எல்லாவற்றிலும் மேலாக அக்கட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டனர்.

ஜே. வி. பி. இடது சாரிகளை அப்போதைய கம்யூனிஸ்ட் சமசமாஜ இடது சாரிகளும் இணைந்தே அழித்தனர்.

ஜே. ஆர் பதவிக்கு வந்ததும் ஜே.வி.பி யினர் விடுதலையாகினர். அரசியல் நீரோட்டத்தில் இணைவதாகக் கூறிக் கொண்டனர். ஆனால் 1987இல் இந்தியப்படையின் வருகையைத் தொடர்ந்து நிலைமை 'பழைய குருடி கதவைத் திறவடி ' என்ற கதையாகியது. ஜே. வி. பியினரின் இந்திய எதிர்ப்பு கோட்பாடு, அவர்களின் இயல்பான இலக்கற்ற வன்முறை வெறிக்கு தூபமாகியது. 1987-1990 வரையான காலப்பகுதியில் ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் அவர்களின் மனித உரிமைமீறல் பொழுதுபோக்கு குணாம்சத்தை வெளிப்படுத்தியது.

தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடியது. ஆறுகளில் பிணங்கள் மிதந்தன. வீதிகளில்



முடிக்குரியவராக கனவுகாணும் அநுரா பண்டாரநாயக்கவும், ஜே. வி. பியினரின் பொறிக்குள் சரியாகவே விழுந்துள்ளமையால் இந்தக் கூட்டு தவிர்க்க முடியாத ஒன்றாக உருவாகி வருகின்றது.

ஒரு காலத்தில் இதே ஜே. வி.பி. தான் 1960 களின் இறுதியில் சந்திரிகாவின் அம்மா சிறிமா ஆட்சிபீடம் ஏற உதவியது. ஏறிய ஏணியை மறந்து எட்டி உதைக்கும்தன்மை கொண்ட சிறிமா பதவியேற்ற பின் ஜே. வி. பி க்கு வழங்கிய வாக்குறுதிகளை மௌனமாக மறந்து அப்போதைய அவர்களின் இடது சாரித் தோழர்களான கம்யூனிஸ்ட் மற்றும் சமசமாஜக் கட்சியினரின் ஒரு புதிய சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்தார்.

ஏமாற்றமடைந்த ஜே. வி. பியினர் சிறிமா அம்மையாரின் அரசுக்கெதிராக 1971 ஏப்பிரலில் கிளர்ச்சியை மேற்கொண்டனர். அந்தக்கிளர்ச்சி நடவடிக்கை இந்திய இராணுவ உதவியுடன் மிகவும் காட்டுமிராட்டித்தனமான முறையில் ஒடுக்கப்பட்டது. 25000க்கு அதிகமான சிங்கள இளைஞர் யுவதிகள் ஈவிரக்கமற்ற முறையில் கொன்றழிக்கப்பட்டு வீதிகளில் எரிக்கப்பட்டனர். கங்கைகளில் வீசப்பட்டனர்.









www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துூரன்

குற்றுயிரும் குலை உயிருமாக மக்கள் 'டயர்' போட்டுக் கொழுத்தப்பட்டனர். மனிதனுள் இருக்கும் மிருகத்தனத்தை மிருகத்தை விடவும் பன்மடங்கு அதிகமாக அவர்கள் வெளிக்காட்டினர். தென்னிலங்கை மக்கள் அச்சத்தில் உறைந்திருந்த காலம் அது.

ஆனால் பிரேமதாஸ அவர்களைச் சரியாகவே குறிவைத்துத் தாக்கினார். ரோகண விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்க... எனப் பெரும்பாலான முக்கிய தலைவர்கள் அவர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் போலிப் புரட்சிவாதச் செயற்பாடுகளாலும் மக்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டனர்.

ஜே. வி. பி. வரலாற்றின் இரண்டாம் பாகமும் முடிவுக்கு வந்தது. இக்கால கட்டத்தில் இவர்களால் கொல்லப்பட்டவர்களுள் இன்றைய அவர்களின் தோழியான சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரணதுங்கவும் ஒருவர். இதே தோழி இவர்களை கொலை வெறியர்கள் என விரல் சுட்டி திட்டிய வரலாறும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1994 இல் சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் அரசியலில் தலையெடுக்க முயன்ற ஜே. வி. பி. பழைய இடது சாரிகள், தமது இடதுசாரித்தன்மையை இழந்து விட்ட நிலையில், அவர்களின் இடைவெளியை நிரப்ப முயன்றன. இடது சாரிகள் என சட்டையைப் போட்டுக்கொண்டு இனவாத அரிதாரத்தையும் பூச ஆரம்பித்தனர்.

போரின் ஆரம்ப வெற்றிகளால் இறுமாந்திருந்த சந்திரிகா தனது முதற்கட்ட ஆட்சிக்கால இறுதியில் கிடைத்த வரலாற்று புகழ் மிக்க தோல்விகளால் துவண்ட வேளையில், அரசியல் மூலோபாயங்களுடன் அவரது இரண்டாம் கட்ட ஆட்சிக்காலத்தில் ஜே. வி. பியினர் முண்டு கொடுக்க முன்வந்தனர். அவராலும் அதனைத் தவிர்க்க முடியவில்லை. ஜே. வி. பி. யினருக்கும் ஐ. தே. கட்சியை ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்ற நோக்கமே அப்போதைய இலக்காகவும் இருந்தது.



ஆனால் பொ.ஐ. முன்னணியின் தோல்வி தவிர்க்க முடியாததாகிவிட்டது. ரணிலின் பதவியேற்பும், சமாதான நகர்வுகளும் சிறீலங்காவின் இரட்டை ஆட்சியில் ஜே. வி. பி. யை பொ. ஐ. முன்னணியின் வாலைப் பிடித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

பொ.ஐ. முன்னணிக்கும் ஜே. வி. பியின் பக்கத்துணை ஓர் அவசியமுமாகியது. அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஜே. வி. பியை பயன்படுத்தும் சந்திரிகாவின் மூலோபாயம் பொ. ஐ. முன்னணிக்குள் ஊடுருவித் தன்னை வெகுசன மயப்படுத்தும் ஜே. வி. பியின் மூலோபாயத்துடன் முரண்படாமல் உடன்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

தனது கணவரைக் கொன்ற இரத்தக்கறை படிந்த கரங்களுடன் கைகுலுக்க வேண்டிய அவமானகரமான பரிதாபத்திற்குரிய ஒருவராக சந்திரிகா மாற்றங் கொண்டார். தன் சகோதரியின் கணவரை கொன்றவர்களுடன் அநுராவின் 'தோழமை' பிரிக்க முடியாததாகியது.

இப்போது இந்த 'தோழமை' உணர்வு ஜே. வி. பியை பொ. ஐ முன்னணியுடன் கூட்டுச் சேரவைத்துள்ளது.
இங்கேதான் வரலாறு திரும்பிப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்துள்ளது.

புதிய சிவப்புக்களின் நெருக்கமும், உறவும், பொ. ஐ. முன்னணிக்குள் தாயின் காலம் முதல் ஒட்டி உறவு பூண்டு வந்த பழைய சிவப்புக்களை விலகவும் பிரியவும் நிர்ப்பந்தித்துள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ் கட்சியும் சந்திரிகாவுடனான தமது அதிருப்தியை பகிரங்கமாகவே தெரிவிக்கத் தொடங்கிவிட்டன. அந்தக் கூட்டு தவிர்க்க முடியாத பிளவிற்குப் போய்க் கொண்டிருக்கிறது.

ஜே. வி. பி. யா? அல்லது கம்யூனிஸ்ட் சமசாமஜக் கட்சிகளா தேவை என்பதை சந்திரிகா தீர்மானிக்க வேண்டிய கட்டம் இதுவாகும்.

இதேவேளை சமசமாஜக் கட்சி சமாதான முயற்சிகளையும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் ஆதரிக்க முன்வந்துள்ளமையும் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவதாக அறிவித்துள்ளமையும் சந்திரிகாவுக்கு எதிரான பலமான தாக்குதல்கள் என்றே கூற வேண்டும்.

புதிய சிவப்புக்களின் நுழைவால் பழைய சிவப்புகள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள் போல் தெரிகிறது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மருதம்

# இராணுவத்தின் பாது
# மக்களின் பாதுகாப்பி



சமாதான மழை பத்து மாதமாகத் தொடர்ந்து பெய்கிறது. மழை என்னவோ தொடர்ந்துதான் பெய்கிறது. ஆனால் விதைக்கப்பட்டவைகள்தான் இன்னும் முளைத்து நாற்றாகவில்லை.

நாற்றேதும் முளைக்காததால் பெய்யும் மழை யாருக்கும் மகிழ்வூட்டவில்லை. சந்தேகச் சப்பிகள்தான் மெல்ல முளைவிடத் தொடங்கி விட்டன. வெள்ளம் பற்றிய அச்சம் மெல்லத் தலையெடுக்கிறது.

இடைக்கால நிர்வாகம் செயலணியாகி உபகுழுவாகியபோதும் கூட சமாதானம் புலிகளால் அதிக பொறுப்புணர்வோடும் சிரத்தையோடும் அமைதிக்கேயுரியதான அணுகுமுறையோடும் நிதானமாக முன்னெடுக்கப்படுகிறது. எனும் நிலையே உணரப்பட்டது.

ஆனால், காஞ்சிரங்குடா படுகொலை, திருமலைப் படுகொலை, தமிழீழத் தேசியத்தலைவர் மீதான சிறீலங்காவின் உயர்நீதிமன்றத்தீர்ப்பு, நெடுந்தீவில் கடற்படையின் பொலிஸ் பாதுகாப்புடன் ஈ. பி. டி. பி யினரின் தரையிறக்கமும் மக்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகமும் என இவையெல்லாம் நல்ல சமிக்ஞைகளாகத் தமிழர் தரப்புக்கு இருக்கவில்லை.

இத்தகைய நிலையிலும்கூட தாய்லாந்தில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் சுமூகமாக-குறிப்பாக புலிகள் தரப்பின் சகிப்புணர்வுடன் கூடிய அணுகுமுறை பேச்சை வெற்றிகரமாக நகர்த்தியிருந்தது.

ஆனால், இராணுவ உயர்பாதுகாப்பு வலய ஆராய்வுக்காக அமைக்கப்பட்ட உபகுழுகூட்டங்கள் இரண்டுமே அடுத்த கட்டத்திற்கான சிறுநகர்வைத்தானும் செய்ய முடியாது அதிருப்தியுடன் முடிவடைந்தன. எனவே அதன் முதல் முயற்சிகள் தோல்வியுடன் முடிவடைந்தன. என்று சொல்வதில் தவறேதும் இல்லை.

பத்து மாதச் சமாதானப் பாதையில் இயல்பு வாழ்க்கையே தமிழ்மக்களுக்குக் கண்ணுக்கெட்டிய தூரத்தில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ...காப்புச் சிந்தனை

# ...ன்மையே



தெரிவதாயில்லை. தெற்கில் இருந்து பலநூற்றுக்கணக்கில் நாள் தோறும் வடக்கு நோக்கி வரும் சிங்கள மக்களால் மன நெருக்குவாரமின்றி, அச்சுறுத்தல் எதுவுமின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாகப் பயணிக்கவும், தங்கவும் முடிகிறது.

இது பற்றி ஜேர்மன் 'ஸ்ரார்' தொலைக்காட்சியின் செய்தியாளர் வன்னி வந்தபோது கேட்டார் " இங்கு துப்பாக்கியுடன் திரியும் புலிகளையோ அல்லது துப்பாக்கி வைத்திருக்கும் காவல்துறையினரையோ காணமுடிவதில்லை. புலிகளின் இராணுவப் பிரிவையே தான் இங்கு கண்டிருக்கவில்லை. ஆனால் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியினூடாக நான் பயணிக்கும் போது அங்கு நிலைமை அவ்வாறிருக்கவில்லை" என ஆச்சரியம் கலந்த தொனியில் வினாவினார்.

போராடும் மக்கள் சமுதாயத்திலும் கூட புலிகள் அரசியல் நிர்வாக நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்து வைத்துள்ளார்களே தவிர இராணுவக் கலாச்சாரத்தை விதைத்து வைத்திருக்கவில்லை.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் நிலைமை வேறு. யாழ்ப்பாணத்தில் வீதியால் பயணிக்கும் ஒருவர் நிமிடத்திற்கு ஒரு இராணுவ வாகனத்தைக் கடக்க வேண்டியுள்ளது. ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் ஒரு காவலரணைக் கடக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு சந்தியிலும் ஒரு இராணுவ மினி முகாமைக் கடக்க வேண்டியுள்ளது. இயல்பாகச் சொன்னால் இராணுவத்தினரைச் சந்திக்காமல் கோவிலுக்கோ, பாடசாலைக்கோ, கடைக்கோ, சந்தைக்கோ, அலுவலகத்திற்கோ போகமுடிவதில்லை.

தம்மீது யுத்தம் புரிந்த, தம்மைப் படுகொலை செய்த, தம்மை ஆக்கிரமித்துள்ள, துப்பாக்கியுடன் தம்மைச் சோதனையிடும் ஓர் அந்நிய மொழியைப் பேசும் இராணுவப் பிரசன்னத்திற்குள் வாழும் தமிழ் மக்கள் எப்படி இயல்பான வாழ்வை அனுபவிப்பது. எப்படி சமாதானத்தின் மீது அவர்கள் நம்பிக்கை வைப்பது.

வெளிநாட்டிலிருந்து யாழ் சென்று வந்த ஒருவர் கூறினார் "எனது ஊரைப் பார்க்கும் ஆவலில் வந்தேன். எனது வீட்டை, எனது பாடசாலையை, எனது கோவிலை, எனது தோட்டத்தை எதையுமே பார்க்க முடியாமல் திரும்புகிறேன். என்னுடைய அவையெல்லாம் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களாம். சுவிற்சலாந்திலிருந்து என்னை அழைத்து வந்த சமாதானம் எனக்குக் காட்டியது இதைத்தான்" என்றார்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட உபகுழுக்கூட்டத்தின் முடிவில் கேணல். தீபன் பத்திரிகையாளர்களைச் சந்தித்போது ஒரு "வாரத்தின் முன்பே இன்றைய பேச்சில் கதைக்கப்பட வேண்டிய எமது சிபாரிசுகள் தொடர்பான விபரங்களைக் கொடுத்திருந்தோம். ஆயினும் படையதிகாரிகள் இவற்றிற்கு எந்தவிதச் சமாதான முடிவுகளோடும் வந்திருக்கவில்லை. அவர்கள் இதில் விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத மனநிலையோடுதான் வந்திருந்தார்கள்" எனக் கூறினார்.

அரசு தரப்பில் கலந்து கொண்ட குழுத் தலைவர் ஒஸ்ரின் பெர்னான்டோ "புலிகளின் சிபாரிசுகள் நியாயமானவை" என்றார். ஆனால் அதில் இணக்கங்காண அவர் தயாரில்லை.

மொத்தத்தில் இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற தனது பிரசன்னத்தைத் தளர்த்த தயாராக இல்லை. அவர்கள் அதற்கு எப்பொழுதும் தமது பாதுகாப்புப் பிரச்சினையை நியாயப்படுத்தி வருகிறார்கள். மக்களின் பிரச்சினைகள் நியாயமானாலும் கூட அவர்களுக்குத்தாம் ஆக்கிரமித்த பிரதேசத்தின் பாதுகாப்பே முக்கியமானதாயும், முதன்மையானதாகவும் இருக்கிறது.

ஆயின், அவர்கள் எப்பொழுதும் யுத்தத்தை நோக்கியே நிலையெடுக்கிறார்கள். யுத்தத்தை எதிர்கொள்ளவே சிந்திக்கிறார்கள். இராணுவம் சமாதானத்தை நோக்கி நிலையெடுத்து சமாதானத்தை எதிர்கொள்ளத் தயாராகாவிட்டால் அமைதிப் பேச்சுக்களிலிருந்து ஏதும் அர்த்தம் பிறந்து விடாது.



www.tamileelamarchive.com

முல்லைக் கமலின்
மனமும் மனத்தின்பாடலும்
எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து
சில கவிதைகள்

# பனையில் இருந்த உயிர் மூச்சு



காற்று வீசிய காலத்தில்
தலைநரைத்த பனையொன்றின்
பாடலைப் போலவும்
வெய்யில் விழுந்து அதிர்வடங்கிய நிலத்தில்
என் மனப்பாறை மோதிமோதி எழும்
நான் வருந்தியிருந்த
ஒற்றைத்துயர்ப் பொழுதில்
தோள் கனத்த மனது
புத்தியைத் தொலைத்த பாடகனாய்
நிறமிழந்த கீதத்தைப் புலம்பிப் புலம்பி அழும்.
உலர்ந்த வார்த்தைகளில் விம்முந்தான்.
கள்ளிமுளைக்காத பச்சை நிலத்தில்
சாக்குருவியின் துயரப் பாடலுக்கு
நிலம் வெளிறி பாலையடித்து
முள்ளுத்துளிர்த்த ஒரு வேளையில்
என் மனிதர்கள் புதைக்கப் பட்டார்கள்
காற்று வீசாத புழுக்கத்தில்
வெடித்துப் பொருக்கெழுந்த
நிலத்தின் இடுக்குகளில் - மரணவேர்வை
அடித்து அடித்து...
உலர்ந்த உயிர்மூச்சு அதிருந்தான்.
அதன் பச்சைப் பொழுதுகளை எண்ணி
கட்டிப்பிடித்துச் சுற்றம் அழும்
காற்று வீசாத அந்த வேளையில்
மெல்லியதாய்....
தலைநரைத்துப் போகும் பனை - அதன்
குரல்கேட்டுக் குரல் கேட்டு ஊர்க்குறையில்
சுடலைக்குருவி ஆடியாடி அழும் - அது
குருதிகக்கிய இன்னொரு வேளையில்
குருத்தொன்று சாயும்
'நிட்டூரம்' என நிலம் கூசிச்சிலிர்க்கும்
அதிர்வலையும் அப்பொழுதெல்லாம்
வட்டமுந்து வட்டமுந்து
உடல்விறைத்துப் போகும் பனை!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முல்லைக்கமல்

## ஒரு சிலுவை ஒரு சூரியன்

என்னிடம் ஒரு சிலுவை இருந்தது
துயரங்களால் அறையப்பட்ட
அந்த நாட்களில்...
நம்பிக்கையற்ற பறவைகளை
நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.
அவற்றின் சிறகுகளிலிருந்து புறப்பட்ட
காற்றின் கைகள்
வலிமையான ஒரு தேவதூதனை
என் நினைவுக்கு கொண்டு வந்தன.
அவற்றின் சிறகுகளின் ஒலியில்
ஒரு பரணியை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.
என்னிடம் ஒரு சிலுவை இருந்தது...
காற்றலைக்காத ஒரு வாழ்க்கையில்
ஒரு சூரியனைப் பரிசளிக்கவும்
நான் காத்துக் கொண்டிருந்தேன்.
ஒரு நாளில் அவர்களின்
துன்பங்கள் எல்லாம்
பஸ்மப்பட்ட ஒரு காலத்தில்
இரவுகள் சருகாகிப் போகவும்
அவர்களுக்கு- நான்
ஒரு சூரியனைப் பரிசளிப்பேன்
ஒரு சிலுவையை வைத்துக் கொண்டு
ஒரு சூரியனைப் பரிசளிப்பேன்.

## மின்மினிகளின் உலகில்

நீங்கள் ஒரு கவிதைச் சூரியனை
கனவு காணுகிறீர்கள்.
உங்கள் கனவுகளில்
சலவை செய்யப்படாத என்முகத்தை
நட்சத்திரங்களில் கண்டதாய் உரைத்தீர்கள்.
விட்டுவிட்டொளிரும் ஒரு மின்மினியை விடவும்
சுழற்சியில் உங்கள் கண்களுக்குள்
தேய்ந்து போன ஒரு நிலவை விடவும்
ஒரு கவிதைச் சூரியனை - நீங்கள்
கனவு காணுகிறீர்கள்.
மண்ணில் கிடந்தொளிரும் ஒரு கண்ணாடித்துண்டின்
சிறு வெளிச்சத்தையும்
சூரியனின் அடைவு என்பதை - நீங்கள்
ஏன் மறந்து போயினீர்கள்?...
வெளிச்சமொன்றின் ஒளியில்,
சூரியனைப்பற்றிய உங்கள் கனவுகளில்
மின்மினிகளின் சாதனைகளை - உங்கள்
மனவக்கிரச்சிதைகளில் வைத்து
தீயிட்ட உங்களில் - எங்களுக்கு
ஒரு நினைவுத் தூபியை
எதிர்பார்க்க முடியாதுதான்.
காலங்காலமாக மின்மினிகளின் பாடல்
இளர்த்திய ஒரு வாசத்தையும்
இருண்மைப் படுத்திய வனங்களின் கனவுகளை
புழுக்கள் அரித்த ஒரு நாளில்
மின்மினிகளின் பாடல் - எம்
தேசத்தின் பாடலாகும்.



## நோவெடுத்த மனக்குகை

காற்றள்ளித் தூற்றிய
தூசிப்படலத்தில் இம்மியொன்று
காற்றில் தாவி மண்ணில் விழுந்து அதிர்கிறது.
அணுவொன்றின் ஆர்ப்பாட்டமில்லாத வாழ்வு
இம்மிக்குள் இயல- அது
சூக்குமத்தில் வேரோடி
தூலமாய் விழுதெறிந்து
அசைய அசைய மெல்லியதாய்
வாழ்வு நடக்கிறது.....
கானல் விதைத்த உயிர்க்குலை சுமந்து
திரிந்து திரிந்து களைத்தன உடல்கள்
மனப்பால் வற்றி மூளைக்குளவி பறந்தது
வேட்டவாளிகளின் கூட்டுக்குள்
உருவழிந்து உருவழிந்து மாறி உடல்சுமந்த
நிழலானோம் நாம்....
எதன் நிழல்கள் நாமென
குரல் நீட்டிக் குரல் நீட்டி
மனக்குகை அதிர்கிறது.....
ஒன்றையொன்று கவர்ந்தபடி
காதல் முகிழ்கிறது
ஒன்றுக்குள்ளொன்று புகுந்து திளைக்க அணுச் சுவர்கள்
அதிர்கிறது
இன்னும் இன்னுமென வாழ்வு நடக்கிறது
ஒன்றை இன்னொன்று தள்ளி
உயிர் பிடுங்கிப் போகிறது
அணுக்குகை தகரத்தகர
நோவெடுத்த மனக்குகை அதிர்கிறது
ஒன்றையொன்று பிணைந்திறுகி
காதல் மூழ்கிறது
இன்னும் இன்னுமென.....
அணுவின் நிழலே நாமென்றபடி
தூலத்துள் வாழ்வு துளிர்க்க
சூக்குமத்தில் வேரோடி
இன்னும் இன்னுமென வாழ்வு நடக்கிறது-

## கடல்களற்ற வானத்தின் ஞாபகம்

உனக்கு அவர்கள்
(சிங்கத்தின் குழந்தைகள்)
இலையுதிர்த்த மரத்தை
பரிசளித்திருக்கக் கூடாது.
துயரடர்ந்த காலத்தின் பரிசாய்
பொழுதுகள் சாயவும்.
நிலவு விழுந்த வானத்தில் கண்ணீர் தெறிக்கவும்,
ஓவென்ற உனது பாடல்- இந்த
ஈழத்தின் கரையில் இன்னும் துடிக்கிறது - நீ
எப்போதும் சொல்லுவாய்
மயிர்க் கொட்டிகளுடன் எனக்கு (ச்)
சமரசம் இல்லையென்று- எனினும் அவர்கள்
இலையுதிர்த்த மரத்தை
உனக்குக் கொடுத்தனர்- நீ முன்பே
எதிர்த்திருக்கலாம்- அவர்கள்
உனக்குக் கோரைகள் முளைத்த
வெளிகளைச் சாட்டியிருப்பார்கள்- அல்லது
மஞ்சளும் வெள்ளையுமான
வண்ணத்துப்பூச்சிகளின் ஆற்றங்கரையாவது.

அப்போதே எனக்குத் தெரியும் - நீ
ஒருகாலத்தின் பெட்டகமென்று
(உன்சந்ததி)
முகில்களுக்குத் தெரியாது - எனினும் நீ
அவர்களுடைய வானத்தில்
உனது இறக்கைகளை உதிர்த்திருக்கத் தேவையில்லை
நட்சத்திரங்களுக்குக் கூட - நீ
இன்னொரு சூரியன் என்பதை
ஞாபகப்படுத்த முடியாது போயிருக்கும்.
இரவு!.....
ஒரு பெரிய பாவி
சபிக்கப்பட்ட ஒரு ஜென்மம்
உன்னைப் பற்றிய எந்தவொரு செய்தியும்
அதன் மனத்தை வருடியிராது.
உனது இறக்கைகளை - அது
எப்போதுமே ஞாபகப்படுத்தாது.

எனினும் அவர்கள் உனக்கு
இலையுதிர்த்த மரத்தை
பரிசளித்திருக்கக் கூடாதுதான்.
கடல்களற்ற வானத்தில்
நீலம் நிச்சயமற்றிருப்பது அவர்களுக்குத் தெரியாது.
எனக்குத் தெரியும் - நீ
இன்னொரு சூரியன் என்பது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யாழ்ப்பாணத்தின் ஆறாக்காயம்

நிலாந்தன்

முன்பு வந்ததகவல்களின் படி புனரமைக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகம் நேற்று முன்தினம் பொங்கல்தினத்தன்று திறக்கப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் பிந்திக்கிடைத்த தகவல்களின்படி திருத்தவேலை முடியாதபடியால் திறப்புவிழா பிந்தும் என்று கூறப்படுகின்றது.

இதில் சம்மந்தப்பட்ட சக்திகளுக்கடையிலான இழுபறியே திறப்புவிழா பிந்தக் காரணம் என்று கூறப்பட்டாலும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான திருத்தவேலைகள் மீதமிருப்பதால்தான் திறப்புவிழா பிந்துவதாக உரிய வட்டாரங்களிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

திறப்புவிழா பொங்கலன்று நடக்காவிட்டாலும் என்றைக்கோ ஒருநாள் அது நடக்கும்.

யாழ்ப்பாணத்தில் அது ஒரு பெருவிழாவாக அமையக்கூடும்.

சமாதான காலத்தில் அது யாழ்ப்பாணத்துக்கான ஒரு சிறப்புப் பரிசு என்று காட்டப்படலாம்.

சம்மந்தப்பட்ட அமைச்சருக்கு அது கொலரை உயர்த்தும் ஒரு விவகாரமாகலாம்.

சம்மந்தப்பட்ட அமைச்சர் ஏற்கனவே தனது சாதனைப் பட்டியலில் நூலகத்தைச் சேர்த்து விளம்பரமும் செய்து விட்டார்.

ஆனால் ஈழப்போரின் ஆறாக்காயம் ஒன்றை மூடி மறைக்கும் முயற்சி இது என்பதே மெய்நிலை.

அந்த ஆறாக்காயம் எப்படி ஒரு கீழ்தரமான அரசியலானாது என்பதை வாசகருக்குச் சுட்டிக்காட்டுவதும் என்றைக்கோ ஒரு நாள் திறப்புவிழா நடக்கும் போது இதில் சம்மந்தப்பட்ட சக்திகள் கட்டாயம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சில விசயங்களை முன்கூட்டியே சொல்லி வைப்பதும் தான் இன்று இப்பத்தியின் நோக்கம்.

தென்னாசியாவின் மிகச் சிறந்த நூலகம் என்று அதற்குப் பெயர்.

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் கார்னிவெல் நடாத்தியும் லொத்தர் குலுக்கியும் சிறுகச்சிறுகக் கட்டிய நூலகம் அது.

ஈழப்போரின் ஆரம்பகால அடைகாப்பு மையங்களாயிருந்த கிராமிய வாசகசாலைகளின் தாய்நிலையம்போல அது கட்டியெழுப்பப்பட்டது.

ஒரு பொதுசன வாசிப்புக்குரிய நூலகமாகவே அது அதிகம் காணப்பட்டது. புலமை சார் தேவைகளை ஈடுசெய்யதக்க உரிய வளர்ச்சிகளைப் பெற முன்பே அது எரிக்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது.

எரிக்கப்பட்டதிலிருந்து அதைச்சுற்றி ஒரு ஒளிவட்டம் உண்டாகியது. ஒரு ஐதீகம் வளரத் தொடங்கியது நூலகம் அரசியலாயானது.

அதை எரித்தவர்கள் அதை வெறுமனே உயிரற்ற ஒரு கட்டத்தொகுதியாக புத்தக இடுக்குகளாகப் பார்க்கவில்லை.

அதை அவர்கள் உயிருள்ள ஒரு ஜீவியாக, யாழ்ப்பாணத்தின் கல்விப்பாரம்பரியத்தின் உயிர் நிலையாகக் கருதியே எரித்தார்கள்.

நள்ளிரவில் கள்வர்களை போல வந்து எரித்து விட்டுப் போகுமளவுக்கு அது படித்த யாழ்ப்பாணத்தவரின் பொக்கிசமாயிருந்தது என்று அவர்கள் நம்பினார்கள்

கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சரும் யு.என்.பி. தலைவர்களில் ஒருவருமாகிய காமினி திசநாயக்க இதற்கான ஆணையை வழங்கியதோடு யாழ். சுபாஸ் ஹாட்டலின் மேல்மாடியில் நின்று அதைப்பார்த்து ரசித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. அப்பொழுது அவர் அணிந்திருந்தது ஒரு பற்றிக்ஸ் சறம் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகின்றது.

அந்த அடியோடு யாழ்ப்பாணம் மீள எழாதபடி வீழ்ந்துவிடும் என்றும் அதன் இதயம் அப்படியே கருகி சாம்பலாகிவிடும் என்றும் அவர்கள் கணக்குப் போட்டார்கள்.

ஆனால் எரிந்த நூல்களின் சாம்பலிருலிந்து ஒரு புதிய யாழ்ப்பாணம் எழுந்தது.

அது கொழும்புக்கு நெருப்புக்கொண்டு போனபோது அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.



அணுகுண்டுச் சாம்பலிலிருந்து யப்பானியர்கள் உயிர்த்தெழுந்தது போல, 'பீனிக்ஸ்' பறவை தனது சொந்தச்சாம்பலிருலிந்து புத்திளமையோடு எழுவது போல ஒரு வீரம் மிகுந்த யாழ்ப்பாணம் அதன் சாம்பலிலிருந்து சிலிர்த்துக் கொண்டு எழுந்தபோது தென்னிலங்கையில் அந்தப்புரங்கள் சிதறின. ஜெனரல்கள் நித்திரையில் புலம்பினார்கள்.



இப்பொழுது நூலகத்தை அவர்களே திருத்தித்தருமளவுக்கு நிலைமை மாறி விட்டது. இதன் மூலம் தமது பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேடுகிறார்களா? அல்லது அந்த ஆறாக்காயத்தை வெள்ளையடித்து மறைத்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விட முயல்கிறார்களா?

கடந்த வருடம் மானுடத்தின் தமிழ்க்கூடல் நடந்தபோது அதில் கலந்து கொண்ட இந்திய ஓவியர் மருது யுத்த அழிவுகளை இயன்றளவு அப்படியே பேணிப் பாதுகாக்கவேண்டும் என்று சொன்னார்.

புனரமைப்பு என்ற பெயரில் ஒரு பயங்கர மான காலகட்டத்தின் சான்றுப் பொருட்களை அழித்து விடக்கூடாது என்றுமவர் சொன் னார்.

ஆம். முன்பு எரிக்கப்பட்ட நூலகத்தை அப்படியே பேணியிருந்திருக்கவேண்டும். அது என்றென்றும் தமிழர்கள் பற்றிய சிங்கள வரின் மனோபாவத்தைக் கூறும் ரத்த சாட்சி போல நின்றிருந்திருக்கும். தமிழர்கள் ஏன்



செ வடி மருந்துகளாயானார்கள் என்ற செய்தியை அந்தச்சாம்பல் சதாகாலமும் கூறியபடியிருந் திருக்கும்.

ஆனாலதைப்பற்றி அப்பொழுது யாருமே சிந்தித்திருக்கவில்லலை.

1981ல் எரிக்கப்பட்ட நூலகம் 1984ல் புனர மைக்கப்பட்டு திறக்கப்படும்.

எந்த சனாதிபதி ஜெயவர்தன நூலகம் எரிக்கப்பட்டதற்காக குற்றஞ்சாட்டப்பட்டாரோ அவரிடமிருந்தும் ஒரு தொகைப் பணம் பெற்று நூலகம் புனரமைக்கப்பட்டது.

எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ( எஸ். பொ அந்தக் காசை BLOOD MONEY - ரத்தக்கறை படிந்த காசு - என்று கூறினார்.



“

வாயைக்கட்டி
வயிற்றைக்கட்டி சேமிக்கும்
யாழ்ப்பாணத்தவர்கள்
கார்ணிவெல் நடாத்தியும்
லோத்தர் குலுக்கியும்
சிறுகச்சிறுகக் கட்டிய
நூலகம் அது.

”

ஆனால் புனரமைக்கப்பட்ட நூலகம் நிமிருமுன்பே ஈழப்போர் வேகமெடுக்கத் தொடங்கி விட்டது.

யாழ்ப்பாணத்துக்கான சமர்களில் குறிப் பாக நகரத்துக்கான சமர்களில் சிக்கிப் பாழ டைந்தது போயிற்று நூலகம்.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதைப் புனரமைக்கப் போவதாக அதிகம் விளம்பரம் செய்தது.

யு.என்.பி க்கு எதிரான அரசியலில் நூல கத்தை உயர்த்திப்பிடித்த சந்திரிகா, சனாதி பதி நிதியத்திலிருந்து நூலகத்துக்காக ஒதுக் கிய தொகை ஆயிரம் ரூபாய் மட்டுமே என் பது அதிலுள்ள மிகவும் அருவருப்பான ஒரு விசயம்.

இது ஒன்றே போதும் நூலகம் எப்படி எல் லாம் அரசியலாகியதென்பதைக்காட்ட.

இப்பொழுது இன்னொரு ஜெயர்வத்தன அதை இரண்டாவது தடவையாகப் புனர மைத்திருக்கிறார்.

இம்முறையும் அது புனரமைக்கப்படு கையில் அதைத் தடுத்து நிறுத்தி அதை யொரு யுத்தகால நினைவுச் சின்னமாகப் பேணியிருக்க வேண்டும்.

சம்மந்தப்பட்ட எவருக்குமே அதை அப்ப டிப் பேண வேண்டும் என்று தோன்றாதது துர் லாபம். இப்பொழுது அந்த அழிவுகளை மூடி வெள்ளையடிக்கப்பட்டு விட்டது. இதில் யாழ் மாநகரசபை தனது பொறுப்புணர்ந்து தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொள்ளவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு.

ஆனால் சம்மந்தப்பட்ட அமைச்சர் இது விடயத்தில் மாநகரசபையை அதிகம் கலந்தா லோசிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

எதுவோ- நூலகம் அரசியலாகிவிட்டது. அதை ஒரு உயிருள்ள மியூசியமாகப் பேணத் தவறியதற்கு சம்மந்தப்பட்ட எல்லோருமே, படித்த தமிழர்கள், எல்லோருமெ பொறுப் பேற்க வேண்டும்.

சரி - இப்பொழுது எல்லாவற்றையும் மூடி வெள்ளையடித்தாயிற்று. இதன் மூலம் அவர் கள் பாவமன்னிப்புக் கேட்கிறார்கள் என்று ஒரு கதைக்காக வைத்துக் கொள்வோம்.

அவ்வாறாயின் இரு தடவைகள் புனர மைத்து வெள்ளையடித்ததால் மறைக்கப் பட்டு விட்ட செய்திகளைக் குறைந்த பட்சம் வேறொரு வழியில் கூறமுடியும்.

எப்படியென்றால் - நூலகத்தின் பெயரை தாவீது அடிகள் நினைவு நூலகம் என்று வைத்து விடலாம்.

நூலகம் எரிக்கப்பட்டதாம் என்ற செய்தி கேட்டு அந்த அதிர்ச்சியிலேயே உயிரை விட் டவர் அவர்.

தும்பளைத் தாவீது அடிகள் என்று அறி யப்பட்ட வணக்கத்துக்குரிய கலாநிதி டேவிற் (அல்லது தாவீது) யாழ். சென்பற்றிக்ஸ் கல் லூரியில் ஆசிரியராய் இருந்தவர். பன்மொ ழிப்புலவர்.

அவருடைய பெயரை நூலகத்துக்குச் சூட்டினால் அதில் அனேகமாக எல்லாச் செய் திகளும் கூறப்பட்டு விடும்.

அதை எரித்தவர்கள் அதை ஒரு நூலகம் என்று நினைத்து எரிக்கவில்லை.

அது யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரி யத்தின் இதயம் என்று நம்பித்தான் எரித்தார் கள்.

இப்பொழுது அதைப் புனரமைத்தவர் களும் அது ஒரு நூலகம் என்பதற்காக அதைச் செய்தார்கள் என்பதை விடவும் வசப்பட மறுக்கும் யாழ்ப்பாணத்தின் இதயத் தைக் கவரவும் உலகத்தின் அபிமானத்தைப் பெறவும் முயல்கிறார்கள் என்பதே சரி.

சமாதான காலத்தில் அதை ஒரு ஷோ கேஸ் ஆக மாற்ற சில அரசியல்வாதிகள் முயல்வது போலத் தெரிகிறது.

இந்த நூலக அரசியலில் உள்ள பயங்கரம் என்னவென்றால் முன்பு அதை எரித்தவர்கள் மனதில் என்ன இருந்ததோ அதுதான் இப் பொழுதும் அதைப் புனரமைத்தவர்கள் மன திலுமிருக்கிறது என்பதே.

முன்பு எரித்துச் சாதிக்க முடியாமற் போனதை இப்பொழுது புனரமைத்துச் சாதிக்க முயல்கிறார்களா?



www.tamileelamarchive.com



# உயர்பாதுகாப்பு வலயங்களும் அச்சப்படும் தமிழ்மக்களும்

சிறி இந்திரகுமார்

அரசு- புலிகளிற்கிடையிலான சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றப்பாதையின் ஒரு கட்டத்தில் தற்போது ஊடகப் போர் ஒன்று நடைபெற்று வருகின்றது.

இவ் ஊடகப் போரானது முத்தரப்பிற்கிடையில் நடைபெற்று வருகின்றது. இதன் விளைவு சமாதானம் தொடர்பாக அந்த நம்பிக்கை கொண்ட சிங்கள, தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகத்தினிடையேயும் ஒரு சிறு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்- குடாநாட்டில் சிறீலங்காப்படையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே இச் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் வேதனைக்குரிய விடயம் யாதெனில் யாழ்- மாவட்ட இராணுவத் தளபதியான சரத் பொன்சேகவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன் கூடிய நகலை நியாயப்படுத்துவது போன்று அமைந்துவிட்ட யுத்தநிறுத்த கண் காணிப்புக்குழுவின் அறிக்கையேயாகும்.

ஏனெனில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பணி வடக்கு கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு கண்காணிப்புக்குழுவினரால் விடுக்கப்பட்ட அவசரமான இரண்டு அறிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளன.

மட்டக்களப்பு காஞ்சிரங்குடா பகுதியில் சிறீலங்கா அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கையும் தமிழ் மக்களை பாதிக்கும் வகையிலானதாகவே அமைந்திருந்தது.

தற்போது விடுக்கப்பட்டுள்ள அறிக்கையும் தமிழ் மக்கள் சமாதானத்தின் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென நினைத்தார்களோ அதற்கு எதிரானதாகவேயுள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்களிற்கு தேவையானது நிதானத்துடன் கூடிய நியாயமான தீர்வுகளேயாகும். இவற்றின் மூலமே தமிழ் மக்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை கொள்ளக்கூடியதாக இருக்கும்.

உயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினையை மையமாகக்கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தமது சமாதானத்திற்கு எதிரான கோசங்களை வலுப்படுத்த தொடங்கியுள்ளதை அங்கிருந்து வரும் செய்திகள் தெளிவுபடுத்துகின்றன.

சனாதிபதியும் ஜே. வி. பியினரும் இணைந்து கலந்து பேசி இராணுவத்தினரையும் தூண்டி விடுகின்றனர்.

இதற்கு சனாதிபதி சந்திரிகா படைத்தரப்பினரை தனது ஊதுகுழலாக்கி பலமாகவே ஊதத் தொடகி விட்டார்.

இதன் வெளிப்படையாக சரத் பொன்சேகா பாதுகாப்பு வலயம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நகலிற்கும் தனக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையெனவும் அதனை இராணுவத் தளபதி பலகல்லவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுமே தயாரித்தனர் எனவும் தான் யாழ் மாவட்டத் தளபதி என்ற வகையில் அதனை ஒப்படைத்தேன் என்றும் கூறினார். பேச்சுவார்த்தையில் பாதுகாப்புத் தரப்பின் சார்பில் கலந்து கொண்டு வந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எது எப்படியாயினும் உயர் பாதுகாப்பு வலயமானது படைச் சமநிலையென்ற போர்வையில் மக்களின் மீள் குடியேற் றத்தை தடுப்பதற்கூடாக சமாதானத்தில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

இந்த விடயத்தோடு சம்மந்தப்பட்ட எல்லாத்தரப்பினரும் மக்களின் நலனை முக்கியமாகக் கொண்டே தீர்வுகளை எட்ட வேண்டும். அதுவே பொருத்தமாகவும் இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## தொலைந்த நாட்களும் உயிரை மாய்க்கிற சூரியனும்

என் கண்ணுக்குள் விரிகிறது
நீல வானம்
அதோ!
பொன்னிறமான தங்கக் குவளையில்
சூரியன் தேநீர் கொண்டு வருகிறான்

வெள்ளித் தாம்பாளத்தில்
சந்திரன்
மல்லிகைப் பூவும்
தேன் கலந்த பாலும் கொண்டு வருகிறான்

அட சூரியனே!
அட சந்திரனே!

எவ்வளவு பெருமையாக இருந்தேன்
எத்துணை மன மகிழ்ச்சியோடிருந்தேன்
எல்லாவற்றையும்
என் கண்ணுக்கு முன்னாலேயே
இழப்பேன் என்று
நான் நினைத்தேயிராத கணங்களில்
அவை நிகழ்ந்து போயிற்று
தாய் மண்ணின் கோடையை
அனுபவிக்காமலேயே
போக நேரிட்டுவிட்டது

வசைகள் நிறைந்த
என் வாழ்க்கை பற்றி
ஒளிர் நிறமான கண்களையுடைய
என் குழந்தைகளுக்குச் சொல்வதற்கான
வார்த்தைகளும் இன்றிப் போனேன்

நானோ எனக்குள்ளே
கண்ணுக்குத் தெரியாத
விலங்கணிகலன்களோடு
காதோர முடிகளில்
எனைப்போல அலையும் முகில்கள்
உரசிய வெண்மை பளிச்சிடுகிறது
என் நீல வானம்
என்னுள் வர்ணம் இழந்து போகுமா?



தா. பாலகணேசன்

## இயந்திரன்

வாழ்வின் நற்கனித் தோட்டத்திலிருந்து
துரத்தின நச்சுச் சாப்பங்கள்
நாம் இயந்திரராய்ப் பிறந்தோம்

இரும்பின் துண்டொன்றலா
எனை இறைவன் படைத்திருக்கக் கூடும்?
என் விலா எலும்புருவியா
இயந்திரனி பிறந்திருக்கக் கூடும்?
ஏதும் அறிகிலேன் பராபரமே!

பாம்பின் வாய்த் தவளை போலும்
இயந்திரப்பற்களிடை
சிக்குண்டோம் பார்!

இரும்புச் சங்கிலிகளால்
பிணையுண்ட எம்மை
இந்த வழி தோறும்
ஏதோ இழுத்துப்போகிறதே

இதென்னயிது?
இயந்திரப் பிறப்பெடுத்த
இந்த மனிதனையும்
சாப்பமா மோசம் செய்தது சர்வேசா?

எந்தப் பழத்தையும்
நாவூறச் சுவைக்க
நாதியில்லா நமக்கு
பூமிக் கனியின் சாறருந்திப்
பிழைக்க வழி எப்போது பிறக்கும்?

மனிதனுக்கு
காதலை அறிவித்தது சரி தான்
ஆனால்
மனிதனுக்குள்
இயந்திரனை எழுப்பியது மகா மோசமல்லவா?

வாழ்வின் நற்கனித் தோட்டங்களிலிருந்து
சர்வேசா
நாம் துரத்துண்டோம் பார்
சாப்பம் வெற்றி கொள்ளவென்றா?



www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்

## காலப் பெயர்வு

அறைச்சுவரில் நின்றாடுது காலம்
தொடக்கப் புள்ளியை உணரமுடியா
கோடுகளின் அசைவில்
பறக்கிறது ஓவியக்கனவு
தன்னை இங்கே இருத்திவிட்டுப்போன
அந்த ஓவியனின் உள்ளத்தைத் தொடும் ஆவலில்
என் துடிப்பு ஆவேசமாய் ஈர்ப்பாய்
கோடுகளில் வசமாயின.

நிற்கும் சுவரிலிருந்தும்
அசையும் கலண்டரிலிருந்தும்
பறந்துகொண்டிருக்கிறது அப்பறவை.

அதன் வாயில் தொங்குகிறது மனம்.
இனியும்
எங்கேனும் ஒரு புள்ளியில்
அசைவை நிகழ்த்துவான் அந்த ஓவியன்.



## ஒற்றை மயிரின் சரித்திரம்

நான் இறந்து போனதாக
என்றோ போய்ச் சொல்லுவார் ஒருவர்
நான் இறந்து போனேன் தான்
ஞாபகங்கள் சேரத்தொடங்கிய
அந்த நாட்களின் பிறகுநான்
வாழ்ந்ததாக ஞாபகமில்லை இன்னும்.
பிறகெல்லாம் துக்கப்படுவதும்
கொந்தழிப்பதும் சலிப்பதுவும்
மறந்துபோய்ப் புன்னகைத்துத் திடீரென்று
நாக்கறுபட்டு இறுகிக் கல்லாவதும்
இது நாள் வரையும் ஆகிவருகிறது.

பிணத்தைக் கண்டபின்னும்
பிணமாகிப் போனபின்னும் கூடத்
தீராமல் பொருமுகிறது நஞ்சுக்கொடி
நஞ்சுக் கொடிக்கு நீர் விட்டுக் கொண்டிருப்பது.
அற்றுப் போகும் நாளிலிருந்து
நான் வாழக் கூடும், பிறகு
நான் இருந்து, இறந்ததாகவும் யாரும்
சொல்லக்கூடும்.

கருணாகரன்

கருணாகரனின்
ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்
எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து
சில கவிதைகள்

## திசை வெளியில் துளிர்க்கின்றது மரம்

சூரியன் நெருப்பை ஊற்றட்டும்

வீட்டுக்கூரை தீப்பற்றாது
வானம் எரியாது
கடல் சிறுக்காது
காற்றுவெளியில் உயரும் பறவையின்
சிறகுகள் அனலில் தீயாது.

எனக்காக திசை வெளியில்
இலைகள் துளிர்க்கின்றன மரத்தில்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மரங்கள் நிறைந்த நினைவுகள்

மரங்கள் மகிழ்ந்த காலத்தை
நான் பார்த்திருக்கிறேன்.
பட்சிகளுடன் குதூகலிக்கும்
தலையெல்லாம் பூச்சூடி
ஒளி ததும்பி அசையும் அவை
காற்றில் அசைந்தபடி
தமக்குள் ரசித்தவாறு
நின்று மகிழும்.

குழந்தைத் துளிர்மை
குதூகலித்தொளிரும் பெண்ணின் மலர்ச்சி
தாய்மை ததும்பும் கனிவு
தாத்தாவின் கரமாய் விரியும் நிழலென
மரங்கள் நிற்கின்றன எப்போதும்

எல்லா ஞாபகங்களிலும்
பசுமையாய் நிறைந்தபடிக்கு
மலர்கின்ற மரங்கள்
நீயம் நானும் சந்தித்த போதுகளில்
நம்மருகில் இருந்த மரங்கள்
பள்ளிசெல்லும் வழியில்
பழங்களோடு நின்ற மரங்கள்
வீட்டில் நாமெல்லாம்
ஊஞ்சல் ஆடிய மரங்கள்
நீ, என்னை விட்டுச்சென்றபின்
உன் பெயரை
நான் செதுக்கிவைத்த மரங்கள்
வம்சத்துக்கெல்லாம் பழங்கள் தருமென்று
ஐயா நாட்டி வைத்த மரங்கள்
இரவெல்லாம் நான் தனித்திருக்கையில்
நிலவின் கீழ் உன்னை நினைத்திருக்கையில்
நிழல் ஓவியத்தை மலர்த்திய மரங்கள்
வெய்யில் தகிக்கும் போதுகளில்
தாத்தாவை
அருகில் அழைத்துப் பேசும் மரங்கள்
ஊரெல்லையில்
காவலாயும் சாட்சியாகவும் நிற்கும் மரங்கள்
யாரோ இருத்தி விட்டுப்போன
கடவுள்களுக்கெல்லாம்
துணையாயிருக்கும் மரங்கள்
தூக்கணாங் குருவிக்கூடுகளை வைத்திருந்தபடியே
கண்ணாமூச்சி விளையாடும் மரங்கள்
எல்லா வசையும் கேட்ட பின்னும்
எந்தக் கோபமுமின்றி
தெருக்கரையில் மௌனமாய் நிற்கும் மரங்கள்
எல்லா இலையும் உதிர்ந்த பின்னும்
மீண்டும்
துளிர்ப்பேன் என்ற நம்பிக்கையோடு
என்றும் நிற்கும் மரங்கள்
வானமும் எனது
பூமியும் எனது
வீசும் காற்றும் எனது
என்று எப்போதுமிருக்கும் மரங்கள்

பட்டபின்னும் மரங்கள்
வனத்தின் அழகையும்
நிழலின் குளுமையையும்
நினைவூட்டிக் கொண்டேயிருந்தன.





www.tamileelamarchive.com

# ஆரண்யக்கனவுகள்

தூறலாக சிதறிய மெல்லிய துளிகள் மிக நிதானமாக வலுவாகி மழை பெலக்கத் தொடங்கியது.

ஒதுங்க இடமில்லை

இனி நகர் வரும் வரையுள்ள ஏழுமைல் நீளத்திற்கும் வயல்வெளியும் காடுகளும் தான்.

வரும்போது மழைக்கான சூழல் இல்லாததால் குடையோ, மழை உடையோ கொண்டு வரவில்லை. நனைய வேண்டியது தான். கரியரில் இருந்த புத்தகப்பையை நனையாதபடி மறுபுறம் திருப்பி வைத்தேன்.

முதல் துளிகளுக்கு கூசிய உடல், நனைவதென்ற முடிவின் பின் இயல்பானது.

இப்போது கொஞ்ச நாட்களாகத்தான் பழக்கமாகத் தொடங்கியபாதை இது.

ஒன்றிரண்டாக கடக்கின்ற சைக்கிள்களும், வாகனங்களும்தான் வழித்துணை.

வார இறுதி நாட்களின் பயிற்சி வகுப்புக்களுக்காக 15 மைல் தூரமும் கிரவல் மண் புழுதியில் தோய்ந்தபடி போய் வர வேண்டும்.

மூச்சை அடைக்கச் செய்கின்ற புழுதி. உடலில் பட்டு எரிச்சல் தந்த காலங்கள் மாறி, விரைகின்ற வாகனங்களின் கீழிருந்து அலையாக நெளிந்து மேலெழுகின்ற புழுதியின் லாவகமும், நேர்த்தியும் ரசிக்க வைக்கிறது.

உடலில் படிகின்ற புழுதிகூட உடையோடு சேர்ந்த ஒன்றாகி கவனமற்றுப்போக காற்றில் அசைகின்ற புழுதியும், மூச்செடுத்துக் கடக்கின்ற பாதை ஏற்றங்களும் பயணங்களின் துணையாகிப் போனது.

இப்போது மழைக்கு புழுதி அடங்கியிருந்தது. இரு புறமும் அடர்ந்திருந்த மரங்களின் மீது அலை அலையாக நீரின் சிதறல்கள். எந்த மறுத்தலுமில்லாது கிளைக்கரங்கள் நீட்டி மழையை பூமிக்கு அழைத்தன மரங்கள்.

வானமே நீரலையாகி பூமிமேல் கவிந்திறங்குவது போல் தளம்பும் நீர்வெளியாக மழை அசைந்தசைந்து மண்ணுக்கு வந்தது.

அடர் நீலக்கருமையில் கண்ணெட்டும் எல்லைவரை பரந்திருந்த வனமரங்களின் மீது புகையிருளாக மழை மிதந்து கரைந்து, கலந்து கொண்டிருந்தது.

மழையும், மரங்களும், வெளிகளும் இணைகின்ற இந்த தருணங்கள் இயற்கை தன்னை, தன் குரலில் பாடுகின்ற கணங்களாகவே எனக்குள் தோன்றும்.

மனதின் மௌனத்தை பிளந்து, பிளந்து சூழலின் மௌனத்துள் மனம் விழுகின்ற பொழுதுகள் இவை.

என்றும் மறந்து போகாத நினைவுகளாக மனதோடும், காலத்தோடும் தொடர்கின்ற இவை வயது ஞாபகங்கள் வார்த்தைகளில் வனைந்தெடுக்கமுடியாது இயற்கையின் எழில்....

வாழ்வின் மீது மனம் வரைகின்ற கனவுகள்..... சாவெனும் இன்மை பற்றிய துயர்படியும் நினைவுகள் இழக்கமுடியாத கனவாகி நெஞ்சுக்குள் எழுகின்ற ஊரின் ஞாபகங்கள்.

எங்களுக்காக வேண்டிய இனிவரும் பொழுதுகள் பற்றிய நம்பிக்கைகள்.....

ஒவ்வொன்றாக மனதுள் விழுந்து விழுந்து மௌனம் பிளக்கும்.

மழையிருளும் அருவியாக வீழ்கின்ற மழைத்துளிகளின் பேரொலியும் இருபுறமும் விரிந்த அடர்மரங்களின் கனம் கொண்ட அமைதியும் மனதின் ஆழ்நினைவுகளைக் கிளறின.

என்றும் மறந்து போகாத ஞாபகங்களாக மனதோடும், காலத்தோடும் தொடர்ந்து தொடர்ந்து வருகின்ற இளவயதின் நினைவுகள்..

எப்பொழுதும் நினைக்கும் போதும் பேரெழில் கொண்டதெனும் எண்ணத்தில் மயங்க வைக்கும் எங்கள் கிராமம்.

வீதிகளையும் வயல்களையும் இருபக்கங்களிலும் சிறகுகளாகக் கொண்டிருந்தது எங்கள் வீடு.

மழையோ கோடையோ எங்கள் பொழுதுகள் பறப்பதில் பஞ்சமிராது.

வயல் வரப்புகளில் வெள்ளம் மோதுகின்ற மழைக் காலங்களில் அம்மாவின் கண்களில் மண்தூவி விட்டு கால்கள் புதைகின்ற வெள்ளத்துள் நடந்து நடந்து நனைந்தெழுவது நிறைவு தரும் விளையாட்டு.

தொடை வரை நனைகின்ற வயல் வெள்ளந்தான் அப்போது கடலும், நதியும் எங்களுக்கு.

வீரபத்திர கோயில் திருவெம்பாவை பூசைக்கு போய் வரும் போது கால் நனைகின்ற தண்ணீரில் தம்பி நீந்துவதாக கை, கால் அடித்து நனைவான். ஈர உடைகள் காட்டிக்கொடுக்க, அம்மாவிடம் அடி வாங்குவோம். கோடை காலத்தில் பட்டம் விடுவோம். வயல் முழுவதும் மஞ்சல் வெளியாக சணல் பூத்திருக்கும். காற்றுக்கு கிலு கிலுக்கும் சணல் செடிகளினுள் புகுந்து ஆள் மறைக்கும் விளையாட்டு நடக்கும்.

கிறிக்கெற், எல்லே, கிளித்தட்டு எல்லாம் எங்கள் வீட்டு முற்றத்தில் தூள் பறத்தும்.

பின்வளவு நறுவிலில் ஏறுவதும், வேப்ப மர ஊஞ்சலுக்கு சண்டையிட்டு அம்மாவிடம் வாங்கிக்கட்டுவதும் கூட எப்போதும் சலித்ததில்லை.

அப்பாவின் கண்டிப்பிற்கும் அம்மாவின் கவனிப்பிற்கும் இடையில் எங்களுக்கென மலர்ந்த மகிழ்வு சிந்தும் வாழ்வொன்று இருந்தது அங்கே.

அம்மன் கோயில் திருவிழாவின் இரவு நிகழ்ச்சிக்கென இரவிரவாக விழித்திருந்து அப்பாவுடன் போவோம். இரவுக்கும், பகலுக்கும் வேறுபாடில்லாத காலம்.

அம்மன் வெளிவீதி சுற்றி வடக்கு வீதிக்கு வரும் போது விடியும். தைமாதக்குளிர்த்தி. பிள்ளையார் கோயில்களின் திருவிழாக்கள், அரசடி வைரவர் வீரபத்திரர் பொங்கல்கள் என ஊர் சேர்வதற்கென்று விழாக்கள் இருக்கும்.

அந்த வாழ்வின் அழகோ சொந்த நிலத்தில் இருந்தெழும் வாழ்வில் உள்ள நிம்மதியின் நிறைவோ புரியாது எங்கள் நாட்கள் கழிந்தன.

கையிலிருந்த அந்த அழகிய வாழ்வின் பெறுமதி உணராது அதனுள் புதைந்தி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஆரண்யக்கனவுகள்

## பிரதீபகுமரன்

ருந்தோம். நிர்ப்பந்தங்களோ கனவுகளோ இல்லாத காலம் அது இதுவே இயல்பென மனங்கள் நம்பிக் கிடந்தன.

அர்த்தமும் அழகும் கொண்ட அந்த நாட்களின் பெறுமதியுணர்த்த என நாட்கள் வந்தன.

**▌சூரியகதிர்-1**

95 ஒக்ரோபரின் மழை நாளொன்றில் ஊர் பிரிந்த போது விழிகளை கனக்கச் செய்கின்ற கனவின் தவிப்பொன்று மனதுள் சிறகசைக்கத் தொடங்கியது. பத்து மணிநேரம் நடந்து நாவற்குழிப்பாலம் கடந்து வந்த பின்பும் நடப்பதெதையும் நம்பமுடியவில்லை.

சேறு படிந்து கலைந்த உடைகளும், கை நிறைந்த சுமைகளும் உண்மையைச் சொல்லின. எங்கே போவதென்ற விடையற்ற கேள்வி கொண்டவர்களாக வீதியெங்கும் மக்கள்.

உறவுகளோ நட்புகளோ இல்லாத மனிதர்களாக அலைகின்ற அவர்களின் துயரங்களைக் கடந்து தென்மராட்சியிலுள்ள அம்மாவின் உறவுகளிடம் வந்தோம்.

கை நீட்டிய உறவுகளின் அரவணைப்பு ஆறுதல் தந்தது ஆனால் மனம் ஆறவில்லை. வேர்பொருந்தி, விழுதிறங்கி மகிழ்ந்திருந்த எங்கள் ஊரின் மீளலுக்கான நாள் நோக்கி மனம் ஏங்கியது.

விழிகளைக் கனக்கச் செய்கின்ற கனவின் தவிப்பொன்று மனதுள் சிறகசைக்கத் தொடங்கியது.

எப்போது? எப்போது? நெஞ்சுள்ளிருந்த கனவின் சிறகுள் அசைந்து, அசைந்து, கேள்விகளாக எழுந்தன. முன்பெல்லாம் விடுமுறைகளிற்கு இங்கு வருவதென்றால் மகிழ்வின் உச்சத்தில் மனம் துள்ளும். விடுமுறை வருகின்ற நாட்களுக்காகக் காத்திருப்போம். சித்திகளுக்கும், மாமாக்களுக்கும் சொல்வதற்கென்று சேகரித்த கதைகளில் நெஞ்சு விரியும்.

போனதிலிருந்து அவர்களின் முன்னும் பின்னும் திரிந்து, திரிந்து கதைகளைச் சொல்லி முடிப்பபோம்.

அம்மாவின் வீடு தென்னைகளும், மாமரங்களும் நிறைந்த பெரிய வளவிலிருந்தது. மாமரத்தில் சித்தி ஊஞ்சல் கட்டித்தர உயர்ந்தெழுந்து ஆடி ஆடி அந்த மணல் மண்ணில் விழுந்தெழும்புவோம்.

மதியங்களில் சின்னமாமாவை அரித்தெடுத்து இளநீர் பிடுங்குவிப்போம். வடிவாகச் சீவித்தருகின்ற இளநீரை உடைகளை நனைத்து நனைத்துக்குடிப்போம்.

எந்த மாதங்களில் போனாலும் வைக்கோலில் மூடிப்பழுக்க வைத்த மாம்பழம் இருக்கும். அநேகமாக காலைகளில் மாம்பழமும், புட்டும்தான் சாப்பாடு.

இப்போதும்கூட மாமரங்களில் மாரிக்காய் காய்த்திருந்தது. பிடுங்கிப்பழுக்க வைக்க வேண்டுமென்ற எண்ணமே வரவில்லை.

அணில் கோதிய பழங்கள் தரையில் விழுந்து கிடந்தன.

சிறுப்பிட்டியிலிருந்து வந்திருந்த சித்தியின் உறவுகளாலும் எங்களோடு வந்திருந்த

கோடையில் பாலைப்பழமும், மாரியில் சோளனும் மாறிவரும் பருவங்களை எங்களுக்குச்சொல்லின.

வளர்ந்து மறைகின்ற ஒவ்வொரு வருடமும் மனதில் கனவின் சுமையை ஏற்றின. மனதுள் நிறைந்துள்ள கனவு சிறகசைக்க வனத்தோடான எங்களின் உறவு வளரத் தொடங்கியது.

ஊர் மீள்கின்ற நினைவு

எழும்பொழுதுகளில் எல்லாம் ஆழவேரோடிய அந்த முதிர் மரங்களின் அமைதியும் உறுதியும் பயணங்களிற்கு அம் மரங்களே பலமும் துணையும் என்பதாக மனம் உணரும்.

இப்போதும் அவ்வாறே நெஞ்சுள் நினைவெழுந்தது.

இருகரையும் விரிந்து உயர்ந்திருந்த மரங்களின் மீது எம் நெஞ்சுள்ளிருக்கும்

கனவு கரைந்து படர்ந்தது போல பனிப்புகை அடர்ந்திருந்தது.

நகர் நெருங்கி வந்திருந்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆரண்யக்கனர்



அப்பாவின் உறவுகளாலும் வீடு நிறைந்திருந்தது.

நிறையச் சிறியவர்கள். எங்கள் சின்ன வயதின் நினைவுகள் போல மாமரங்களை சுற்றி ஓடித் திரிவார்கள்.

வீதிகளில் இறங்கினால் அநேகமாக தெரிந்த முகங்கள் தென்படும்.

மிக விரைவில் ஊருக்குப் போகலாமா? என்ற கேள்வியையே, சந்திக்கும் ஒவ்வொரு முகங்களும் மனங்களும் மாறி மாறிக் கேட்கும்.

ஊரிலிருந்தபோது பெரிதாகப் பழகியிராதவர்களும், இங்கே நேயமும், நெருக்கமும் கொண்டவர்களாகினர்.

ஒவ்வொரு மனிதர்களும் ஊரின் மறக்க முடியாத நினைவுகள் போல தோன்றினர். அந்த முகங்களில் எங்களூரின் எண்ணங்களும் வாழ்வும் படிந்திருப்பது போல் அவர்களின் புன்னகைகள் மனதை வசீகரிக்கும். அவர்களோடு பேசுகின்ற பொழுதுகள் ஊர் மீண்ட நிறைவொன்றை மனதுள் வளர்க்கும்.

ஒதுங்க சின்ன இடம் கூட நிரந்தரமாக கிடையாது நாளுக்கு ஒரு இடமாக அலைபவர்கள், கிடைத்த இடத்திலும் துன்பப்படுவார்கள் என ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள்.

அவர்களின் கதைகளைக்கேட்கும் போது- உதவ முடியாத தவிப்பில் மனம் கனக்கும். ஒற்றை அறை அல்ல, சாய்ந்து கொள்ள ஒரு சுவர் கிடைப்பதே கஸ்ரமான நிலை.

நாங்களிருக்கும் வீடோ ஆறு குடும்பங்களுடன் திணறிக்கொண்டிருந்தது.

நெருக்கமான நட்புகளிற்கும், தெரிந்தவர்களிற்கும் கூட எதுவும் செய்யமுடியவில்லை. இப்போதும் கூட அந்தத் துயரின் வடு மனதிலுள்ளது.

சொந்த ஊர், சொந்த வீடு அதன் நிறைவு ஒவ்வொரு மனதிலும் மறையாத கனவாக வளர்ந்து கொண்டிருதது.

மீள மகத்துவமான அந்த வாழ்வை நாம் அடைவதற்கான காலமும் தூரமும் எங்கள் கரங்களின் பிடியிலிருந்து விரியத் தொடங்கியது.

**சூரியகதிர்-2**

தென்மராட்சியுள்ளும் ராணுவம் புகத் தொடங்க உறவுகளைப்பிரிந்து நெஞ்சுள் அசைகின்ற கனவைச் சுமந்து, அதன் கேள்விக்கான விடைதேடி, கடல் கடந்து வன்னி வந்தோம். கிளிநொச்சி வளமும், வசதியும் நிறைந்திருந்த இடம். திருவையாற்றில் வீடு போட்டு, புதிதான வாழ்வொன்றுள் எங்களைப் பொருத்த முனைந்தோம்.

கனகாம்பிகையம்மன் டிப்போச்சந்தி- கோவிந்தன் கடையடி கிளிநொச்சி மெல்ல மெல்லப் புரியத்தொடங்கியது.

வன்னி என்பது அடர்வனம் என்ற எங்கள் மனத்திலிருந்த எண்ணம் மெல்லக்கலைந்தது. காணிக்கைகளில் நிற்கும் ஒன்றிரண்டு முதிர் பாலை, முதிரைகள் தவிர கிளிநொச்சிக்கு காடு வெகு தூரத்திலிருந்தது.

காடு பார்க்கவேண்டும் என்ற என் ஆசை உடனடியாக நிறைவேறவில்லை.

ஆனாலும் ஏனோ கிளிநொச்சி பிடித்துப் போனது கிளிநொச்சிக் குளமும் கனிஸ்ட வித்தியாலயத்தை சூழ நிற்கும் பெருமரங்களும் பதிந்த நினைவாகிப் போனது. ஆயிரக்கணக்கில் வௌவால்கள் தொங்குகின்ற அந்த மரங்களின் பிரமாண்டம் வியக்க வைத்தது. மூன்று மாதமாகவில்லை.

**'சத்ஜெய'**

அந்த மூன்று மாத காலத்துள் ஏறிய அந்த மண் பாசத்தில் அந்தப் பிரிவிலும் கண்ணீர் வந்தது. அல்லி பூத்து நிறைந்த கிளிநொச்சிக்குளமும், சாணி மெழுகிய எங்கள் புது வீட்டு அறைகளின் நேர்த்தியும், திருவையாறின் அகன்ற மண் வீதிகளும் இந்த இடப்பெயர்வின் வேதனை நினைவுகளாயின.

சபிக்கப்பட்ட எங்கள் வாழ்வின் திசையை மாற்ற காலத்தின் கனவைச் சுமந்து வனங்கள் நோக்கி நடந்தோம்.

கைநீட்டி அழைக்க உறவுகளில்லாத இடங்களிலெல்லாம் வனம் உறவானது.

பெருமரங்கள் வீடுகளாயின.

ஒவ்வொரு இடமாக நின்று அந்த ஊருக்கு வந்தோம். சிறிய ஒரு காட்டுக் கிராமம். தண்ணீருக்குக் குறைவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் கட்டுக் கிணறிருந்தது. நல்ல தண்ணீர். மிக அமைதியான சூழல்.

ஊரின் அருகிருந்த பிள்ளையார் கோவில் பெருமரத்தின் கீழ் எங்கள் அடுப்புக்கள் புகையத் தொடங்கின.

வரிசையாக பதினொரு அடுப்புக்கள்.

எங்களுக்கு ஐம்பது மீற்றரில் வீதி, மறுபுறம் குளம்.

கோடைக்கு குளம் வற்றியிருந்தது.

குளத்தினுள் இறங்கி, அடர்ந்த மருமரங்களை தாண்டி நடக்க காடு வரும்.

கோயிலின் பின்புறம், வயல்வெளியின் மறுபுறத்திலும் காடிருந்தது. விறகிற்குப் பஞ்சமில்லை. பெரிய பெரிய காய்ந்த தடிகளாக இழுத்து வருவோம். அது ஒரு பொழுது போக்கு.

பெரிய கட்டைகளை அடுப்பில் புகைய வைத்து விட்டு பார்த்துக்கொண்டிருப்போம்.

எப்படித் திசைமாறிற்று எங்கள் வாழ்வென்று எண்ணியபடி அது பிரதான வீதி என்பதால் மாறி மாறி வாகனங்களும், சைக்கிள்களும் எங்களைக் கடக்கும்.

சமைத்தபடி, சாப்பிட்டபடி, கதைத்தபடி நாங்களிருக்க தெரு தன்பாட்டில் இயங்கும்.

எப்போதும் குறையாத மனிதர்களின் நடமாட்டம் தென்பு தரும்.

போர் வாழ்வு புரியத் தொடங்கியது.

கனவுகளுக்கான காத்திருக்கும் வாழ்விலும் அழகும், உயிர்ப்பும் உள்ளதென்ற உணர்வு வந்தது.

அந்தக் காடுகளின் கரைகளில் எங்களுக்கான ஒரு பொருள் கொண்ட வாழ்வை தேடத் தொடங்கினோம்.

திரும்பவும் கொட்டில் போட்டோம்.

மண்ணெடுத்து சுவர்வைத்து வீடாக்கினோம்.

இந்த ஊரின் அமைவும், சூழலும் பிடித்திருந்தது. காட்டுப் பிள்ளையார் கோயில் பால் பொங்கலில் எங்களூர் அம்மனின் குளிர்த்திச் சோறின் சுவை தெரிந்தது.

மாரியில் ஆறு ஓடிய மணல் வழிகளின் ஊடாக கோடையில் பாலைப்பழம் தேடி நடக்கும் பொழுதுகளில் காட்டின் அமைதியின் அழகு புரிந்தது.

பயமூட்டும் நிசப்தத்தில் காடு உறைந்திருக்கும் என்ற இத்தனை நாள் அதன் வெளித் தோற்றம் தந்த எண்ணம் கலைந்தது.

வருடங்கள் தன் வாழ்வு பற்றி மௌனமாகக் காடு பாடிக்கொண்டிருப்பதாக கிளைகளின் அசைவுகள் சொல்லும்.

எங்கள் மனங்களின் கனவின் மொழி காட்டின் மொழியாகவும் ஆனதென அந்தப் பொழுதுகள் சொல்லி மறைந்தன.

கோடையில் பாலைப்பழமும், மாரியில் சோளனும் மாறிவரும் பருவங்களை எங்களுக்குச்சொல்லின.

வளர்ந்து மறைகின்ற ஒவ்வொரு வருடமும் மனதில் கனவின் சுமையை ஏற்றின.

மனதுள் நிறைந்துள்ள கனவு சிறகசைக்க வனத்தோடான எங்களின் உறவு வளரத் தொடங்கியது.

ஊர் மீள்கின்ற நினைவு எழும்பொழுதுகளில் எல்லாம் ஆழவேரோடிய அந்த முதிர் மரங்களின் அமைதியும் உறுதியும் பயணங்களிற்கு அம் மரங்களே பலமும் துணையும் என்பதாக மனம் உணரும்.

இப்போதும் அவ்வாறே நெஞ்சுள் நினைவெழுந்தது.

இருகரையும் விரிந்து உயர்ந்திருந்த மரங்களின் மீது எம் நெஞ்சுள்ளிருக்கும் கனவு கரைந்து படர்ந்தது போல பனிப்புகை அடர்ந்திருந்தது.

நகர் நெருங்கி வந்திருந்தது.

மழை ஓய்ந்த பின்னும் துளிகள் சிந்துகின்ற மரங்களின் பின்னிருந்து நகருள் என் சைக்கிள் புகத்தொடங்கியது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குறுங்கதைகள்

பு ந த பரிமகள்



# புயலாகி

காய்ந்து கலடுபத்திக் கிடக்கும் அந்த வயல் வெளியில், கால் வைத்ததும் அவனுக்கு நீண்ட பெருமூச்சுத்தான் வந்தது.

வயல் மண்ணை அள்ளி எடுத்து முத்தமிட்டான். அவனது உள்ளத்தில் இருந்த சுமை சற்றுக் குறைந்து காணப்பட்டது.
அவன் நெக்கிப் போனான்.

எத்தனை ஆண்டுகள் அவன் இந்த மண்ணை விட்டுப் பிரிந்து.... கண்களில் இருந்து நீர் பொல பொலத்தது.

அவனை வாழ வைத்த அந்த மண்ணின் காற்றைச் சுவாசிக்க அவன் மட்டும் தானே இருக்கிறான்.

அவனது மனைவி பிள்ளைகள்....!
அவன் வாய்விட்டு ஓ! என்று அலறினான்.

'ஏய் என்ன அழுகிறாய்'

இரும்புத் தொப்பிக்காரன் அவனை நோக்கி வந்தான்.
'நீ...நீ... இன்னும் இஞ்சதான் இருக்கிறாயா?'
அவன் இரும்புத் தொப்பிக்காரனை ஏற இறங்கப்பார்த்தான்.
கண்கள் அனல் உமிழ்ந்தன.
'கவலைப்படாதே இந்தா குடி. உங்களுக்கு எல்லாம் நாங்கள் தாறது' அவன் போத்தலை நீட்டினான்.
'என்ரை பிள்ளையளின்ரை... என்ரை மனைவியின்ரை உயிரைத் தருமா இவைகள்? வார்த்தைகள் அனலாய் மாறின.
தொப்பிக்காரன் ஏளனமாய் சிரித்தான்.
' நீ இந்த மண்ணில் இருக்கிற வரையும் நான் ஓய மாட்டன். உன்னிடம் கையேந்தி வாழமாட்டன்.' இது உறுதி'
அவன் ஒரு பிடி மண்ணை உயரத் தூக்கியபடி புயலாகப் போய்க்கொண்டிருந்தான். தொப்பிக்காரன் விழி பிதிங்கி நின்றான்

# நான் உனக்காகவே

நடுச்சாமம் நுளம்பின் தொல்லை அதிகமாகியது அவன் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். தூக்கம் கலைந்திருந்தது. ஏதோ நினைத்தவனாய் போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்திருந்தான், கண்களைக் கசக்கிக் கொண்டான். திரி கருகி ஒளி மங்கிய நிலையில் எரிந்துகொண்டிருந்த மேசை விளக்கைத் தூண்டினான். அறை எங்கும் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிந்தது. சிறிது நேரந்தான் அது மீண்டும் மங்கத் தொடங்கியது.


கருகிக் கிடந்த நாடாவின் மேற்பகுதியை வெட்டித் தள்ளினான். மீண்டும் தூண்டினான் சிறிது நேரம் பிரகாசமாய் இருந்தது. மீண்டும் அவன் கத்தரிக்கோலை எடுத்து வெட்ட ஆயத்தமானான்.

நாடா வேதனையுடன் கேட்டது.
"தம்பி இந்த வீட்டில் இருளைப்போக்க விடிய விடிய எரிகிறேன். என்னை வெட்டலாமா?"

அவனுக்கு ஆத்திரம் வந்தது.
"ஒழுங்காய் எரிந்தால் நான் ஏன் வெட்டிறன்" என்றான்.
"என்னை நீ வெட்டி வெட்டி அழித்துவிட்டாய். எண்ணெய் உறிஞ்சும் அளவு இருந்த நான் குறைந்து போனேன்" என்றது திரிநாடா.
"அப்படியா"

அவன் நாடாவைக் கழற்றி நெருப்பை மூட்டிவிட்டு எறிந்தான். நாடா பிரகாசமாக எரிந்தது.
உனக்காகவே எரிந்து நான் சாம்பலாகிறேன்.
"பாவத்துக்கு உழுகிற பண்ணியை பல்லுக்கு இதமாய் பார்க்கிறாய்"
சாம்பல் காற்றோடு கரைந்து போனது





# வீழ்ந்தாலும் முளையாவோம்

அந்த வேப்பமரம் விசாலித்து குடைபோல விரிந்தது, பூக்களும், காய்களும் கனிகளாகத் தொங்கிக் கொண்டு இருப்பது பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

வேப்ப மரக்கிளை ஒன்றில் காகம் கூடு கட்டி முட்டையிட்டு அடை காத்துக் கொண்டிருந்தது.

காகத்திற்கு வேப்பம்பழத்தில் பிரியம் அதிகம்.

காலையானதும் பழுத்திருக்கும் பழங்களைக் கொத்தித் தின்றுவிட்டுப் பறந்து செல்லும்.

ஒரு நாள் வேப்பமரம்,
'காகமே உனக்கு நான் தங்க இடமும், உணவும் தருவதால் நான் பயந்தவன் என்றா நினைக்கிறாய் என்று கேட்டது.
' உங்களால் என்ன செய்யமுடியும்? உங்களை அழிப்பேன்'
என்றது காகம்.

' அதுதான் முடியாது. நீ காய்களாகப், பிஞ்சுகளாக அடித்துக்கொட்டலாம், ஆனால் உன் உடலில் புகுந்து, விதையாக வெளியே வரும்போது எங்கள் மண்ணில் மீண்டும் முளை கொள்வோம்' என்றது வேப்பம்மரம்.
காகம் சற்று யோசனையில் ஆழ்ந்தது.
'சரிதான்'
விதையாக வீழ்வது மீண்டும் முளை கொள்ளும்,
காகம் எங்கோ பறந்து சென்றது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின்
பத்தாம் ஆண்டு நினைவாக...



# கிட்டண்ணா...



கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

கிட்டண்ணாவும் அவரது தோழர்களும் வீரகாவியமாகி ஒரு தசாப்தம் தன்னை நிறை செய்கின்றது. தலைவர் அவர்களின் தம்பியாய், தமிழீழ தேசத்தின் முதுபெரும் தளபதியாய் மக்களின் தோழனாய் வாழ்ந்து அனைவரது இதயங்களிலும் நிலைத்து விட்ட கிட்டு எனும் மனிதத்தின் எண்ண ஓட்டங்களுக்கு ஈடு கொடுப்பது கடினம். கடமை நேரங்களில் அவரிடம் நிறைந்திருக்கும் கண்டிப்பு அவரது வீரத்தைப் போலவே பிரசித்தமானது. இது அனைவரும் அறிந்த ஒன்று. கடமைதவிர்ந்த நேரங்களில் அவரிடமுள்ள கனிவான இதயம் எல்லோராலும் அறியப்படாத மற்றொன்று. எழுத்துக்களினால் வடிவம் கொடுக்க முடியாதது. அதனை நேரில் தரிசித்து உள்ளங்களால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டியது.

"புரட்சிக்காரர்கள்" என்பதால் உலகம் அவனை கடினமானவனாகவே எண்ணுகின்றது. ஆனால் அவன் மனிதனுக்குள் மென்மையானவன், சாதுவானவன் ஆதலால்தான் அவன் சமூகத்தில் நிலவும் அநீதியை தாங்க முடியாதவனாகப் போராடப்புறப்படுகிறான்.

எனும் அவரது நாட்குறிப்புத் தாங்கிய வரிகள் வாயிலாக அவரது மனதின் மென்மையின் ஆழத்தினைத் தரிசிக்க முயலலாம்.

நாம் ஏராளமான மரணங்களை கண்டுவிட்டோம். தோழர்களின் வீரமரணம் எம்மை பாதிக்காது, வீரமரணம் எமக்கு பரிச்சயமானது சாவை சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்று தான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணம் இதயத்தை உருக்குலைத்து உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்"

எனும் தன் தோழனின் மரணம் குறித்த மனக்குமுறலினை அவரது நாட்குறிப்பு தாங்கியிருந்தது. இத்தகைய மனவுணர்வுகளை உள்ளடக்கிய ஒரு மனிதத்தை தமிழீழ தேசம் இழந்து போனது என்பது ஜீரணிக்க முடியாத உண்மைதான். கிட்டண்ணாவின் முழுமையை அவரது பரிபூரணத்தினை இங்கு முழுவடிமாகக் கொண்டு வரமுடியாது என்பது யதார்த்தமானது. எனினும் அவரது நினைவுகள் தழுவியஇந் நாட்களில் அவரின் ஓரிரு பக்கங்களை இங்கு மீட்டுகின்றோம்.



www.tamileelamarchive.com



கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளில் பங்கேற்கும் தேசியத் தலைவரும் தளபதிகளும்

## நன்றியுணர்வு

இந்திய தமிழீழப்போர் ஆரம்பித்த நாட்கள் கிட்டண்ணா இந்தியாவில் தங்கியிருந்து குண்டுத்தாக்குதலில் இழந்த தன் காலுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார்.

அவர் குடியிருந்த வீட்டினுள் எப்படியோ ஒரு சொறி பிடித்த நாய் ஒன்று நுழைந்து கொண்டது. கிட்டண்ணாவுடன் உதவிக்கு நின்றிருந்த போராளிகள் அவர் ஏசிவிடுவார் என்ற நினைப்பில் அந்த நாயினைத் துரத்த முற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அவரும் அதனைக்கண்டு கொண்டார். உடனே அந்த நாயினை கூட்டிவரச் சொன்னார். குளிப்பாட்டினார், அதன் உடல் மீது காணப்பட்ட புண்களுக்கு மருந்திட்டார். விரைவில் புண்கள் மாற்றமடைந்து அந்த நாய் குணமாகியது.

இப்போது அது கிட்டண்ணாவின் உற்ற நண்பன். அவர் உணவருந்தும் போதும், நீராடும் போதும், தூங்கும் போதும், அத்தனையும், அவரை ஒத்ததாகவேயிருக்கும். அது அவருக்கான காத்திருப்பாகவும் விளங்கும். நாளடைவில் இருவருக்குமான நட்பு பலமடைந்து சென்றது. இருவரும் நல்ல நண்பர்களாயினர். காலங்கள் கழிந்தன.

1988 தமிழீழ இந்தியப் போர் தீவிரம் அடைந்த வேளை கிட்டண்ணாவினை கைது செய்து சிறையினுள் தள்ளிவிட எண்ணியது இந்திய அரசு. இது தமது ஆக்கிரமிப்பு போருக்கு பக்கத்துணையாகவிருக்கும் என்றும் நம்பியது.

கைதும் நிகழ்ந்தது. சென்னையிலுள்ள சிறைச்சாலைக்கு கிட்டண்ணா கொண்டு செல்லப்பட்டார்.

இப்படியான துர்அதிஸ்டமான நிகழ்வினை அது நினைத்துக் கூடப்பார்த்திருக்காது. அவரின் பிரிவித்துயரினை தாங்கமுடியாது சோகத்துடன் அங்குமிங்கும் ஓடித்திரிந்தது. கிட்டண்ணாவைத் தேடியது. உணவு உண்ண மறுத்தது. கிட்டண்ணாவின் பாவனையிலிருந்த இடங்களெல்லாம் மோர்ந்து மோர்ந்து பார்த்தது. பலனேதுமில்லை. இறுதியில் சோகத்துடன் ஒரு மூலையில் ஒதுங்கி அவ் விடத்திலேயே தனது வாழ்வினை முடித்துக்கொண்டது. சிறைக்குள்ளிருந்து சேதியறிந்த கிட்டண்ணா அதிர்ந்து போனார். பிற்காலத்தில் அவர் மேற்குலகில் வாழ்ந்த நாட்களில் அழகான விதம் விதமான நாய்களைக்காணும் போதெல்லாம் அந்த நாயின் முகம் அவரது மனக்கண் முன் தோன்றி அவரின் இதயத்தை ஈரமாக்கும். அந்த இதயத்தின் ஈரம் அவரது கண்களில் வந்து நிற்கும்.



www.tamileelamarchive.com



பாரத மாதாவின் புண்ணியத்தினால் கிட்டண்ணா நாடு நாடாக அலைந்து கொண்டிருந்தார். அவர் தலைமறைவாக பல நாடுகளில் வாழ்ந்த காலம் அது. அந்தநாட்கள் சோகமானது, சுமையானது, அவரது எண்ண ஓட்டங்களுக்கேற்ப அவரால் இயங்க முடியாது போயிருந்த நாட்கள் அவை.

பரந்து விரிந்த அந்த பெரும் தெரு. அதனை பனித்துகழ்கள் மறைத்துக் கொண்டிருந்தது. பார்ப்பதற்கு மனதுக்கு ரம்மியமாகவிருந்தாலும் ரசிப்பதற்கு கிட்டண்ணாவின் மனது ஒத்தியங்கவில்லை. அவரது நினைவுகள் தாயகம் நோக்கி விரிந்து கொண்டிருந்தது. மண்ணை நினைத்து நினைத்து அவர் மனது ஏங்கிக் கொண்டிருந்தது.
அந்தப் பெரும் தெருவினை அவரது பாதங்கள் கடந்து கொண்டிருக்கின்றது. ஒரு வயோதிபர் வாழ்க்கைப்பயணத்தில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்த ஒரு மனிதராக இருக்க வேண்டும். ஆனால் இப்போது அவரிடம் நாளை பற்றிய நம்பிக்கைகள் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை. இனியும் இருக்கும் என்று நம்பவும் முடியவில்லை.

இப்போது அந்த மனிதர் கிட்டண்ணா முன்னிலையில். அவர்களிடை வார்த்தைகள் ஏதும் பேசிக்கொண்டதாக அறியவில்லை. அவர்களது பார்வைகளும் உள்ளுணர்வுகளும் மட்டுமே பேசியிருக்க வேண்டும். சிறிது நேரம் கழிந்த நிலையில் குட்டியாக ஒரு உரையாடல். கிட்டண்ணா தன்னிடமிருந்த சிறுதொகைப் பணத்தினை அவருக்கு உதவினார். பார்வைகளால் நன்றி பகர்ந்த வயோதிபர் அவ்விடத்திலிருந்து நகர்ந்து கொண்டிருந்தார். வயோதிபர் கிட்டண்ணாவின் கண்களிலிருந்து இப்போது மறைந்து கொண்டிருந்தார்.

திடீரென நினைவுக்கு வந்தவர் தன் கூட வந்த தோழர்களை நோக்கித் திரும்பிய போது அவருடைய முகம் சோகத்தினுள் புதைத்து விழிகள் நீர் சொரிந்திருந்தன. கலங்கிய விழிகளுடன் அருகிருந்த தோழர்களுக்கு அவர் தளதளத்த குரலில் கூறிய வார்த்தைகள்....
"உலகில் ஏழைகள் என்று யாரும் இருக்கக்கூடாது" போராட்ட வாழ்வில் மட்டுமல்லாது பொதுவாழ்விலும் தனது மனதை அன்பினால் நிரப்பி தூய்மையைப் பேணி வாழ்ந்தவர் கிட்டண்ணா. ஏழை மக்களது வாழ்வில் அக்கறை கொள்ளும் பண்பும் எப்போதுமே அவரிடம் நிலைத்திருந்தது. ஏழை மக்களது வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறை எழுத்துக்களினால் வடிவம் கொடுக்க முடியாத ஒன்று. அவரது டயறி குறிப்புக்களில் அதிகமான பக்கங்களில் ஏழைகள் வாழ்வே இடம் பிடித்திருந்தது என்பது எல்லோருக்கும் தெரியாத ஒன்று.

அவரது இந்தக் கனிவான மன இயல்பே அவரது இறுதிக் காலங்களை ஆன்மீகம் நோக்கி நகர்த்தியிருக்க வேண்டும் என எண்ணுகின்றேன். இந்த ஈடுபாடுதான் ஆன்மீகத்துக்கும் புரட்சிக்குமிடையிலான உடன்பாடுகளை அவரை பரிசோதனைகள் மேற்கொள்ளும் அளவுக்கு உயர்த்தியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் தன் இறுதிக்கால நாட்களில் தன் துணைவியாருக்கு எழுதிய மடல் ஒன்றில்
விறகு கொத்தும் கந்தனும்
கள் வடிக்கும் பூதனும்
கோவணத்துடன் தோட்டம் கொத்தும்
இராமையாவும்
கரைவலை இழுக்கும் கோபுவும்.
தனது வாழ்நாளிலும் சரி வயது போனகாலங்களிலும் சரி மற்றவர்களில் தங்கி வாழ்ந்ததையும் பிச்சை எடுத்து செத்ததையும் பார்த்திருக்கின்றேன். இவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டும். இதைத்தான் ஆன்மீகமும் சொல்கிறது. புரட்சியும் சொல்கிறது. ஆன்மீகம் போதிக்கின்றது. புரட்சி வழிகாட்டுகின்றது. ஆன்மீகமும் புரட்சியும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்று தான் என தனது மனதின் முடிவினை அதில் வரைந்திருந்தார். மக்கள் படும் இன்னல்களில் பங்கெடுக்க வேண்டும் அவர்களுக்கு ஒரு அமைதியான கௌரவமான வாழ்வு கிட்டவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவரது சமாதானப்பயணம் ஆரம்பமாகியது. ஆனால்...!

கிட்டண்ணாவும் அவரது தோழர்களும் வீரகாவியமாகி ஒரு தசாப்பதம் நிறைவுறும் இந் நாட்களில் மீண்டும் எமது தாயகத்தில் ஒரு சமாதானச் சுடர் ஏற்றப்பட்டுள்ளது. இந்தச் சமாதானச் சுடரும் எம்மை சுட்டெரித்து விடாதபடி அவர்களது நினைவுகள் எம்மை வழிகாட்டிச் செல்லட்டும்.

## இராஜதந்திரம்

சூரியனைக் காணாது கடிகார முட்களின் நகர்வுகளால் மட்டுமே புதிதான பொழுதில் பிரசவிப்பு நிகழும் காலம் அது. கடும் குளிருடன் இணைந்த பனிகூட தாயகம் நோக்கி துரத்தும் சூழல். இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பம். பல்வேறு வல்லரசுகளின் அழுத்தங்களின் மத்தியிலும் பம்பரமாய் கிட்டண்ணா சுழன்றடித்த பொழுதுகள் இலகுவில் மறக்கக் கூடியவையல்ல. ஒரு நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையிலான குறுகிய நேரத்தூக்கத்தோடு வல்லரசுகளின் அழுத்தங்களை ஓயாது எதிர் கொண்டு சர்வதேச அரசியல் பொறுப்பாளராக கிட்டண்ணா பிரித்தானியாவில் இயங்கிய காலமது.

கிட்டண்ணா இந்தியா சென்ற போது அவரைப்பார்க்க ராஜீவ் காந்தியின் கறுப்புப் பூனைகள் எப்படி முண்டியடித்தனரோ? அதுபோலவே சர்வதேச அரசியல் பொறுப்பளாராக பிரித்தானியாவில் இயங்கிய காலத்திலும் சர்வதேச பத்திரிகையாளரும் முண்டியடித்தனர். எமது போராட்டத்துடன் நன்கு பரிச்சயமான பத்திரிகையாளர் ஒருவர் கிட்டண்ணாவினை செவ்வி கண்டு கொண்டிருந்தார். பத்திரிகையாளர் தனது தற்திறமையினை வெளிக்காட்ட எண்ணியிருக்கலாம். அல்லது கிட்டண்ணாவை ஒரு தர்மசங்கட நிலைக்குத் தள்ளிவிட நினைத்திருக்கலாம். இதில் எதுவோ திடீரென ஒரு கேள்வியினைத் தூக்கிப்போட்டார்.

"நீங்கள் போராட்டம், புரட்சித் தமிழீழம் என்றெல்லாம் கூறுகிறீர்கள், நீங்கள் கூறும் தமிழீழம் எப்படியானது. எப்படியான எல்லைகளை வரையறுத்தது. இலங்கைத்தீவில் எப்படியான ஒரு வடிவத்தினைக் கொண்டுள்ளது" என வினாவி தனது தந்திரமான கேள்வியினை நிறைவு செய்தார்.

கிட்டண்ணா கேள்வியின் உள்ளகத்தினை நன்குணர்ந்து கொண்டார். எமது போராட்டத்துடன் பரிச்சயமான ஒருவர் இவ்வளவு நாட்கள் நகர்ந்த நிலையில் இப்போது வந்து தமிழீழ எல்லைகள் பற்றிக் கேட்கும் வினாவில் புதைந்துள்ள சூழ்ச்சியினை உணர்ந்து கொண்டவராக பத்திரிகையாளரை சாதுவாக நோக்கினார்.

"கிட்டுவினை எப்படியோ மாட்டி விட்டேன்" என்ற இறுமாப்புடன் பத்திரிகையாளரும் அவர் முன்னிருந்தார். கிட்டண்ணா மெல்ல புன்னகைத்தார். பதிலுக்குத் தயாரானார். "இலங்கைத்தீவின் வரைபடம் ஒன்றை எடுங்கள். வரைபடத்தில் கடந்த 15 வருடங்களாக சிறீலங்கா இராணுவம் எங்கு கொலைகளை புரிகின்றதோ" குண்டுகளைப், போடுகின்றதோ அந்த இடத்தினைப் பொயின்ற் பண்ணுங்கள். அதன் பிற்பாடு பாருங்கள் தமிழீழத்தின் எல்லையினை தாங்களாகவே தெரிந்து கொள்வீர்கள்"
பத்திரிகையாளர் குளிக்கப் போய் சேறு பூசிய கதையாக அப்படியே அசந்து போனார். அடுத்த கேள்விக்கான தொடங்கு நிலையினை எட்ட முடியாதவராக சங்கடப்பட்டார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## கறுப்பு நங்கையின் கண்ணீர்

மிகமிகத் துயரமான கண்ணீர்
ஒரு கறுப்பு நங்கையின் கண்ணீர்தான்.
ஏனெனில்
அவளை அழவைப்பது சுலபமல்ல.
அவள் மகனை அவளிடமிருந்து
எடுத்துச்செல்.
அவனை போதைப்பழக்கத்துக்கு ஆளாக்கு.
வயலில் அவனை உழைக்கவை.
கொரியாவில் அவனைக் கொன்றுபோடு.
ஒரு பி. எச். டி. பட்டத்துடன்
ஓட்டலில் உணவு பரிமாறச் செய்.
அவள் உதிர்ப்பாள் ஒரு புன்னகை தனக்கே உரித்தான
கசப்புப் புன்னகையை
கேடயமாகப் பயன்படும்
தன் கறுப்பு முகமூடியின் ஊடாக
அவள் உதிர்ப்பாள்.
கண்ணீர் பெருகும்
உள்ளுக்குள்
இரத்தச் சிவப்பாக.
அவள் கணவனை
அவளிடமிருந்து பிரித்துவை.
சமையல் அறையிலேயே
சாக வை.

பெரிய கடன் ஒன்றை உண்டாக்கி
ஆயிரம் நாளில் அதை
திருப்பிக் கொடுக்கச் செய்.
அவள் கொடுப்பாள்.
தண்டனை ஒன்று கொடுத்து
ஆயிரம் இரவுகளை கழிக்கவை.
அவள் கழிப்பாள்.
ஆயினும்
வெள்ளையனே

நீ அவளிடமிருந்து
கண்ணீரை மட்டும் பெறமுடியாது
ஏனெனில்
அவள்
துயரங்களின் அரசி.

## தற்கொலை பற்றிச் சிந்திக்கும் கறுப்புக் கவிஞர்களுக்கு

கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும். இரும்புப் பாலங்களின்
மீதிருந்து
(வெள்ளைப் பையன்களைப் போல)
குதிக்கக்கூடாது.

கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும். இரயில்
தண்டவாளங்களில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
கழுத்தை வைக்கக் கூடாது.

கறுப்புக் கவிஞர்கள் தேடத்தான் வேண்டும்.
ஆனால் இருண்ட குகைகளில் அதிகம்
தேட வேண்டியதில்லை.
அல்லது அடிமனச் சுவடுகளில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
உள்ளான் குருவிகளை
வேட்டையாட வேண்டியதில்லை.
ஏனெனில்
கறுப்புக் கவிஞர்கள்
கறுப்பு மக்களுக்குச் சொந்தமானவர்கள்.
கறுப்புக் காதலர்களின்
புல்லாங்குழல்கள்.

கறுப்புச் சோகம் இசைக்கும் இசைக்கருவிகள்.
கறுப்பு வீரர்களின்
எக்காளக் குழல்கள்.

எல்லா கறுப்புக் கவிஞர்களும்
இசைக்கருவிகளாகவே மடியட்டும். மடிந்து
அணிவகுத்துச் செல்பவர்களின்
காலடிப் புழுதியில்
புதைக்கப்படட்டும்.

(அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம் தொகுப்பும்,
மொழிபெயர்ப்பும்)

**இந்திரன்.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எல்லாளனை ஆக்கிரமிப்பாளனாகச் சித்தரிக்கும் மகாவம்சம்

இலங்கையிலே தொல்லியல், மானிடவியல், சமூகவியல் என்னும் துறைகள் விருத்தியடையாத நிலையில் மகாவம்சம், சூழவம்சம் முதலான பாளி நூல்கள் கூறும் வரலாறே இலங்கையின் வரலாறு என நம்பப்பட்டது. மகாவிகாரையில் இருந்து பௌத்த மதத்தைப் போதித்த மகாநாமதேரரின் முக்கிய நோக்கங்களை இனங்கண்டு கொண்டால் மகாவம்சம் நடுநிலையில் நின்று இலங்கை வரலாற்றைத் தரும் நூலாகாது என்பது தெளிவாகும். அவர் நூலை இயற்றியதன் நோக்கத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



1. தேரவாத பௌத்தத்திற் தொண்டாற்றிய சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறுவது.

2. சிங்கள மன்னர்களும் மக்களும் இலங்கை நாட்டினர். தமிழ் மக்கள் வந்தேறு குடிகள். தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்து அநுராதபுர அரசைப் பிடித்து ஆண்ட ஆக்கிரமிப்பாளர்கள் என வலியுறுத்தல்.

3. சிங்கள மக்களின் மூதாதையர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்கள் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து வந்த திராவிடர்கள்.

4. தமிழர்கள், சிங்களவர்களுக்கும், பௌத்த மதத்திற்கும் எதிரானவர்கள் தமிழர்களின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க வேண்டும்

இவற்றை மையமாக வைத்தே மகாநாமதேரர் மகாவம்சத்தை இயற்றினார். கிறிஸ்துவுக்கு முன் 3ஆம் நூற்றாண்டிலிருந்து அநுராதபுரத்தைத் தலைநகராக ஆட்சி புரிந்த மன்னர்களின் வரலாறே இலங்கையின் வரலாறு என்னும் தொனியிலேயே பாளி இலக்கியங்கள் வரலாற்றைப் படைத்துள்ளன. வரலாற்றில் சங்ககாலம் (கி.மு. 3- கி. பி- 3) என அழைக்கப்படும் காலப்பகுதியில் தென்னிந்தியாவில் பல குறுநில அரசுகள் நிலவியது போலவே இலங்கையில் பல சிற்றரசுகளும். குறுநிலத்தலைவர்களும் ஆட்சிபுரிந்ததைப் பிராமிக்கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

குளநீர்ப்பாசனத்தின் பயன்பாடு, இரும்பின் உபயோகம், தொழில்நுட்ப அறிவு அயல்நாட்டுத் தொடர்பு என்பன இலங்கையின் நகரமயமாக்கலுக்கும், அரசதோற்றத்திற்கும் காரணமாயின. இலங்கையில் அநுராதபுரம் மகாகமை, மாதோட்டம், பூநகரி, கந்தரோடை முதலான இடங்கள் நகரமயமாக்கலுக்கு உட்பட்டன. நகரமயமாக்கலுடன் அரசுருவாக்கம் ஏற்பட்டது. இதற்கு கி. மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கப்பெறும் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இவற்றிலிருந்து இலங்கையில் 260 இற்கு மேற்பட்ட சிற்றரசுகள் இருந்தன. மகாவம்சத்தின் முதன்மை அரசனாகச் சித்தரிக்கப்படும் துட்டகாமினி எல்லாளனுடன் அநுராதபுரத்தில் போர் தொடுப்பதற்கு முன்பு 32 தமிழ்ச் சிற்றரசர்களுடன் போராடி வெற்றியீட்டியதாக மகாவம்சம் கூறுகின்றது. அப்படியிருந்தும் மகாநாம தேரர் இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இருந்த சிற்றரசுகளைக் கணக்கில் எடுக்காமல் மகாவம்சத்தை எழுதியிருந்தார்.

கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும் அநுராதபுரத்தை மாறிமாறி ஆட்சி புரிந்தனர். அரசியல் வரலாற்றில் முதல் இருநூறு ஆண்டு காலம் இவ்வரசை ஆண்ட 22 மன்னர்களும் 10 பேர் தமிழ் மன்னர்கள். இத்தமிழ் மன்னர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் அநுராதபுரத்தில் அரசோச்சியுள்ளனர்.

இவர்களில் சேன, குத்தக, எல்லாளன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர் சேன, குத்தக என்போரைக் குதிரை வியாபாரியின் பிள்ளைகள் என்றும் எல்லாளன் சோழ உயர் குடியில் பிறந்தவன் என்றும் மகாவம்சம் கூறுகிறது. சோழ இராச்சியத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் படைவீரன்தான் எல்லாளன் என மொறீன் செனவிரத்தின கூறுகின்றார். (A Tamil warior from chola kingdom of south India, Elara by name, crossed over his army drove out Asela and established himself as king of the Rajarata- Maureen Seneviratne, -Some women of the Mahavamsa )

சேன, குத்தக என்னும் இருவர் அநுராதபுர அரசனான சூரத்தீசனை வென்று 22 ஆண்டுகள் (கி. மு. 177- கி. மு. 155) நீதி தவறாது ஆட்சி புரிந்தனர் என்று மகாவம்சம் கூறுகின்றது. அசேலன் என்னும் சிங்கள மன்னன் இவர்களைத் தோற்கடித்து அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். மீண்டும் ஒரு படையெடுப்பு எல்லாளனால் மேற்கொள்ளப்பட்டது. எல்லாளன் அசேலனைத் தோற்கடித்து அநுராதபுர அரசைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் (கி. மு. 145- கி. மு. 101 நீதி தவறாது ஆட்சி செய்தான். இவனின் நீதி தவறாத ஆட்சிபற்றிய பல கதைகள் (மனுநீதி கண்ட சோழன் கதையில் இடம் பெறுபவையை ஒத்தவை) மகாவம்சத்தில் கூறப்படுகின்றன. இவனது நீதி தவறாத ஆட்சி, பௌத்த மதத்துக்குக் கொடுத்த பேராதரவு இன, மத, பேதம் காட்டாத கருணையுள்ளம் அனைத்து மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றுக் கொடுத்தன. இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னன் என்ற பெருமை இவனுக்குரியது.

சேன, குத்தக, எல்லாளன் என்போர் அரச வம்சத்தைச் சேராதவர்கள் என மகாவம்சம் கூறும் அதேவேளையில் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து சிங்கள அரசைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளர் என வலியுறுத்துகின்றது.

இவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாயின் இலங்கையில் 66 ஆண்டுகள் அரசோச்சிய இவர்களைப் பற்றிய இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் இருந்திருக்கும். சங்க இலக்கியங்களோ கல்வெட்டுக்களோ தமிழகத்தில் இவர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. சேன, குத்தக என்னும் பெயர்கள் தென்னிந்திய கல்வெட்டுக்களில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் சமகாலத்தில் இலங்கையில் இருந்த கி. மு. 3ஆம் 2ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

சங்க காலத்தில் தமிழக எல்லையைத் தாண்டி அயல்நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்லுமளவிற்கு அரசுருவாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. மாறாக இனக்குழு நிலையி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர்களின் ஆட்சியும் சேர, சோழ, பாண்டியச் சிற்றரசுகளின் ஆட்சியுமே காணப்பட்டன. இதனையொத்த நிலையே இலங்கையிலும் காணப்பட்டது. இதனைப் பாளி இலக்கியங்களும் கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் முற்பட்ட பிரமிக்கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

அரச வம்சத்தைச் சாராத குதிரை வணிகரின் மக்கள் தமிழகத்தில் படைதிரட்டி இலங்கை மீது படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினர் என்று கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. இது போலவே தமிழகத்தில் சிற்றரசனாகக் கூட இருக்காத எல்லாளன் படை திரட்டி இலங்கையரசை ஆக்கிரமித்தான் என நம்பமுடியவில்லை.

அநுராபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களாக, படையெடுப்பார்களாக அவ்வப்போது ஆட்சியைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளராகவும் மகாவம்சம் சித்தரிக்கிறது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்ததற்கும் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததற்கும் கல்வெட்டுச் சான்றுகள்.

இவற்றை நோக்குமிடத்து, சேன, குத்தக, எல்லாளன் என்போரை தமிழ்நாட்டுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

வட இலங்கையில் பல சிற்றரசுகள் இருந்ததை ஏற்கனவே நோக்கினோம். சேன, குத்தக, எல்லாளன் என்போரை வட இலங்கையில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் எனக் கருதலாம். இவர்கள் தமது அளப்பரிய ஆற்றலால் பெரும்படை திரட்டி அநுராதபுரத்தைக் கைப்பற்றியிருக்கலாம். இவர்களின் மூதாதையர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கலாம். அப்படிப் பார்த்தால் சிங்கள அரசர்களின் மூதாதையர்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள்தான். நிலைமை இப்படி இருக்கும் போது சிங்கள அரசர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் வேற்று நாட்டவர்கள் என்றும் கொள்வதை எவ்வகையிலும் ஏற்றுகொள்ள முடியாது.

போரில் எல்லாளன் இறந்ததும் அவ்விடத்தில் நினைவுச் சின்னம் நிறுவி அவ்விடத்தால் செல்லும் வாகனங்களும் மக்களும் இறந்த மன்னனுக்கு மரியாதை செலுத்துமாறு துட்டகாமினி கட்டளை இட்டான். இதனை நோக்கும் போது எல்லாளனை இந்நாட்டு மன்னனாக மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. மக்களின் ஏகோபித்த நன்மதிப்பைப் பெற்ற மன்னனைக் கௌரவிப்பதன் மூலம் தான் மக்களின் மதிப்பைப் பெறவே துட்டகாமினி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேண்டும்.

எல்லாளன் தொடர்ச்சியாக 44 ஆண்டுகள் ஆட்சிபுரிவதற்கு அவனது படைபலம் மட்டுமே போதிய தாகாது. மக்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களின் சமயத்துக்கு ஆதரவு நல்கி ஆட்சி புரிந்ததாலேயே நீண்ட காலம் அவனது ஆட்சி நீடிக்க முடிந்தது.

மகாவம்சம் எழுந்த கி. பி. 6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் தமிழ்நாட்டுடில் பௌத்த மதம் வீழ்ச்சியடைந்து சைவ, வைகூஷ்ணவ சமயங்கள் மேலோங்கத் தொடங்கின. இதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. ஏற்கனவே பௌத்த மதத்தை தழுவியிருந்த சில தமிழ் மக்கள் சைவமதத்துக்கு மாறத் தொடங்கினர். காலப்போக்கில் சிங்கள மக்களும் மதம் மாறக்கூடும் என்ற அச்சம் மகாவம்ச ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழர்களால் பௌத்த மதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்திச் சிங்கள மக்களையும் பௌத்தத்தையும் பாதுகாப்பது அவரின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனாலேயே மகாநாம தேரர் தான் வாழ்ந்த காலத்துக்கு முற்பட்ட வரலாற்றை இன, மத, உணர்வோடு நோக்கினார். தமிழ் மக்களையும் தமிழ் மன்னர்களையும் வேற்று நாட்டவராகக் காட்ட முனைந்தார். அதனாலேயே தேரவாத பௌத்தத்தையும் அம்மதத்துக்குத் தொண்டாற்றிய சிங்கள மன்னர்களையும் முதன்மைப்படுத்த முனைந்தார்.

சிங்கள மக்களின் மூதாதையர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர் என்றும் தமிழர்களின் மூதாதையர்கள் தென்னிந்திய திராவிடர்கள் என்றும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். ஆனால் அண்மைக்கால ஆராய்ச்சிகள் சிங்களவரும் தென்னிந்திய திராவிடர் வழி வந்தவர்களே என நிறுவியுள்ளன.

எனவே, மகாவம்சத்தில் இடம் பெற்ற ஒருதலைபட்சமான வரலாற்றுச் செய்திகளை மானிடவியல், தொல்லியல், சமூகவியல் ஆய்வுகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளன.

இவற்றை நோக்குமிடத்து எல்லாளன் அந்நியநாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஆக்கிரமிப்பாளன் என்ற மகாவம்சக் கருத்து அடிப்பட்டுப் போகிறது.


ஆதாரம்:

**ப. புஷ்பரட்ணம்: தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு.**

**ஜி. தனபாக்கியம்: இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிட கலாச்சாரம்.**

**Maureen Seneviratne - Some women of Mahavamsa**

**Mahavamsa - Geiger Translation.**


முல்லைமணி



**அநுராபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் தென்னிந்தியா விலிருந்து வந்தவர்களாக, படையெடுப்பார்களாக அவ்வப்போது ஆட்சியைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளராகவும் மகாவம்சம் சித்தரிக்கிறது.**

**கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்ததற்கும் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததற்கும் கல்வெட்டுச் சான்றுகள்.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வேப்பமரங்கள் சிரஞ்சீவிகள்

சிவேந்திரன்



"இந்தப் பிரபஞ்சத்தின்ர உயிர் இனங்களில மனிதன்தானே சிறப்பு மிக்கவன். ஆனா.... அவனுக்கிடையே இனம், மதம், சாதி, ஆண்பால், போட்டி, பொறாமை, எண்ட பாசி ஏன் படருது? அறிவுத் தீயால் இவற்றை பொசுக்கேலாதோ? இல்லை இல்லை அன்பு எண்ட காட்டாறால இதுகளை இடித்துச் செல்ல ஏலாதா? "என தனக்குள் வினாவை தொடுத்துக் கொண்டிருந்த சுனில் மேல, வேப்பங்காய் விழுந்ததும் நினைவுக்கு வந்தவனாய் மரத்தைப் பார்த்தான். இதில இருந்த மரங்கொத்திப் பறவை தன்ர அலகால அதின்ர பட்டைகளை கொத்தி அதுக்குள் இருந்த பூச்சிகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கு வீட்டு ஞாபகம் அலை மோதத் தொடங்கிற்று.

"எங்கட வீட்டுக்கு முன்னால் இதப் போலத்தான் வேப்பமரம். அதில நானும் என்ர மூண்டு தங்கச்சிமாரும் ஊஞ்சலாடி விளையாடுவம். அம்மா அதுக்கு கீழே இருத்தி எங்களுக்கு சோறு குழைச்சு தருவா. ஒரு நாள் அதில இருந்து வட்டிலப்பம் சாப்பிடேக்கதான் எங்கட அப்பாவுக்கு கருநாகம் தீண்டி அப்பாவும் எங்களை விட்டுப்போட்டார். அதில இருந்து எனக்கு வேப்பமரமெண்டா வேப்பங்காய் மாதிரிக்கைக்கும். அதுக்குப்பிறகு அந்த மரத்தடிக்கு நாங்கள் போறேல்ல அம்மா கல்லுடச்சுத்தான் எங்கள வளர்த்தவ. கஷ்டத்தால எங்கட கிராமத்தில வந்து ஆட்சேர்க்க நானும், பேர் குடுத்தன். அம்மாவும், தங்கச்சிமாரும் வேண்டாம் எண்டாங்கள். அன்பு, கருணை, சத்தியம் எண்டெல்லாம் சொல்லி என்ன தடுத்தாங்க. ஆனால், வறுமையை என்னால தடுக்கேலாம போட்டுது... வேப்பமர சுள்ளி காலில் பட்டதும் சுள்ளென நினைவை கலைத்தவனாய் மரத்தை நோக்கினான்.

இந்த மரம் எவ்வளவு அழகாய் வளர்ந்து கிளை பரப்பி இலைகளால் குடையாகி குடைக்கு மணி வைத்தது போல் காய்கள் தொங்கிக்கொண்டு இருக்கு.... இனிமையான தென்றல் தாலாட்டுது. இதுன்ர இலை, பூ, காய், கனி, விதை, பட்டை, குச்சி, வேர் எண்டு இதில எத்தனை பயன்களை மனுசன் பெறுறான். இதுன்ர பட்டேக்க மரங்கொத்திக்கு உணவு வைச்சிருக்குது.... அண்டைக்கு வெறுத்த வேப்ப மரத்தில இண்டைக்கு நேசமாயிருக்கு. எங்கட ஆட்களுக்கு இவங்களை பாத்தா வேப்பமரமாய் தெரியுது. ஆனா.... இந்த வேப்பமரம் மாதிரி இவங்கள் அவங்கட மக்களுக்கு பயன் குடுக்கிறாங்கள் எண்டது ஆருக்குத் தெரியும், வேப்பமரத்தின்ர மருத்துவ குணம் சித்த வைத்தியர்களுக்குத்தான் தெரியும். காலம் காலமாய் புரையோடிப் போயுள்ள நோய்களையும் மாற்றும் சிரஞ்சிவி. இவர்களை நான் ஆழமாக நேசிக்கின்றேன். ஆத்மார்த்தமாய் இவங்கட கொள்கைகளை ஆராதிக்கின்றேன். வறுமைதான் என்னை

"எங்கட வீட்டுக்கு முன்னால் இதப் போலத்தான் வேப்பமரம். அதில நானும் என்ர மூண்டு தங்கச்சிமாரும் ஊஞ்சலாடி விளையாடுவம். அம்மா அதுக்கு கீழே இருத்தி எங்களுக்கு சோறு குழைச்சு தருவா. ஒரு நாள் அதில இருந்து வட்டிலப்பம் சாப்பிடேக்கதான் எங்கட அப்பாவுக்கு கருநாகம் தீண்டி அப் பாவும் எங்களை விட்டுப்போட்டார். அதில இருந்து எனக்கு வேப்பமர மெண்டா வேப்பங்காய் மாதிரிக்கைக்கும். அதுக்குப்பிறகு அந்த மரத்தடிக்கு நாங்கள் போறேல்ல..."



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவங்களுக்கு எதிராக செயற்பட வைச்சது. செய்யிற தொழில்ல விசுவாசமாயிருக்க வேணும் எண்ட என்ர குட்டி இலட்சியத்தால சில இடங்களில் மோசமாய் நடந்திருக்கிறன். இவங்களை கிட்ட வந்து பாக்கேக்கதான் இவங்கட மென்மையான உள்ளத்தை உணரக்கூடியதாக இருக்கு. தேமா மலர்கள் போல இவங்கட மனசு வெள்ளையாய் இருக்கு. இவங்கள் கடமையை உணர்ந்து ஆன்ம விழிப்போட செயற்படுறாங்கள். மனுசன மனுசனாய் மதிக்கிறாங்கள். இவங்கள் வெற்றி பெறுவாங்கள். புத்தா, உன்ர பஞ்சசீல கோட்பாட்டை நாங்கள் இல்ல, இவங்கதான் கடைப்பிடிக்கிறாங்கள். இவங்கள் நல்ல மாதிரி வாழனும் "என்ன ராஜபக்ஷ? யோசனை பலமாய் போகுது"

"உங்களை எல்லாம் என்னெண்டு விட்டுட்டுப் போறது?"

"நல்ல கதை விடாதயுங்கோ"

"இல்ல, மல்லி, உண்மையைத்தான் சொல்லுறன்"

"கெதியாய் போய் அம்மாவை பாருங்கோ"

"அதுக்காகத்தான் காத்திருந்தனான். அம்மாவைப் போல அன்பாய், அக்கறையாய் எங்களைப் பாத்திங்கள். அது மட்டும் இல்ல, எங்களுக்கு புக்ஸ், பேப்பர், ரேடியோ எல்லாம் தந்திங்க. அதைவிட எங்களுக்கு வேலை வாய்ப்பு தந்து அதில வருர காசை எங்கட பேருக்கு வாங்கில போட்டிங்கள். வீட்டுக்காரருக்கு கடிதம் போட ஒழுங்கு செய்திங்கள். ரெட்குரஸ் காறருக்கு ஒரு மாதத்துக்கு ஒருக்காவந்து பார்க்க அனுமதிச்சிங்க அப்பப்பா சொல்லவே வேணும் உங்கட அரவணைப்பை"

"ராஜபக்ஷ, நாங்களும் மனிதர் நீங்களும் மனிதர்" "அது உண்மைதான் மல்லி, இஞ்ச வந்து மனுசன் எண்டா எப்படி வாழவேணும் எண்டத விளங்கிக் கொண்டன்"

"பிறகு"

"உங்கட பேரை தெளிவாய் புரிஞ்சிட்டன்"

"வேற"

"நல்லா தமிழ் கற்றுட்டன்"

"நானும் சிங்களம் படிச்சிட்டன்"

"நாங்க எல்லாம் ஒரு நாட்டு மக்கள் மல்லி"

"ராஜபக்ஷ. பேந்தும் பிழை விடுறியள்"

"ஏன் மல்லி"

"நாங்கள் தீவு மக்கள்"

"மல்லி, இனி நாம எங்க சந்திக்கிறது"

"சண்டேல"

"ஆ... மல்லி என்ன வார்த்தை சொல்லி விட்டிங்கள். இனி நாம் எப்பவும் சமாதானம் தான்"

"சும்மா சொல்லிப்பார்த்தனான்"

"மல்லி, உங்களுக்கு சண்டை பிடிக்குமா"

"சண்டைக்களம் பிடிச்சமான இடம். ஏனெண்டா சண்டேல்ல நிற்கேக்க மட்டுமே மனம் செல்லும். மனம் ஒரு நிலையில் இருக்கும். இதுக்காக மனம் இப்ப அலைபாயுதெண்டு நினைச்சிடாதேங்கோ. எங்கட மக்களுக்கு அமைதியான வாழ்க்கை கிடைக்க வேணும் எண்டதுக்காகத்தான் சண்டை பிடிச்சம்"

"எப்பவோ எல்லாத்தையும் விளங்கிற்றன் மல்லி"

"வேந்தன், உங்க என்ன செய்து கொண்டு நிற்கிறாய்?"

"வா திருவருள், ராஜபக்ஷவோட கதைக்கிறன்"

"ஏன்ராப்பா சுனில ராஜபக்ஷ எண்டு சொல்லுறனி"

"நான் இந்த பேசுக்கு வந்த அண்டுதான் கிருசாந்தி கொலை வழக்கில ராஜபக்ஷ எண்ட சிப்பாயின் பெயர் வெளிவந்தது. அப்ப சுனில் அந்த வேப்பமரத்துக்கு கீழ நித்திரை. போய்க்கூப்பிட்டன் ஆள் எழும்பேல. ராஜபக்ஷ எண்டு கூப்பிட்டன். ஆள் முழிச்சிட்டார். அண்டேல இருந்து ராஜபக்ஷ என்டு கூப்பிடுகிறன்"

"திருவருள் மல்லி எனக்கு வேற ஆரும் கூப்பிட்டா பிடிகாது. வேந்தன் மல்லி கூப்பிட்டா பிடிக்கும்"

"ராஜபக்ஷ ஐஸ் வைக்காதையுங்கோ"

"திருவருள் மல்லி, வேந்தன் மல்லியேன் என்னோட எப்பவும் பகுடிக்கு கொழுவிக்கொண்டே இருப்பார். எனக்கு வேந்தன் மல்லிய நிறையப் பிடிக்கும்"

"சரி ராஜபக்ஷ, எல்லோரையும் கூட்டிக் கொண்டு வாங்கோ சாப்பிடுவம்"

"மல்லி, இண்டைக்குத்தான் நாம கடைசியாய் எல்லோரும் சேந்து சாப்பிடப் போறம்...."

"ராஜபக்ஷ ஏன் அழுறீங்கள்?" "மல்லி, நாங்க எங்கையோ பிறந்து, வளர்ந்து, சந்திச்சுப்பிரியப்போறம். சண்டேல செத்திருந்தா உங்கட அன்பையும், உங்கட தார்மீக போராட்டத்தையும் புரிஞ்சிருக்க மாட்டன். உங்களைப் பற்றி தெரியாமல் பல பேர் செத்திட்டாங்கள். பொப் மலர்களை அவங்களுக்கு சாத்திரதைத் தவிர எங்களால் என்ன செய்ய முடியும்? எங்கட திருவருள் மல்லி மாதிரி எத்தனை பேர் எங்கட ஆக்களும் கால் இல்லாமல் இருக்கிறாங்கள். இனியாவது சந்தோசமா இருப்பம். போரில் இழந்த உயிர்களையும், இழந்த அவயவங்களையும் யாராலதான் திருப்பித் தர ஏலும்...?" "ராஜபக்ஷ எல்லாம் காலத்தின்ர கோலம். உணர்ச்சி வசப்படாம சாப்பிடுங்கோ"

"மல்லி உணர்ச்சி வசப்படேல்ல, உண்மையைத்தான் சொல்லுறன்"

"அதுசரி சாப்பிடுங்கோ"

"மல்லி, நீங்க எங்களை சாப்பிடுங்கோ சாப்பிடுங்கோ எண்டு உபசரிக்கிறீங்கள். உங்கட மக்கள் எத்தனை பேர் பிடிபட்டிருக்கிறாங்கள். அவங்களுக்கு ஒரு நேரச் சாப்பாடு கூட ஒழுங்காய் கிடைக்குமோ தெரியாது"

"பிரச்சினை இல்ல. அங்கேயும் நல்லாத்தான் கவனிக்கிறாங்கள்...."

"மல்லி, கவனிப்பாங்கள். ஆனா.... இதய சுத்தியோட அன்பா உங்கள மாதிரி பார்க்க மாட்டாங்கள்"



"ராஜபக்ஷ, கை காயப்போகுது கழுவுங்கோ"

"மல்லி, உங்கட முருக்கங்காய் கறியோட இன்னும் கொஞ்சம் சாப்பிடப் போறன். இனி எப்பதான் இப்பிடிச் சாப்பிடப் போறேனோ?"

"பட்சா நீங்கள் செய்த வேப்பம் பூ வடகத்தயும் எடுத்து சாப்பிடுங்கோ"

"திருவருள். எனக்கு தலேல சொடுகு எண்டு ராஜபக்ஷ வேப்பம் பூ போட்டு எண்ணெய் காச்சிவைச்சிருக்கிறார் உனக்குத் தெரியும்தானே எனக்கு எண்ணெய் வைக்கிறது பிடிக்காது எண்டு ஆனா... ராஜபக்ஷ நான் வேப்பமரத்துக்குக் கீழே இருந்து பேப்பர் வாசிக்கேக்க பின்னால எண்ணெய் வைச்சுவிடுவார்"

"அதுதான் வேந்தன் உன்ர தலைமுடி வடிவாய் வருது. உன்ர கூந்தலின்ர ரகசியத்தை கேக்க எண்டு நினைக்க, நீயே சொல்லிப்போட்டாய்"

"போடா, நல்ல காலம் என்னட்டக் கேட்டா. வேறை ஆருட்டையும் கேட்டு இருந்தால் வேண்டிக்கட்டியிருப்பாய்"

" ராஜபக்ஷ புழுக்கொடி சாப்பிடுங்கோவன்"

" உங்கட உபசரிப்புகளை என்ர உயிர் இருக்கும் மட்டும் மறக்க மாட்டன்"

"ராஜபக்ஷ உங்கட மக்களுக்கு எங்களப் பற்றி சொல்லுங்கோ"

" நிச்சயம் சொல்லுவன்"

" வேந்தன், வாகனம் வரும் சத்தம் கேக்குது"

"ராஜபக்ஷ போறதுக்கு வெளிக்கிடுங்கோ"



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பயனற்றவர்களாகி விட்ட



பீஜிங்கில் தேனீர்க்கடை ஒன்றில் பணிபுரியும் சியாவோ வாங் தனது கதையைக் கூறுகின்ற பொழுது அவளது விழிகளில் நீர் முட்டியது. 1999இல் இந்த இளம் ஒப்பனையாளர் சீனாவின் வட-கிழக்கில் சாங்ஷனிலுள்ள தனது வீட்டை விட்டு சீனத்தலைநகருக்கு ஒளிமயமான எதிர்காலத்தைத் தேடி வந்தாள். 3 வருடங்களாக குறைந்த ஊதியத்தில் சிறு சிறு வேலைகள் புரிந்த இந்த 23 வயது சாங்ஷன் வாகிக்கு கையில் பணமோ, செய்வதற்கு எதுவித வேலையுமோ தற்போது இல்லை. அவள் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருந்த தொகையும் சிறுநீரக நோய்க்கான வைத்தியத்திலும் அன்றாடச்செலவுகளிலும் கரைந்து விட்டது. தனிமை, வறுமை இவற்றைவிட அடுத்ததாக என்ன செய்யப் போகிறாளென அவளுக்கே தெரியாத நிலை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவானது. இந்தப் பெரிய நகரத்தில் அவளுக்கு எவ்வளவுதான் கஸ்ரங்கள் வந்தாலும் தனது சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லும் எண்ணம் அவளுக்குக் கிடையாது. அங்கு இன்னும் நிலைமை மோசமானதாக இருக்கும். ' எனது பழைய வீட்டுக்கு திரும்பிச்செல்லும் நோக்கம் எனக்கில்லை. நான் அவ்வாறு போனாலும் அங்கு வேலையெதுவுமே கிடைக்கப்போவதில்லை' என்று கூறுகிறாள் வாங்.

சீனாவின் வட- கிழக்குத் திசையிலுள்ள இந்த நகரங்கள் பழைய கம்யூனிச சீனாவின் முக்கிய நகரங்களாகும். இங்கிருந்த அரசிற்கு சொந்தமான எண்ணெய்க்கிணறுகள், உற்பத்திக்கம்பனிகள், உருக்கு ஆலைகள் என்பவை பொருளாதார நெருக்கடி காரணமாக மூட வேண்டிய நிலையேற்பட்டது. தொழிற்சாலைகள் மூடப்பட்டமை, பாரியளவு தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமை ஆகியவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பெண்களின் வாழ்வில் இரட்டைச் சுமையாகியது. திடீரென சந்தைப் பொருளாதாரத்துக்கு மாறியமை தேர்ச்சி பெறாத, பயிற்சியற்ற, அடிமட்ட வேலைகளைச் செய்துவந்த சீனப் பெண்களை வெகுவாகப்பாதித்தது. "ஹர்பினிலுள்ள ஒவ்வொருவரும் வேலையற்ற அநேக பெண் உறவினர்களைக் கொண்டுள்ளனர்" என்று முறையிடுகிறார் இதுவரை இரண்டு தடவை பணிநீக்கம் செய்யப்பட்ட ஹய்லோங்ஜியாங் வாசியான லீ சின்சூ. "எனக்குத் தெரிந்த பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேலையற்றவர்களாக இருக்கின்றார்கள்" என்று கூறுகிறார் ஐ. நா வின் பெண்கள் அபிவிருத்திக்கான நிதியத்தின் (UNIFEM) வட- கிழக்கு ஆசியாவுக்கான ஆலோசகர் சென் லான் யான். கணவனும் மனைவியும் ஒரே தொழிற்சாலையில் வேலை செய்யும் பட்சத்தில் மனைவியை வேலையிலிருந்து நீக்கினாலும் கணவன் தொடர்ந்தும் குடும்பத்துக்காக உழைக்க முடியும் என கம்பனி முகாமையாளர்கள் நம்புவதாக அவர் மேலும் கூறினார். ஆண்கள் பெருமளவில் வேலைநீக்கம் செய்யப்படுவது சமூதாயத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என சில தொழிற்சாலைகள் கருதுவதாக அரச சார்பற்ற நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே சியாவோ யாங் போன்ற இளம் பெண்கள் புதிய வாழ்வைத் தேடி சீனாவின் ஏனைய பகுதிகளுக்கு செல்வது ஆச்சரியமானதல்ல.

ஆனால் எல்லோரும் அவ்வாறு போய்விடவில்லை. அதிகரித்து வரும் வேலையற்ற பெண்கள் படை பின்னேரங்களில் ஹர்பின் நகரத்தில் கூடிவிடுகிறது. சொங்ஜியாங் ஆற்றங்கரையிலுள்ள பூங்காவில் பல வேலையற்ற பெண்கள் குளிர்பானத்துடன் சிற்றுண்டிகளுடனும் தமது பொழுதைக் கழிக்கின்றனர். இன்னும் பலர் விலைகுறைந்த அலங்காரப் பொருட்கள் கைப்பணிப் பொருட்கள் ஆகியவற்றுடன் சுற்றுலாப் பயணிகளை நாடிச் செல்கின்றனர். இவர்கள் எல்லோரும் 40 வயதுக்குமேற்பட்டவர்கள். வட-கிழக்கு சீனாவில் பெண்களின் ஓய்வு பெறும் வயது 40 ஆக குறைந்துள்ளது. அந்தப் பூங்காவில் வளையல்கள் விற்கும் வியா "நான் ஒரு போதும் வேலை தேடுவது பற்றி சிந்திப்பதுகூட இல்லை" என்று கூறுகிறாள். ஒருவருக்கு 40 வயதுக்கு மேலாகிவிட்டபின் அவரிடம் திறமையோ, கல்வியறிவோ இல்லாதுவிடின் எவருமே தேடமாட்டார்கள். பல பெண்கள் சிறிதளவு பணத்தைக் கொள்வதற்காக எந்த வகையான வேலையைச் செய்வதற்கும் தயாராக இருக்கின்றார்கள். 1992 இல் தொழிற்சாலை வேலையிலிருந்து நீக்கப்பட்ட லீ "நான் எல்லா வகையான வேலையையும் செய்து விட்டேன்' என்று கூறுகிறான். ஆண்கள் இவ்வாறான வேலைகளைச் செய்வதற்கு விரும்பமாட்டார்கள். ஆனால் இத்தகைய பொருட்களை விற்பதற்கு இதுதான் உகந்த காலம். ரஷ்ய எல்லையிலுள்ள ஹய்லோங்ஜியாங் இல் மழைக்காலம் தொடங்கிவிட்டால் இந்தப் பெண்கள் அவர்களது வாடிக்கையாளர்களிடமிருந்து வீட்டிற்குள் முடங்க வேண்டிவரும்.

இருந்தும் அவர்கள் அதிக்ஷ்டசாலிகளாகவும் இருக்கலாம். குறுகிய சந்துகளில் வரிசையாகவுள்ள சிறிய கடைகளுக்கு முன்பாக தனியார் வேலைமுகவர்களையும் சுவரின் ஒவ்வொரு இஞ்சியிலும் காணப்படும் விபரங்களை நூற்றுக்கணக்கானோர் நின்று வாசிப்பதையும் காணலாம். பெண்களுக்கான வேலைகளில் அநேகமானவை சுத்திகரிப்பாளர்கள், பணிப்பெண்கள், விடுதி வேலையாட்கள் போன்ற மாதத்துக்கு 350-600 யுவான் ஊதியம் பெறக்கூடிய வேலைகளே. ஆனால் எது உண்மையான வேலையைக் குறிக்கிறது என்பதை அறிந்து கொள்வது மிகவும் கடினமானது. தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஒழுங்கற்றனவாகவும் பெண்களை வேட்டையாடுவனவாகவும் காணப்படுகின்றன. "விளம்பரத்தைப் பார்க்கும்போது வேலை தேடும் ஒரு பெண் உயர்ந்த ஊதியம் கிடைக்கும் நாகரிகமான ஒரு வேலையென்றே எண்ணுகிறாள்" என்கிறாள் UNIFEM ஐச் சேர்ந்த சென். அவள் அந்த வேலை முகவருடன் தொடர்பு கொண்டு தனது கட்டுப்பணத்தைக் கட்டிய பின்னரே தான் பலவந்தமாக வேலை செய்விப்பதற்கு கடத்தப்பட்டுள்ளதை உணர்கிறாள்.

இந்த ஆபத்தை எதிர்நோக்க விரும்பாதவர்களுக்கு ஏனைய தெரிவுகளும் உண்டு. தற்போது 1000க் கணக்கான வடக்குப் பெண்கள் பீஜிங்கிலிருந்து தெற்கில் குவாங்டங் வரை, மேற்கில் திபெத்தில் கூட விபச்சாரிகளாக வேலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்கள்

செல்வி



செய்வதைக் காணலாம். "ஒருவர் அவர்களுக்குப் பின்னே சிறந்த ஆடைகளையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்து கொண்டு வந்தால் அவர்களை கவர்ந்து விடலாம். ஏனெனில் அவற்றை அவர்கள் ஒருபோதுமே கண்டதில்லை" என்கிறாள் முன்னாள் ஒப்பனையாளரான யாங் யாங். அவர்களிடம் கல்வியறிவோ, வேறு திறமையோ இல்லாத காரணத்தால் வேறு வழி இருக்கவில்லை. ஏவல் பணிப்பெண்களாக வேலை செய்வோரின் தொகை பாரியளவில் அதிகரித்துள்ளதுடன் விபச்சாரிகளை அதிகளவு உருவாக்குமிடம் என்ற பெயரையும் வட-கிழக்கு சீனா பெற்றுள்ளது. அண்மையில் வடக்கைச் சேர்ந்த ஒருவரை பீஜிங்கில் வைத்து அவர் எவ்விடத்தைச் சேர்ந்தவர் என வினாவியபோது "சென்யாங்" என்று பதிலளித்த அவர் அவசர அவசரமாக "ஆனால் நான் அந்தப் பெண்களில் ஒருவர் என நினைத்து விடாதீர்கள்" என்று கூறினார்.

மக்களிடையே தமது கட்சியின் நற்பெயரைப் பாதிக்கின்ற தொழிலாளர் பிரச்சினையை எவ்வாறு கையாளுவது என கம்யூனிச கட்சி கவலை கொண்டுள்ளது. தொழிலாளருடைய கிளர்ச்சி பற்றியே பீஜிங் தற்போது அதிக கவனம் செலுத்துவதாக கூறப்படுகிறது. உலக வர்த்தக நிறுவனத்துடன் சீனா இணைந்த பின்னர் வேலையில்லாப் பிரச்சினை மேலும் மோசமடைவதுடன் வெளிநாடுகளின் போட்டியையும் எதிர்நோக்க நேரிடும் என பொருளியலாளர்கள் கூறுகின்றனர். உலக வர்த்தக நிறுவனத்தில் சீனா அங்கத்துவமாவதன் மூலம் கிடைக்கின்ற புதிய வேலைகளும் உயர் தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் தேவையாகின்றது. இது வட- கிழக்கைச் சேர்ந்த பெண்களுக்கு மேலும் கவலை தரும் செய்தியாகும். மாஓ சேதுங் முன்பொருதடவை பெண்கள் வானத்தின் பாதியைத் தாங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அது அப்போது உண்மையாக இருந்திருக்கலாம். ஏனெனில் இப்போது சீனப் பெண்கள் விற்பனைக்கான அலங்காரப் பொருட்களைத் தவிர வேறெதையும் தாங்கிச் செல்லவில்லை.

நன்றி -Newsweek

# மறக்கப்பட்டவர்கள்

கட்டையில் எற்றியபடி உம்மைக்
கண்டபிறகு கனக்குது மனசு
கழிக்கப்பட்டாலும் கறலேறிக்கெட்டாலும்
எம்மிதயங்களில் உமக்கு கடவுள்தானம்

இப்போது பார்க்கிறோம்
புத்தம்புதிதாய் வீதியில் புத்தம்புதிதாய்ஊர்திகள்
இவற்றிடை நீர்திரிந்தாலும்
ஏளனப் பேச்சுக்கள், கீழ்த்தரக்கிண்டல்கள்
ஆனாலும்
புத்தம் புதியவற்றால் எப்போதும் முடியாது
உமைபோல் தியாகமும் அர்ப்பணிப்புமான
தீரச்செயல்களைச் செய்ய

கனத்த களங்களில்
குண்டுமழை நடுவால் எம்
உயிர் மீட்டதை
உயிர்குடிக்கும் பறவைகளின் விரட்டல்களில் தப்பி
விழுப்புண் வீரரைக் காத்ததை.
சமர் நன்றாய் நடக்க
சீரான விநியோகம் செய்ததை
எப்படி மறப்பது?
குண்டும் குழியுமான கொடிய பாதைகளில்
குலுக்கல் உயிர் வேகும் இருந்தும்
உம்மால் உயிர் மீளும்
வீழ்ந்த வீரரின் வித்துடல் தாங்கினர்
இதை விடவா உமக்குப் பெருமை வேண்டும்?

எம் மக்களைக் காவினீர
நியமக்கொள்ளளவின் இருமடங்காய்
எம்இருண்ட காலங்களிலெல்லாம்
இரத்தமும் சதையுமாய் எம்முடன் ஓட்டியவர்களே
இத்தனையும் நீர்செய்தது
எரிபொருளும் உதிரிகளும் இல்லாக்காலங்களில்.
எங்கள் வெற்றிகளின் பின்னால்.

எங்கள் தியாகங்களின் பின்னால்.
இன்று வரையான எங்கள் வாழ்வின் பின்னால்
உங்களதும் உம்மைச் செலுத்தியவரதும் உழைப்புக்கள்
உங்களில் எத்தனை பேர்
கடமையில் காவியமானவா?
அதல பாதாளத்தினின்று சிரமேறும்
வன்னியின் குறியீடுகள் நீங்கள்
உங்களால் காக்கப்பட்ட உயிர்களால்தானே
இன்று எல்லாமே

நான் மடிந்தால் ஓராசை
முன்னொரன்னைக் காத்த உங்களில் ஒருவனில்தான்
விதைகுழி வரை நான் செல்ல வேண்டும்

ஆ.ரகுபதி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எம்.ஏ.ரஹ்மான்

அவன் ஒரு தேர்ந்த கலைஞன். நயமான கற்பனை: நுட்பமான கைவண்ணம். கற்கள் அவனுடைய கலையின் நேர்த்தியினாற் சிலைகளென உயிர்பெறும்

கல்லினை உளி செதுக்கிக் "கலீர்கலீர்" என்னும் நாதத்தினைப் பிழியும். அஃது ஓய்ந்த நேரத்தில், தன் படைப்பில் மெய்மறந்து நிற்பான். வித்துவச் செருக்கில் அவன் தன்னையே மறப்பான். இன்னொருவன் மறை ஓதிய வேதியன். நான்கு மறையுங் கற்றுத் தேர்ந்தவன். சற்றுச் சோம்பேறி. கோயிலுக்குச் சென்று பூஜையைக் கிரமமாகச் செய்து, எல்லாவற்றையும் ஆண்டவனின் தலைமையிலே சுமத்திவிட்டு, சயனச் சுகம் அநுபவிப்பதிற் பிரிதீ;

கலைஞனின் தொழிலை வேதியன் விரும்பவில்லை. வேதியனின் நம்பிக்கையை கலைஞன் இகழ்ந்தான்.

கலைஞன் பல நாள்களாக அரும்பாடுபட்டு, சலவைக் கல்லில் அழகிய ரதி சிலையொன்றினைப் படைத்தான். மதியின் தன்மையையும், இசையின் அமைதியையும் கொங்கைகள், மூங்கில் தோள்கள், மின்னல் இடை, இத்தனை மனோரதிய உருவங்களையும் அச்சிலையிலே தேக்கினான்.

அச்சிலையைப் பார்த்துப் பார்த்துப் பசியை மறந்தான். செருக்கு உச்சந்தலைவரை ஏறிற்று! தன்னுடைய கற்பனை வளம் நான்முகனிடம் கூடக் கிடையாது என்கின்ற பெருமிதம்.

வேதியனைத் தன் அறைக்கு இழுத்து வந்தான்.

இந்தச் சிலையைப் பார்த்தாயா, ஆண்டவனுக்குப் போட்டி போட்டு நான் சிருஸ்டித் தொழில் செய்கின்றேன். இதனைப் படைக்குஞ் சக்தி நீ சேவிக்கும் இறைவனுக்கும் ஏற்படாது.

"இஃது ஒரு துகள். ஒரு நகல்! இறைவன் கடல்..."

"புரியாதன பேசிப் பாமரனை ஏமாற்றி வயிறு வளர்க்கும் பிராமணியனியே! நீங்கள் பிரதிஸ்ட்டை செய்து வணங்கும் தெய்வங்கள் என் போன்ற கலைஞனின் படைப்புக்களே! கடவுளர்களையே படைக்கும் பிரமாக்கள் நாங்கள்"

"கலைஞன் தெய்வம்"

"நம்பிக்கைதான் தெய்வம்"

"அஃது உன் எண்ணம்"

"பரீட்சித்து விடுவோம்"

"உன் விருப்பம்"

"பந்தயம்?... நான் வென்றால், கடவுள் கலைஞனின் கற்பனையே என்கிற நீரிஸ்வரவாதத்தை நீ நிலைநாட்டுவாய்!"

"நான் வென்றால், உன் கலை இறைவனின் திருப்பணிக்கு அர்ப்பணிக்கப்படும்"

"சம்மதம்"

சாலையோரத்து அரச மரத்தின் கீழ் நிழல் சுகித்துக் கொண்டிருந்த வேதியன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

விசித்திரமான கனவுகள் மூட்டமிட்டன. விழித்தபொழுது கனவின் எழுச்சியில் அங்கும் இங்கும் பார்த்தான். சுற்றுத் தூரத்தில், காளியின் உருவ அமைப்பினைக் கொண்ட கல்லொன்றைக் கண்டான். அகமும் முகமும் மலர்ந்தது.

அதனை எடுத்துச் சென்று அயற்கிராமத்தின் குளக்கரையில் பிரதிஷ்டை செய்யத் தொடங்கினான்.

அவனுடைய செயலில் ஆச்சரியங்கொண்டு, ஒரு கூட்டம் கூடியது.

"என்ன விசேடம்?" என்று அவர்களுள் ஒரு முதியவர் கேட்டார்.

"நான் அடுத்த கிராமத்தில் ஆலயப்பணி செய்து கொண்டிருந்த புரோகிதன். தேவி பிரசன்னமானாள்..." பேசும்பொழுது பயபக்தியுடன் நம்பிக்கையின் சுடர். அவனுடைய சொற்கள் ஒவ்வொன்றும் பாமர மக்களுடைய உள்ளங்களை அளைந்தது. மகனே! அடுத்த கிராமத்திலுள்ள மக்கள் அஞ்ஞானத்திலே துன்புறுகிறார்கள். அவர்களுக்கு விமோசன காலம் நெருங்கிவிட்டது. உன்னையே என் கருவியாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்.. நீ சாலையோரத்தில் காணும் ஒரு கல்லில் எனது உருவத்தைப்பார்ப்பாய். அதனை உன்னுடன் எடுத்துச் சென்று குளக்கரையிலுள்ள பன்னிச்சை மரத்தின் மருங்கில், பிரதிஸ்டை செய்து மூன்று வேளைகளும் ஒழுங்காக பூசை செய்!' எனப் பணித்து மறைந்தாள். 'நான் தேவியின் ஊழியன். அம்பாளின் கட்டளையை நிறைவேற்றுகின்றேன்' பக்தியைப் பிழிந்தெடுக்கும் குரலில் விழிகளைத் திறக்காமலே பேசினான்.

கிராமத்தில் புத்துயிர் பிறந்தது. செல்வப் பெருக்கு மக்களைக் குளிர்வித்தது. ஆராதனை மணி மக்களுடைய மனங்களில் நிறைவினை ஊட்டியது. தேவியின் அருளிலே பின்னமற்ற பக்தி மக்களுக்குத் தோன்றியது.

மழையும், வெய்யிலும் தேவியைத் துன்புறுத்தாவண்ணம் ஒரு பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினார்கள். பல தேசத்துச் சிற்பிகள் ஒன்று கூடி, இரவு பகலாக, பெரிய கோபுரங்களுடன் கூடிய அற்புத ஆலயம் ஒன்றினை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

வேதியன், கலைஞனை இந்தக் கிராமத்துக்கு அழைத்து வந்தான். கலைஞன் ஆலயத்தின் பிரமாண்டத்தையும். சிற்ப வேலைகளையும் கண்டு திகைத்துப் போனான். அவற்றினை நிருமாணிக்கும் சிற்பிகளைக்காணவேண்டும் என்னும் ஆசை அவனுள் எழுந்தது.

சிற்பிகள் தங்கியிருந்த அறைப்பக்கம் சென்றார்கள்.

ஒரு கிழச்சிற்பி பேசுவது இவர்களுடைய காதுகளிலே தெளிவாக விழுந்தது.

"நேற்று நான் அடுத்த கிராமத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு ரதி சிலையைக் கண்டேன். தேர்ந்த கை நுணுக்கத்தின் படைப்பு. ஆனால், அதில் அருளில்லை.. நம்பிக்கையில் வேரூன்றாத அதீதக் கற்பனை அதன் குறைபாடு. இருபது வருடங்களுக்கிடையில் மார்பக பாரத்தைத்தாங்க மாட்டாது அச்சிலை இடுப்புடன் உடைந்து போகலாம்"

கலைஞனுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை..

கர்வ பங்கம்!

இருவரும் மூலஸ்தானத்துக்குச் சென்றார்கள். தீபாலங்காரத்தின் மத்தியில் ஒரு 'கல்'

"இஃது அரசமரத்தடியிற் கிடந்த கருங்கல். சிலை செய்ய உதவாத கல்லென்று இதனை ஒரு தடவை நான் ஒதுக்கிவிட்டதாக ஞாபகம்' இரகசியமாகப் புரோகிதனின் செவிகளில் மட்டும் விழும் வண்ணம் சொன்னான்.

"இது கல்லல்ல. நம்பிக்கையுடன் பார் தேவி பிரசன்னமாயிருகிறாள்"

பிரமாண்டமான கருங்கல்லில் கலைஞன் காளி சிலையொன்றினைச் செதுக்கிக் கொண்டிருக்கின்றான். 'கலீர் கலீர்!!' என்னும் நாதம் கோயிற் பிரகாரம் முழுவதிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது..



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஏக்கம்

வளவை வளவன்



அமைதிக்கும் அமைதியின்மைக்குமிடையேயான மௌனயுத்தமொன்று பிரபஞ்சப் பெருவெளியில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இந்த மௌனயுத்தம் மீண்டுமொரு பெரும் போருக்கு வழிகோலிவிடுமோ என்ற அச்சத்தோடு தடுக்கும் முயற்சிகளில் விண்ணில் உள்ள கோள்களெல்லாமே முயற்சி செய்யத் தொடங்கிவிட்டன.

சூரியனோ தனது உயர்நிலை சகல கோள்களிற்கும் தலைவன் நானே என்ற அகம்பாவ அகந்தைக்கேற்ப பூமியின் அடிபணியாத தன்மையைக் கருதி பூமியின் மீது தன் முழுப் பலத்தையுமே சொரிந்து சுட்டெரித்துக் கொண்டிருந்தது. சூரியனே நீ உயர்ந்த பதவியை இந்தப் பிரபஞ்சத்தில் வகுப்பதால் என்மீது கொண்ட காழ்ப்பினால் எனது அழகையும் வளத்தையும் சுட்டெரித்து விடுகிறாய். இது நல்லதற்கல்ல. என்னை அழித்து விட்டால் நீ தப்பி விடலாமென எண்ணாதே! நான் இல்லையேல் நீயும் அழிந்து விடுவாய் என்பதை இனியாவது புரிந்து கொள் எனப் பூமி எச்சரித்தது.

சனீஸ்வரனைத்தவிர அனைத்துக் கிரகங்களும் கூடி ஆராய்ந்தன. சமாதானத்தைக் கட்டி எழுப்ப எல்லா வழிமுறைகளிற்கும் நாம் உதவுவோம் எனத் தீர்மானித்தன.

சந்திரன் சமாதானத்தை வலியுறுத்தினான்.

சுக்கிரனும் புதனும் வீணான உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் நிறுத்தி சுமூகமான நிலைக்கு வாருங்களென வேண்டின.

பூமிக்குகிட்ட உறவில் பேசுகிறீர்கள் என்றது சூரியன்.

சனியனோ, அட்டகாசமாகச் சிரித்தது. சூரியனோ உனது வலுவைநீயே அறியாது வீணாக பலவீனர்களுக்கு பணியாதே! உன்பலம் போதும்... உனக்கு பதில் சொல்ல இவர்கள் யார்? என்று சீண்டி விட்டுக் கொண்டான்.

சூரியனுக்கு தன்னைவிட யாருமில்லை என்ற அகந்தை மேலிடவே மீண்டும் தனது அக்கினிக்கோலமாகத் தன் வெப்பத்தை பூமிமீது சொரிந்து பூமியை வதைத்தது. தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதென்றே நோக்கமாக இருந்தது.

பூமி மென்னகை ஒன்றை உதிர்த்து விட்டு எதிரியான சூரியனின் வெப்பத்தையே கருவியாக்கி தனது நீர்ப்பரப்பியை ஆவியாக மாற்றி நீராவி மூலம் சூரியப் பாதுகாப்புப் படைகளான முகில் கூட்டங்களை தாக்கி நனைத்துக் கொண்டது. நீரால் கனமேறிய முகில்கூட்டங்கள் மெல்ல மெல்ல பூமியை நோக்கி இறங்கின. சூரியனின் கதிர்களைத் தடுத்தன. சூரியன் தடுமாறி நின்றது.

சூரியன் திகைத்துப் பெரும் ஏமாற்றத்தைக் கண்டது. முகில்கள் மழையாகப் பொழிந்தன. பூமி குளிர்ந்தது. பயிர்கள் செழித்தன. எங்கும் பசுமையின் தோற்றம் பாயாக விரிந்து மெருகூட்டியது. சுகந்தம் சுமந்த தென்றல் புவியைத் தழுவிக்கிடந்தது. இந்த அமைதியைக்கண்டு பிரபஞ்சத்தின் கோள்கள் மகிழ்ச்சியில் திழைத்தன.

இந்த மாற்றங்களைக் கண்டு சூரியனின் மனம் குமுறியது. கோபம் பொங்கிப்பிரவகிக்க முடியாது தடுமாறத் தொடங்கியது.

துள்ளிக்குதித்த சனியன் அள்ளி வைப்பதற்கான வேறு வழிகளைத் தேடிக் கொண்டிருக்க ஏனைய கோள்களெல்லாம் பூமியை வாழ்த்திப் புகழ்ந்தன.

சூரியன் மனம் புளுங்கி உள்ளூற சலித்துக் கொண்டிருந்தது.

வியாழனான அறிவன் கோள் நிதானமாகவே கூறியது 'ஆதிக்கம் செய்ய நினைத்தவர் வென்ற வரலாறு எங்குமே இல்லை' என்று.

பாவம் சூரியனோ பூமியின் செல்வாக்கு உயர்ந்ததையும் அதன் மேல் தோன்றிய மாற்றங்களையும் கண்டு பொறுக்காதமனதோடு எப்படிப் பூமியைப் பணியவைப்பதென்ற ஏக்கத்தில் மூழ்கிக் கிடந்து தவித்துக் கொண்டிருக்கிறது.

## வேலியும், பட்ட கிழுவையும்

ஆவரங்கால் சுதன்



இரண்டு காணிக்கு இடைப்பட்ட எல்லை வேலியது.

அந்த வேலியில் நன்றாகப் பெருத்து மொக்குப் பத்தி நின்றதொரு கிழுவை மரம் பட்டுப் போய்.

அதன் அடிபெருத்து பக்கத்து காணியிலும் சொற்பத்தை விழுங்கியபடி வேலிக்கு நடுவே நின்றது சாட்சியாய்.

அம்மரத்தை அகற்றினால் தனது வேலியை அகட்டி அகட்டிப் போடும் கனவு கெட்டுப் போய்விடுமே என்ற எண்ணத்தில் அதனை அகற்றாமலேயே புதிய பனையோலைகள் கொண்டு மிகவும் நிறைவாகவும், சீராகவும் வேலிச்சொந்தக்காரனால் அடைக்கப்பட்டது. அதுவும் நீண்டகாலப் பாவனை நோக்கம் கருதி தலைகீழாக கவிட்டு (இதழ்களுக்குள் மழைநீர் தேங்கி நிற்காமல் வழிந்தோடக் கூடியவாறு நிலம்பார்க்க) அடைக்கப்பட்டது.

அடைத்த சிறிது காலத்துக்குள்ளேயே வேலி முழுவதும் கறையான்கள் மொய்த்து மேயத் தொடங்கின. ஒவ்வொரு காலையிலும் எழும்பி கறையான்களை தட்டிக் கொட்டுவதே வேலையாகிப் போனது.

ஆரம்பத்தில் சாம்பல், பிறகு மலத்தீன் என வீசியும் கறையான்கள் கட்டுப்பட்டதாய் இல்லை. மாறாகப் பெருகிப்பெருகி பொத்தல் பொத்தலாய் இற்று விழுந்து வர வர வெழுப்பாகி வந்தது வேலி.

இனி என்ன செய்யலாம்?

இயலாமையும் சலிப்பும் வேலிச் சொந்தக்காரனைச் சூழ்ந்து துயற்றின.

வீசிய தென்றலுக்கு கிளைகளைச் சிலுப்பியபடங்கிய வேம்பு, வேலிச் சொந்தக்காரனைப் பார்த்து சொல்லிற்று.

'பட்ட கிழுவை' வேலியில் நிற்கும்வரை உன்னால் உனது வேலியை பாதுகாக்க முடியாதென்று.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரேணுகா செயறூபன்

# புள்ளிகளும் கோடுகளும்



சைக்கிளை உருட்டியபடி மிக மெதுவாக நடந்து கொண்டிருந்தான் சாரங்கன். பாதையின் கோட்டை சற்று விலகி இடது புறமாக உள்ளோடி வளைந்த மண் பாதைக்குள் இறங்கிய பிறகுதான் தெரிந்தது அவனது ஊர் நெருங்கிவிட்டது. இருபுறச் சிமெண்ட் கால்வாய்க்குள் நீரின் குபு....குபு.... இரைச்சல். இரண்டொரு நீர்ப்பறவைகள் முழுகுவதும் எழுவதுமாய்... இன்னும் என்னென்னவோ இனங்காண முடியாத இரைச்சல்கள். அதிகாலைக் காற்று முழுவதும் முட்ட முட்டப் பனியின் சோடிப்பு, இழுத்து உள் வாங்க அவதியாகத் தும்மல் வந்தது.

புதுக்காற்று விட்டு விடுதலையாகிய சுதந்திரக் காற்றின் அற்புதமான வாசம். ஊடே ஏதோ ஒரு வாடை கருகுவது போல, தீய்வது போல மனித உடலின் புழுத்துப் போன மக்கல் வாடை. குறுக்கே நாயொன்று எதையோ நீளமாக கறுப்பாகக் கௌவியிருந்தது. நின்று நிதானமாக உற்றுப்பார்க்க மனிதனின் எரிந்து போன கால் எலும்பு. ஒரு நிமிடம் நின்றான். உறைத்தது, உறைத்தது. விரு விருவென நெஞ்சுக்குள் எதுவோ ஊர்ந்தது. நகர நகர ஊரின் அலங்கோலம் உருச்சிதைந்து, உறவுகள் சிதைந்து ஒரு கொடியைப் பிடித்திழுத்தால் ஊர் முழுவதும் சொந்தமாகியிருந்த நாட்கள் கலைந்துபோய் வெறிச் சென்ற வீதிகள் மட்டும் மின்னல் மின்னலாக ஒடி ஒடி மறைந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே சிவப்பு முக்கோண தகடுகள் கண்ணிவெடி அபாய அறிவிப்புக்கள். சைக்கிளோடு மனமும் சேர்ந்து உருண்டு கொண்டிருந்தது. முன்னோக்கி உருள ஏதில்லா சூனியம் பின்னோக்க பின்னோக்க கனமான கவலைகள், காயங்கள், கருந்தரிப்புக்கள், கருச்சிதைவுகள், அம்மாடி.....

ஒற்றைத் தூணில் ஒரு பக்கச்சாரம் மட்டும் தொங்கியிருக்க மலைக்குவியலாய் கற்கள் மேடை போட்டிருந்தன. ஒரு நிமிடம் இதயம் ஓராயிரம் இரத்தச் சொட்டுக்களை உதிர்த்தது. அண்ணா யப்பானில் பார்த்த வீட்டைப் படம் பிடித்துப் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு.

கற்குவியல் மேல் கவனமாக உட்கார்ந்திருந்தான். முற்றமெல்லாம் பெயர் தெரியாத அழகழகாய் பூச்சொரிந்த பூச்செடிகள் பாத்தி போட்டிருக்க. தொட்டிக்குள் தோடையும், மாவும், பப்பாசியும் இரண்டு வயதுப் பிள்ளையின் உயரத்தில் பூவும் பிஞ்சுமாக விட்டிருந்தன. மாதக் கணக்கில் யோசித்து யோசித்து அவன்தான் 'குற்றாலம்' என்று வீட்டுக்கு பெயர் வைத்தான். அம்மாவின் அருகிலிருந்து அண்ணா சொன்னது இப்போதும் கேட்கிறது. "அம்மா இது என்ர தங்கச்சிக்கு நான் கட்டிக் குடுக்கிற கோயிலம்மா. அவளின்ர பேரை

புதுக்காற்று விட்டு விடுதலையாகிய சுதந்திரக் காற்றின் அற்புதமான வாசம். ஊடே ஏதோ ஒரு வாடை கருகுவது போல, தீய்வது போல மனித உடலின் புழுத்துப் போன மக்கல் வாடை. குறுக்கே நாயொன்று எதையோ நீளமாக கறுப்பாகக் கௌவியிருந்தது. நின்று நிதானமாக உற்றுப்பார்க்க மனிதனின் எரிந்து போன கால் எலும்பு. ஒரு நிமிடம் நின்றான். உறைத்தது, உறைத்தது. விரு விருவென நெஞ்சுக்குள் எதுவோ ஊர்ந்தது. நகர நகர ஊரின் அலங்கோலம் உருச்சிதைந்து, உறவுகள் சிதைந்து ஒரு கொடியைப் பிடித்திழுத்தால் ஊர் முழுவதும் சொந்தமாகியிருந்த நாட்கள் கலைந்துபோய் வெறிச் சென்ற வீதிகள் மட்டும் மின்னல் மின்னலாக ஒடி ஒடி மறைந்து கொண்டிருந்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முன்னுக்குப் போடுவம்" குற்றாலத்திற்கு முன்னால் திருவேணி எழுதி தினம் தினம் பிராஸோவால் தேய்த்து பளபளப் பாக்கி அழகு பார்த்தவன் அண்ணா. அண்ணா பொறியிலாளன். அவனிருக்கும் இடத்தில் கட்டாயம், உதடுகளும், கன்னங்களும் சேர்ந்து பூப்பூவாய் சிரிக்கும்.

எல்லாம் கொஞ்சக் காலம். நிம்மதியும் சந்தோசமும் கொட்டிப் பரவிய காலம். மீண்டும் வரமுடியாத நிமிடங்கள். அமைதி அடைகாத்துக் கொண்டிருக்க ஊர்தான். ஒரு நொடியில் அவிழ்ந்தது. சிதறியது. ஊர் ஓடி முடிந்தது. ஒற்றையாய் உறவுகளைத்தேடி அலைந்ததில் சிவசம்பு மாமா, தங்கச்சியை மட்டும் அவனிடம் கொடுத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

பல்கலைக்கழக படிப்பில் இன்னும் ஒற்றை வருசமும் ஓர்ஆறுமாதமும் மட்டுமே மிச்சமியாயிருக்க நடந்து முடிந்த எதையும் நம்பிக் கொள்ள முடியாமல். நம்பித்தான் ஆக வேண்டிய நிலைமையில் அழக்கூடத் தெரியாமல் உறைந்தவன்தான். ஓடுகின்ற உயிர்த்துடிப்பும் தங்கைக்காய் இழுத்து அணைத்த போது வியர்வைக் கொப்பளிப்பில் உடம்பு சில்லிட்டது. அம்மாவும் அப்பாவும் ஒன்றாக ஒரே விநாடியில் உருச்சிதைந்து போன அதே நெடிப்பொழுதில் சரிந்து விழுந்த ஏணியின் தலைப்புக்கள் அண்ணாவின் உயிரும் உணர்வுகளும் இல்லாமல் ஓடிப்போயிருக்கிது. ஆறுமாதங்களுக்குப் பிறகு இதயக் காயம் மீண்டும் கிளறிக் கொண்டது. நிறைய வலித்தது. இருட்டு மூலைக்குள் ஊமையாக அழுதுத்தீர்த்தான்.

ஆறுவருடங்கள் மிக நீண்ட காலக்கோடுகள். அண்ணாவின் சேமிப்புக்கள். யப்பான் நாடு அண்ணாவின் இழப்பீட்டிற்காக அனுப்பிய மொத்தமான தொகை. கொஞ்சம் கரைந்து போயிருந்தாலும் கணிசமான லட்சங்கள் இன்னும் இருந்தன. பத்தொன்பது வயதுத் திருவேணியின் கல்யாணத்தை மட்டும் முடித்து விட்டால் போதும் அவனின் கால்களைக் கட்டிய தளையும் கட்டவிழ்ந்து போகும்.

சிவசம்பு மாமா முழுமூச்சாகத் திருவேணிக்காக மாப்பிள்ளை தேடத் தொடங்கியிருந்தார். மாமா நான் காசைப் பாக்கேல்லை. அவளுக்கு பிடிச்சிருந்தால் சரி.' கிட்டத்தட்ட ஆறு ஏழு இடங்கள் திருவேணிக்கு எதுவும் பிடிக்கவில்லை. கொஞ்சம் சலிப்பாக கூட இருந்தது. என்ன இவள்.... அலுத்தது. கடைசியாக மாமா 'தம்பி கவலைப்படாதை அவளின்ர மனதுக்குள்ளேயும் என்னவோ இருக்குது. விட்டுப் பிடிப்பம். இப்ப என்ன வயசே போட்டுது. பார்ப்பம்'

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. அவசர அவசரமாகக் குளித்து விட்டு வெளியே புறப்பட்டான் சாரங்கன். கோயில் வாசலில் சைக்கிளை ஸ்ராண்ட் போட்டு நிறுத்தி உள்ளே வந்தான். வெறிச்சோடிய பிரகாரத்தை ஒருமுறை சுற்றி வில்வமர மணலில் கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்தான். எவ்வளவு நேரம் இருந்திருப்பானோ விழித்த போது இமைகள் கண்ணீரில் பிசுபிசுத்தன. இள வெய்யிலில் காஸ்கை தெரிந்தது. உதறிக் கொண்டு எழுந்தான்.

வீட்டுக்குள்ள நுழைய எங்கேயோ... எப்போதோ கேட்ட குரலின் ஜாடை.... யாராயிருக்கும் ஆ...ஆ... ஜீவன் இவன் எப்படி இங்க ஜீவன் ஓடிவந்து உணர்வுகளின் கொந்தளிப்போடு அணைத்துக் கொள்ள சாரங்கன்.... சின்ன கீச்சலோடு எழுந்த ஜீவனின் கண்ணாடி நழுவிக் கொள்ள இரண்டு கண்களிலிருந்து இடங்கள் ...ஓ... ஜீவன்... உனக்கு நீ... பல நிமிடம் உணர்வுகளின் பதைப்பை, உயிர்க் கூட்டின் வதைப்பைப் பொங்கி வழியும் கண்ணீரைக் கூடத் துடைக்கத் தோன்றாமல் வலியோடு பார்த்துக் கொண்டிருந்தாள் திருவேணி.

ஜீவன் மலையின் முகட்டில் ஏதோ ஒரு கிராமத்தில் பிறந்தவன். பல்கலைக்கழகத்தில் சாரங்கனோடு ஒன்றாகச் சேர்ந்தவன். முதலாம் வருடத்தின் இறுதி நாளன்று, செம்மை படர்ந்த மகாவலியின் புது வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்படவிருந்த அவனை மயிர்க் கூச்செறியும் துணிச்சலோடு காப்பாற்றியவன்.. பிறகு தெரியாது.. இவனைப் பற்றி எதுவும் தெரியாது.

ஜீவன் அமைதியாகச் சொன்னான் 'சாரங்கா உனக்கு அழுவதற்காவது கண்கள் இருக்கின்றதே என்று சந்தோசப்படு. எனக்கு.... அவன் உதடுகள் அழுதன. அவ்வளவுதான்.

அந்த நிமிடமே திருவேணியின் நெஞ்சுக்குள் சின்னதாக எதுவோ உடைந்தது. பொங்கியது. உலகத்தின் நிறத்தை உனக்கு நான் காட்டுகிறேன். ஜீவன் அவள் உதடுகள் மெதுவாக அவன் பெயரை உச்சரித்துப் பார்த்தன. ஏதோ ஒரு முடிச்சு அவிழ்ந்தது மாதிரி மனசுக்குள் ஏக சில்லிப்பு.

நாட்கள் ஒவ்வொன்றாக சிரமமாய், சிக்கலாய் உதிர உதிர நெஞ்சு மட்டும் இறுகிக் கொண்டது. இந்தச் சாயங்காலம் பூப்பூவாக வானம் பூச்சிதறலாக உதறிக் கொண்டிருக்க இறகுகள் நனைந்து போன பறவை மிதமாமிதந்து கொண்டிருந்தது. அவள் தன் முடிவை தனது எதிர்காலத்திற்கான ஒருபக்க அத்திவாரத்தை லேசான கண்ணீரோடு சொல்லி முடித்தாள். ஜீவன், அண்ணா, அப்பாச்சி அந்த முக்கோணத் துருவங்களிடையே மூவேறு அதிர்வுகள். ஜீவன் ஒரு நிமிடம் உறைந்தவன் தான் தள்ளிக் கொண்டு எழுந்தான். 'சாரங்கா மன்னித்துக்கொள். நான் வருகிறேன்...., சாரங்கன் எதுவும் தோன்றாமல் உட்காந்திருக்க. அப்பாச்சிதான் கதைத்தாள். ' மோனை.. ஜீவன் இப்ப நீ போறதால இந்தப் பிரச்சினை இத்தோடை தீருமென்று நீ நினைச்சால் போ... ஆனால் இது நிக்கிற பிரச்சினை இல்ல மோனை... பொம்பிளையின்ர மனம் எனக்குத் தெரியும். ஒருக்கால் அது ஒருத்தனுக்குதான் திறக்கும்... மூடும்...' அப்பாச்சி எங்கோ தொலை தூரத்திற்கு நகர்வது போல இருந்தது.

'என்ரை பரம்பரையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. பத்துத் தலைமுறை பட்டங்கட்டி ஆண்டவங்கள். எனக்குப்பார்க்காத இடமில்லை. கடைசியில் என்ரையப்பு எக்கேடும் கெடட்டும் எண்டு கைகழுவி விட்டார். பொம்பிளை பாக்க வந்த உடையாருக்கும் எனக்கும் பதினேழு வயது வித்தியாசம் மோனை. அப்ப ஊர் சிரிச்சுது. ஆனால் என்ர அப்பு, ஆச்சியோட மல்லுக்கு நிண்டு அவரைத்தான் கட்டினன்... எனக்கென்ன குறை'

'அதுக்கில்ல ஆச்சி, அதுவேற. இதுவேற '

'மோனை உதைச் சொல்லாத. என்ரை நெஞ்சு உடையாருக்குப்பின்னால் போனது போல பொடிச்சியின்ர மனம் உனக்குப் பின்னால ஓடிட்டுது. எல்லாம் கடவுள் சங்கற்பம்'

திருவேணிக்கு ஆச்சியை கட்டிக் கொள்ள வேண்டும் போலத் துடித்தது. சாரங்கன் சிந்தியிருந்த நீரில் மௌனமாக கோலம் போட்டுக் கொண்டிருந்தான். முகத் தசைகள் மட்டும் இறுகிப் போயிருக்க உணர்வுகளை அடக்க உதடுகளை அழுத்தமாகக் கடித்திருந்தான்.

வசந்தம் ஒரு சுற்றுச் சுற்றி வந்தது. கலியாணத்திற்கு நாள்குறித்து. ஊர்கூடி, நடாத்தி வைத்தது. அவன் கைபிடித்து படியிறங்கிப் போன அனுதாபத்தோடு, ஆதாரத்தோடு பார்த்தது. அவள் மட்டும் நெஞ்சு நிறைந்த பூரிப்போடு அப்பாச்சியின் கால்களைத் தொட்டாள். அழுத அண்ணாவின் கண்ணீரைச் சுண்டி விட்டாள். 'அழாதே இது அழுகின்ற காலமல்ல. அண்ணா என் வயிற்றில் பிறக்கின்ற இவனோ, இவளோ நிச்சயம் எங்கட அம்மா, அப்பா ஏன் தன்னைப் பெற்றவனின் கண்களுக்காகவும் கேள்வியாக எழுவான்' சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. மனது மட்டும் சட்டம் போட்டு கோடிட்டது. தொட்டு வைத்த புள்ளிகளெல்லாம் புதிது புதிதாக அர்த்தம் சொல்லின.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விருட்சத்தின் கதை அல்லது வில்லர்களின் தறிப்பு



காட்சி 01

கனிகளுடன்
அழகு பூத்துப் பொலிய
அமைதியாய்க் கம்பீரமாய் வியாபித்து
குளிர்நிழல் பரப்பி
பறவைகளின்
பாரம்பரியப் பாடல்களில்
கிறங்கிப்போயிருக்கிறது
ஆதிப் பெருவிருட்சம்.

காட்சி 02

கூர் தீட்டிய கருவிகள் சகிதம்
விருட்சத்தைத் தறித்துக் கூறாக்கவென
வில்லர்கள் கூடுகின்றனர்.

காட்சி 03

கிளைகளில் ஊடுருவி
தீப்பொறி தெறிக்கத்தெறிக்க
மாறி மாறி தறிக்கின்றனர்.

காட்சி 04

தறிப்பின் முழக்கத்தில்
பறவைகள் கெலித்துப்போய்
கொதிவெளியிலேறி அலைகின்றன.
அலறியலறி.

காட்சி 05

வில்லர்களின் மூர்க்கத் தறிப்பில்
விருட்சக் கிளைகள்
அலறி முறிகின்றன.
பூக்களும்
பிஞ்சுகளும்
குருவிக் கூடுகளும்
குஞ்சுகளும்
கழன்று விழுந்து சிதைகின்றன.

காட்சி 06

வில்லர்களின் முரட்டுக் கால்களிடை சிக்குண்டு
நசிய நசிய
குருதியாய்
கீச்சிட்டுப் பீறிடுகின்றன
குருவிக் குஞ்சுகளின் சீவன்கள்.

காட்சி 07

தறிப்பின் முழக்கம்
பறவைகளின் அலறல்
குஞ்சுகளின் கீச்சிடல்
வில்லர்களின் வெறிக்கூச்சல்
அத்தனையும் குழைந்தலைகிறது
புயலாய்
பேரிடியாய்.

காட்சி 08

ஆதி விருட்சத்தின் அழகு குலைகிறது
விரவிப் பொழிந்த குளிர்நிழல் அழிகிறது
விருட்ச வாழ்க்கையை
வில்லர்கள் கெடுக்கிறார்கள்.

ஐயோ! ■

அமரதாஸ் ■

# விதையுள் விருட்சம்


விதைவெடித்து
முளைத்துப் பெருத்துக் கன்றாகி
இடர்கள் பல கடந்து
விண்வெளி துளாவி வளர்ந்திற்று.

கிளைத்துக் கிளைத்து
கிளையிற் கிளைத்து
துளிர்த்துச் சடைத்து
இலையுதிர்த்து
துளிர்த்துத் துளிர்த்து சடைத்திற்று.

ஆழ வேர்களால் புதைத்து
மண் பற்றி
பெயரா மலையென நிமிர்ந்து
கனியாக
காற்றாக
நிழலாக
மழையாக
பலதாகப் பயன்சொரியும் அது.

புள்ளி வித்துள்
பெரிய விருட்சம்!

விருட்சமென விசாலித்த மெய்வாழ்க்கை
என்று வரும்
மனிதர்கள் பலருக்கு?






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வனம் பற்றி



அமரதாஸின்
இயல்பினை அவாவுதல்
எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து
சில கவிதைகள்

01

மண்ணிடை
வேர்க்கால்களைப் பின்னி
கிளைக்கரங்களை
காற்றுவெளியிடை வலித்து வலித்து
விண்தொட விழையும்
விசால விருட்சங்களையும்

வண்ண வண்ணமாய்க் குலுங்கி மினுங்கும்
பூக்களையும்
பழங்களையும்
முகில் வழியும் மலைகளையும்
கலைகளில் ஈரம்படியக் கொஞ்சிப் புணர்ந்து
தேக்கமின்றித் தாளகதியில்
தவழும் நதிகளையும்

பூத்த வர்ணச் சிறகுகளில் புகுந்துலாவி
மரக்கிளைகளில்
குளக்கரைகளில்
பசுந்தரைகளில்
எங்கும் சோடித்து
இன்பமுறும் பறவைகளையும்

இன்னும்
எக்கச்சக்க வனப்புக்களையும்
ஏற்றிக்கொண்டு
ஆநந்தமாய்ச் சுழல்கிறது வனம்.

02

வனத்திட பெருகிய
வெவ்வேறு இனமரங்கள் உரச உரச
மூள்கிறது தீ.

பூக்களாயும்
பழங்களாயும்
பலகோடி வனப்புகளையும்
சுருட்டிக் கருக்கி விழுங்குகின்றன
வனத்தீயின் ராட்சத நாக்குகள்.

அலறிப் புலம்பெயரும்
பறவைகளின் சிறகுகளை
சுட்டுப் பொசுக்குகிறது
சூடேறிய காற்று.

நீர்நிலைகள் கொதித்து வற்றுகின்றன.
நிலங்கள் வெடித்துச் சிதறுகின்றன.
திக்கெங்கும்
விலங்குகள் சிதறியோடுகின்றன
கதறிக்கதறி.

கிளைகளிற் தூங்கிய
கூடுகளும்
குஞ்சுகளும்
கருகிக் கருகி உதிர்கின்றன.

பேரிரைச்சலைக் கக்கிக் கக்கி
வியாபிக்கிறது வனத்தீ.

கரும்புகையுடன்
எழுந்து கவிகிறது
சுடு சாம்பல்.

03

வனத்தின் ஆழங்களில் புதைந்து
கிடக்கின்றன
நொறுங்குண்ட எலும்புக்கூடுகளும்
கூராயுதங்களால் குத்திச் சிதைக்கப்பட்ட
பெண் குறிகளும்
பற்கள் கடித்துக் குதறியெறிந்த
பெண் முலைகளும்....

04

வனக்குகைகளில் அடைந்து கிடக்கின்றன
கொலைக் கருவிகளும்
பணக்கட்டுகளும்....

05

வனத்தின் திசைகளெங்கும்
விஷப்பாம்புகளாய் இறைந்து கிடக்கின்றன
புதிர்களும்
பொறிகளும்....

06

வனத்தின் இருண்ட மூலைகளில்
இரத்தக்கறை படிந்த
வேட்டைப் பற்களைத் துருத்திக்கொண்டு
இரைதேடி ஒளிந்திருக்கின்றன
கொடிய மிருகங்கள்.

07

உருமறைத்து
வனத்தின் கருநிழல்களில்
மறைந்து மறைந்து
திக்கெங்கும் ஆயதங்களால்
குறிபார்த்தபடி திரிகிறார்கள்
வேட்டைக்காரர்கள்.

08

தோழியர் புடைசூழ
மாசற்ற வதனத்தில் புன்னகை சூடி
வெண்துகில்களைக் காற்றிலசைத்து
வனத்துள்ளே
ஒளிபரப்பித் திரிந்த
அழகிய இளவரசிகளை
முரட்டுக் கைகளால் நெரித்து
துகில்களை உரித்து
இருளடைந்த குகைகளுக்குள்
கடத்திச் செல்கிறார்கள்
வில்லர்கள்.

09

குகைகளுக்குள்ளிருந்து பீறிப்பீறி
வனச்சூழலில் எதிரொலிக்கின்றன
இளவரசிகளின் அவலக்குரல்கள் ■



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவளது குரல் கேட்டது. என் மனத்திற்கினியவளின் குரல். ஆசுவாசமாய் வெளியிலே அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து உள்ளே வந்தேன். அவளை மறைந்திருந்தே ரசிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இது ஒரு தலைப்பாசம். அவள் என்னைப் பார்ப்பதற்கே விருப்புவது கிடையாது. இந்த நிலையில் எனது அன்பை எப்படி நான் அவளிடம் காட்டுவது?

எனது அறைக்குள் வந்து சாளரத்தருகில் அமர்ந்து அதன் திரையை இழுத்து விட்டேன். அந்தத் திரைக்கு என்னில் நேசமதிகம். அவளை எனக்குக் காட்டும் என்னை அவளுக்குக் காட்டாது.

அதோ என்னவள். நாயின் கைகளைப் பற்றியபடி துள்ளித் துள்ளி வருகிறாள். அவளுக்கு எல்லாவற்றுக்கும் அம்மாதான் வேண்டும். துயிலெழும்ப, உடற் சுத்தம் செய்ய, தலைவார, பாடசாலைக்கு கூட்டிச் செல்ல, அழைத்துவர...., அவள் நான் அவளின் பைத்தியம்.

அவர்கள் இருவரும் வீட்டினுள் சென்றுவிட அவர்களின் பேச்சுக் குரல்கள் எனக்குக் கேட்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு என்னவள் என்ன செய்கிறாள் என்பதனை கற்பனையில் பார்த்துவிட என்னால் முடியும்.

அவளது காலணி வெட்டி விட்டதாய்ப் பெரிதாய் அழுகிறாள். இப்போது குதித்தபடி தானே வந்தாள்? கழற்றும் போதுதான் வேதனை தெரிந்திருக்க வேண்டும். அவளது தாய் ஏதோ சமாதானம் சொல்வது கேட்கிறது. என்னவள் இன்னும் பெரிதாய் நிலத்தை உதைத்து அழும் ஒலி கேட்கிறது. என்னிடம் மருந்துகள் இருக்கின்றன. ஓடிப்போய் அவளுக்கு மருந்து போட்டுவிடப் பரபரக்கும் எனது கைகளை இறுகக் கட்டி என்னை அடக்கிக் கொள்கின்றேன். ஏனெனில் என்னைக் கண்டால் அவள் காயத்தை மறந்து விட்டு இன்னும் பெரிதாய் கத்தி அழுவாளே...

பாவம் அவள் முன்னரென்றால் எனது அறையை, எங்கள் வீட்டு வாசலை முறைத்தபடியே பதுங்கிப் பதுங்கிப் போய் வருவாள். இப்பொழுது நான் இங்கை இல்லை என்ற நினைவுடன் சுதந்திரமாகத் துள்ளித் திரிகிறாள். அவளது அந்தச் சுதந்திரத்தை நான் ஒருபோதும் குறைத்து விடக் கூடாது. அப்படி நான் செய்வது அவளை நான் நேசிப்பதை பொய்யாக்கிவிடும். உண்மையான நேசம் என்பது அந்த நேசத்திற்குரியவளுக்கு ஒரு போதும் தீங்கிழைக்கத் தூண்டாது. அவர்களே எங்களுக்கு தீங்கிழைத்தாலும்... கூட.

சாப்பிட வேண்டும் என்பதைக் கூட மறந்துபோய்க் கூரையை வெறித்தபடி நிலைகுத்திப் போயிருந்த எனது தோற்றத்தின் அகோரம் கண்டு உள்ளே வந்த அவளது தாய் பயந்து போயிருக்க வேண்டும்.

"தம்பி.... தம்பி... என்ன இது? ஏன் இப்படி இருக்கீங்கள்?" இறுதிச் சொல்லில் தளும்பிய அந்தப் பாசக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டேன். எனது விழிகளும் ஏனோ சுரந்தன.

மூக்கை உறிஞ்சி, கண்களையும் சேலைத் தலைப்பினால் துடைத்தபடியே "இந்தாங்கோ தம்பி சாப்பிடுங்கோ. சுடச் சுட கொண்டு வருவம் எண்டு தான் பார்த்தனான். ஆனா உவள் இப்பதான் நித்திரை கொண்டவள்"

என்றபடி ஏதோ சிற்றுண்டியை எனக்கருகில் வைத்தாள் என்னவளின் தாய்.

ஓ! என்னவள் குட்டிப் பகல் தூக்கம் போடுகின்றாளா? அப்படியானால் அவளது நினைவுகளில் மூழ்கி மதியச் செய்திகள் எதையும் கேட்காமல் விட்டுவிட்டேனோ? நிலைமை மூளையில் இப்போதுதான் உறைத்தது.

"இண்டைக்கு உங்களுக்கு மனஞ்சரியில்லைப் போல கிடக்கு. நீங்கள் சாப்பிடுங்கோ. மற்றாக்களுக்கு உள்ள கொண்டு வந்து வைச்சிருக்கிறன். பிறகு வாறன்' என்று விட்டுப் போய்க்கொண்டிருந்த அந்தத் தாயைத் திரும்பிப் பார்த்தேன். ஒவ்வொரு அசைவிலும் பாசம் பொழியும் அந்தக் கருணை உருவத்தைப் பார்க்கவே கொடுத்து வைத்திருக்க வேண்டும் நான் இருந்த மனநிலையில் அந்தத் தாயை நோகடித்து விட்டேனோ?

மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா. என்ன சொன்னீர்கள்? பிறகு வருகிறேன் என்றா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்கள் இளவரசி எழுந்து உங்களை வாட்டியெடுப்பாளே. மீண்டும் இரவு அவள் தூங்கும் வரை நீங்கள் ஓரிடமும் அசைய முடியாதே. அதன் பிறகு அலுப்பில் நீங்களும் தூங்கி விடுவீர்கள். பின்னர் எப்படியம்மா வருவீர்கள். இனி நாளை அவள் பாடசாலைக்குப் போன பின்னர்தான் நானும் நீங்களும் சற்று ஓய்வாகக் கதைக்க முடியும். அப்போது மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனோ தெரியவில்லை மாலைப் பொழுதில் என்னவள் அடித்த கொட்டங்களை என்னால் ரசிக்க முடியவில்லை. அவளது தாயை மனம் நோகடித்த குற்ற உணர்வு போலும் நான் எனது வேலைகளிலேயே மூழ்கிப் போனேன். வழமையான என்னவளின் இன்னிசைக் குரலின் கீச்சிடல்களில் லயித்து என்னைத் தொலைக்காமல் நிறையவே வேலை செய்தேன். கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கவும் முடிந்தது.

எப்பொழுதும் போல கடிகாரத்தின் எச்சரிக்கை ஒலி அதிர்வில் விழித்தேன். காலைப் பொழுதின் இதமான தூக்கத்தை இங்கே வந்த சிலநாட்களில் இருந்து என்னவளுக்காகத் தியாகம் செய்யப் பழகிக் கொண்டேன்.

அவள் எழும் முன் எழுந்து குளித்துவிட வேண்டிய தேவை எனக்கிருந்தது. இல்லையெனில் நான் கிணற்றுக்குப் போவதை அவள் கண்டு விடுவாளோ.

கண்களும். உடலும் தூங்கச் சொல்லி கெஞ்சின. ஆனாலும் என்னவளின் வீரிட்ட கத்தலுக்குப் பயந்து போர்வையை உருவியபடி எழுந்தேன். எனது கடமைகளை நான் முடித்து வரவும் **IBC** தொடங்கவும் நேரம் சரியாகவே இருக்கும்.

பனிநீர் சில்லிட்டது. கைகள் விறைத்தது ஆடை மாற்றும் போது மேற்சட்டையின் பொத்தான்களைப் போட்டுக் கொள்ளவே



# இது எனக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முடியாமல் போனது. எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். அவளுக்காகத்தான்.

எனது நண்பர்களுக்கு நான் படுகின்ற சிரமங்கள் அனைத்துமே தெரியும். அதனாலேயே என்னுடனே எழுந்து நான் குளித்து முடித்ததும் சூடாகத் தேநீர் தருவார்கள். அவர்கள் தரும் தேநீரைப் போல் அவர்களது அந்த அன்பும் எனக்கு இதமாக இருக்கும்.

எனது நண்பர்களுக்கும் நான் அவள் மேல் வைத்திருக்கும் விருப்பம் தெரியும். அவர்களுக்கும் அவளில் விருப்பம்தான். இரட்டைப் பின்னலை மடித்துக் கட்டியபடி சீருடையும் காலணியுமாய் வந்து கண்களும் சிரிக்கச் சிரித்துக் கையசைத்துப் போகின்ற அவளை யாருக்குத்தான் பிடிக்காது?

அழகு என்பது உருவத்தால் வருவதல்ல அவரவர் செயல்களால் வருவது என்பதுதான் எனது கொள்கை. அவளது செயல்களும் அப்படித்தான். யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டாள். எல்லாருக்கும் ஓடிப்போய் உதவுவாள். யார் அழுதாலும் ஏன் என்று தெரியாமலே தானும் சேர்ந்து அழுகின்ற குழந்தை அவள்.

ம்.... இருந்தாலுமென்ன, என்னை ஏற்றுக் கொள்ள, எனது அன்பை உணர்ந்து என்னுடன் ஒருவசனம் கதைக்க வைக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். பாவம் அவர்கள். காற்று நுழையும் இடமெல்லாம் நுழையக் கூடிய வல்லமை படைத்த அவர்கள் தோற்றது அவளிடம்தான்.

எனது அந்த வேதனை கண்டு அவளது அன்னை படுகின்ற வேதனையை யாராலும் எதற்குள்ளும் அடக்கிவிட முடியாது. அந்த தாயுள்ளம் என்னையும் தனது குழந்தையாகவே பார்த்து ஒவ்வொரு கணமும் அழுது கொண்டிருந்தது. சிலவேளைகளில் அந்தத் தாய்க்காகவேனும் இங்கிருந்து போய்விட வேண்டும் என்று நான் முயன்ற வேளைகளில் அதைத்தடுத்ததே அந்த தாய்தான். அத்துடன் எனக்கு ஏற்ற வசதிகள் அனைத்தும் இங்கேதான் இருந்தன. ஆகவே நான் எவ்வித்திலும் யாருக்கும் சிரமம் என்று அமைதியாகி விடுவேன்.

ஒரு முறை எனது படங்களடங்கிய புகைப்படத் தொகுப்பு ஒன்றை எனது நண்பர்கள் எடுத்துப் போய் அவளிடம் காட்டியபோது எனது படத்தை தனது தளிர்க்கரங்களால் தடவியபடியே

"இந்த அண்ணா இப்ப எங்கை?" என்று கேட்டாளாம் என் இனியவள். அந்தக் கேள்வியால் திகைத்துப் போன எனது நண்பர்களினதும், அவளது தாயினதும் கண்களனைத்தும் சொல்லி வைத்தாற்போல் கலங்கி வழிய... "ஏன் அழுகிறாய்?" என்று தானும் கண் கலங்கினாளாம். "இவர் இப்ப... வீ... வீரச்....சாவு....." என்று சொன்ன தோழன் அதற்கு மேலும் அங்கிருக்க முடியாமல் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு கதறியழுதது, இன்னுமொருவன் வந்து எனது மடியில் கிடந்து விம்மியது..... எல்லாமே மறக்க முடியாதவை.

பாவம் என்னவள். நான் இந்தத் தேச விடுதலைப் போரிலே இணைந்து கொண்ட கடந்த பதின்மூன்று வருடங்களில் சந்தித்த சமர்க்களங்களில் ஏற்பட்ட விழுப் புண்கள் காரணமாக தழும்பேறிய நெற்றி, உருவிழுந்த மூக்கு, சிதைந்த ஒருபக்கக் கன்னம், எரிகுண்டு பட்டுக் கருகிச் சுருண்ட காது, இன்னும் பெருவிரலை இழந்த இடதுகை என்று உடல் கொள்ளாத் தழும்புகளுடன், ஆறாத காயங்களுடனும் இருக்கும் என்னை எப்படி ஒரு மனிதனாக அந்த ஏழு வயதுச் சிறுமியால் ஏற்றுக் கொள்ள முடியும்?

அவள் மட்டுமல்ல அவளது வயதினர் என்னை முதன்முதலில் காணும் புதியவர்கள் பொதுவில் யாருமே என்னைக் கண்டால் பயந்துதான் போவார்கள்.

வீட்டிற்கு நான் வருவதேயில்லை என்று என்னைப் பெற்ற எனது அன்னை தினமும் கண்ணீரோடு வாழ்வதாக எல்லோரும்தான் வந்து சொல்லுகிறார்கள்.

என்னைக் கண்டதுமே ஓடி வந்து கன்னம் வழித்து நெட்டி முறிக்கும் எனது அன்னைக்கு இனிமேல் நாவூறுபடச் சாத்தியமே இல்லை என்பதுடன் நாவூறு கழிக்க ஒரு பக்கக் கன்னமுமில்லை என்பது தெரிய வேண்டாமே என்றுதான் வீட்டிற்கே போகாமல் அம்மாவே தேடி வந்தாலும் ஒளித்துத் திரிகிறேன்.

என்னைப் போல் இன்னொரு இளைஞன் உருவற்றுப் போகக் கூடாது. ஆசையாய் என்னவளைப் போன்ற ஒரு குழந்தையின் இயல்பில் மயங்கி அதனைத் தூக்கி கொஞ்சக் கூட முடியாமல் தவிக்கக் கூடாது. இரவுகளைப் பகல்களாக்கி வாழக்கூடாது. தலைக்கவசமும் மழைக் கவசமுமாய் திரியக்கூடாது. இன்னும் ஒவ்வொரு சந்தர்பங்களிலும் நான் படுகின்ற வேதனையை யாருமே அனுபவிக்கக்கூடாது.

அதற்காக..... அதற்காகத்தான் இப்பொழுது என்னால் இயன்ற வரை தீவிரமாய்ச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். எனது உருவம்தான் சிதைந்ததே தவிர உறுப்புக்கள் எவையும் சிதறவில்லை. எனது சோதனைகளை இனிமேல் யாருமே அனுபவிக்கக் கூடாது என்பதற்காக இழப்பதற்கு என்னிடம் ஒரு முழுமையான உடல் இன்னும் மீதம் இருக்கிறது.

எனது மூளையின் இறுதிக்காலம் இயங்கும் வரையும் உறுதியுடன் செயற்பட என்னால் முடியும். காயப்பட்டுத் தழும்பேறியது எனது என்றோ ஒருநாள் அழிவிற்குட்படும் உடலே அன்றி உணர்வு சுமக்கும் உள்ளமல்ல.

எப்படி எனக்குள் இத்தனை அற்புதமான சிந்தனைகள்? இவ்வளவு வேதனைகளுக்குள்ளும் என்னால் எப்படி நின்று பிடிக்க முடிகிறது? ஒரு சராசரி இளைஞனாக இருந்த என்னால் எப்படி மாற முடிந்தது? எனக்கே சிலவேளைகளில் வியப்பு வருவது உண்டு. வழமைபோல் எதற்கும் வரும் அந்த முகம்தான் சிரித்தபடி பதிலாய் வரும்.

முன்னர் போல நான் இப்போதும் எங்கள் தேசச் சுமை தாங்கியின் படத்தை என்னுடன் வைத்திருப்பதில்லை. ஏனெனில் என்னைப் பார்த்து அந்த நல்லமனமும் வேதனைப்பட்டு விடக் கூடாது. ஏற்கனவே அளவற்ற வேதனையை தாங்கும் அந்த இதயத்தை நானும் வலியடைய வைக்கக் கூடாது என்பதற்றாக படமில்லாமலே மனதிற்குள் பதிந்து போன அந்தப் புன்னகையை நினைத்தபடியே செயலாற்றிக் கொண்டிருக்கின்றேன். இதோ, இப்பொழுதும் கூட அந்தப் புன்னகையை நினைக்க எனக்கும் சின்னதாய் ஒரு முறுவல்வருகிறது உங்களுக்கும் வருகிறதா? அப்படியானால் என்னோடு சேர்ந்து சிரியுங்களேன்.

**சூரியநிலா**

அவளது குரல் கேட்டது. என் மனத்திற்கினியவளின் குரல். ஆசுவாசமாய் வெளியிலே அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து உள்ளே வந்தேன். அவளை மறைந்திருந்தே ரசிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இது ஒரு தலைப்பாசம். அவள் என்னைப் பார்ப்பதற்கே விருப்புவது கிடையாது. இந்த நிலையில் எனது அன்பை எப்படி நான் அவளிடம் காட்டுவது?

# ...த மட்டுமேயாகட்டும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் விடுதலை வரலாற்றில் ஜனவரி — நினைவுக் குறிப்பு

### கடைசித் தமிழ் மன்னன் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட நாள் :

அன்றைய கண்டி இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனான கண்ணுசாமி என்ற சிறி விக்கிரமராஜசிங்கனின் ஆட்சியைக் கைப் பற்றும் நோக்கில் படையெடுத்து வந்த ஆங்கிலப்படைகளிடம் பிலி மத்தலாவை, எகஸ்போலை தலைமையிலான சிங்களப் பிரதானி களால் காட்டிக் கொடுக்கப்பட்டு 24.01.1815 அன்று வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான்.

### சிங்களச்சிறீ தமிழர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டது :

சிங்களப் பேரினவாதத்தின் ஆசியோடு ஆட்சிபீடமேறிய சிறீலங் காவின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவினால் சிங்க ளம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழீழப் பகுதிகளில் அமுல்ப்படுத்தப்பட்டது. அதன் ஒரு கட்டமாக 01.01.1958 அன்று தமி ழர் பகுதிகளில் அனைத்து வாகனங்களிலும் சிங்கள சிறீ எழுத்தை பொறிக்க வேண்டும் என்ற அநாகரிக இனவாத விதி அமுல்ப்படுத் தப்பட்டது.

### தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை:

10.01.1974 அன்று சிறீலங்கா அரசின் பல்வேறு தடைகளையும் மீறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழாராட்சி மாநாட்டு நிகழ்வின்போது சிறிமா அரசின் சிங்களக் காவல்படைகளால் 9அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கிளாலி நீரேரிப் பயணிகள் படுகொலை:


2.10.1993 அன்று யாழ் மாவட்டத்தில் கிளாலி நீரேரியில்வைத்து குழந்தைகள் பெண்கள் உட்பட 50ற்கும் மேற்பட்ட பயணிகள் சிங் களக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

### மாவீரன் கப்டன் அருள் வீரச்சாவு:

தாயகத்து விடுதலைக்காக 1986இல் தன்னை விடுதலைப் புலிகளோடு இணைத்துக் கொண்டவர் கப்டன் அருள் மாஸ்ரர். தமிழீழ விடுதலைப் புலிகளால் பாவிக்கப்படும் துப்பாக்கி எறிகணையான அருள்-89 இவரால் வடிவமைக்கப்பட்டதாகும். 04.01.1988 அன்று நீர் வேலிப் பகுதியில் ஏற்பட்ட இந்திய இராணுவத்துடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

### கொக்கட்டிச்சோலைக் கிராமப்படுகொலை:

1987ல் 28,29,30 ஆகிய நாட்களில் மகிழடித்தீவு, இறால் கொம் பனி, முனைக்காட்டுப் பகுதிகளில் சிறீலங்கா விசேட அதிரடிப்ப டையினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட200 தமிழ் மக்கள் சுட் டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.









### வங்கக்கடலில் காவியம் படைத்த கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளின் நினைவு நாள்:






விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முதுபெரும் தள பதியுமான கேணல் கிட்டு அவர்கள் போராட்டவரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு அத்தியாயம். யாழ் மக்களால் அன்புடன் நேசிக்கப்பட்ட இவர் சிங்களப்படைக்கு சிம்ம சொப்பன மாகத் திகழ்ந்தவர்.

16.01.1993 அன்று வெளிநாட்டிலிருந்து குவேக்கர்ஸின் சமாதானச் செய்தியுடன் வந்து கொண்டிருந்தபோது இந்தியச் சதிக்குப் பலியாகி 9 போராளிகளுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.



### மாமனிதர் குமார் பொன்னம்பலம் - நினைவு நாள்:

சந்திரிகா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை அம்பலப் படுத்தியவரும், மனிதஉரிமைவாதியும், சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் சந்திரிகா அரசின் கொலையாளிகளால் 05.01.2000 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத் திற்கு சவால் விடுத்து, ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் திரு. குமார் பொன் னம்பலம் அவர்கள். இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் இவருக்கு மாமனிதர் விருது வழங்கப் பட்டது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஒஸ்லோவில் நடைபெற்றது:

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையேயான மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை, 02.12.2002 அன்று, நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகியது.

### சமஸ்டி அமைப்புமுறை குறித்து இணக்கம்:

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே, அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக, முக்கியமான இணக்க நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசத்தில், உள்ளார்ந்த சுயாட்சி அடிப்படையில், சமஸ்டி அமைப்பு முறையொன்றை ஏற்படுத்துவது குறித்து இணக்கம் தெரிவித்திருந்தனர். நோர்வேயின் சமாதானத்திற்கான சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள் இதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என வர்ணித்திருந்தார். நோர்வேயில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இறுதி நாளான 05.12.2002 அன்று, முக்கியமான இணக்கநிலை தொடர்பாக அறிவிக்கப்பட்டது.



### களமும் புலமும்':

08.12.2002 அன்று சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெற்ற **'களமும் புலமும்'** நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்ததளபதி கேணல் கருணா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

### தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது தாக்குதல்:

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது, 13.12.2002 அன்று சில நாசகாரிகள் கைக்குண்டு வீசித் தாக்கி விட்டு தப்பி ஓடியுள்ளனர். சிறீலங்காப் படையினரதும் பொலிஸாரினதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட பகுதியில், இக்கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், தொலைபேசி இணைப்புக் கம்பிகள், மற்றும் சுவர்ப்பகுதி என்பன சேதமடைந்துள்ளன. இவ்விடயம் குறித்து, சிறீலங்காப் பொலிஸாரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இது சிங்களப்படையினருடன் சேர்ந்தியங்கும் கைக்கூலிகளின் நாசவேலையாக இருக்கலாம் என, சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

### விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் சுவிஸ் நாட்டுக்குப் பயணம்:

சுவிஸ்நாட்டில் உள்ள சமஸ்ட்டி ஆட்சிமுறைமை குறித்து, அறிந்து கொள்ளவும் அதிலுள்ள பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்ததளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் 08.12.2002 அன்று சுவிஸ் நாட்டுக்குச் சென்றிருந்தனர்.



### தீ விபத்து:

18.12.2002 கொழும்பில், ஐந்துலாம்படிச் சந்திப்பகுதியில், கடைத்தொகுதி உள்ளிட்ட கட்டிடத்தொகுதி ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தால், குறைந்தது 16பேர் இறந்தும், மேலும் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். பட்டாசுக் கடையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தே, மூன்று மாடியைக் கொண்ட அக்கட்டிடத் தொகுதி எங்கும் தீ பரவக் காரணமாக அமைந்ததெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள், வீடுகள் என்பன முற்றாக நாசமாகியுள்ளன எனத் தெரியவருகின்றது.

### தென்தமிழீழத்தில் கடும்மழையினால் மக்கள் பாதிப்பு:

தென்தமிழீழத்தில், இம்மாத நடுப்பகுதியில் பெய்த கடும்மழை வெள்ளம் காரணமாக, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பாதிப்பு அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழீழ திரைப்படப் பாடலும் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது:

பி.பி.சி செய்தி நிறுவனம் உலகம் பூராவும் 153 நாடுகளில் 150000 மக்கள் பங்கேற்ற வாக்கெடுப்பு மூலம் நடாத்திய பிரபல பாடல்கள் தேர்வில் தமிழீழ திரைப்படப் பாடலும் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது. "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது" எனும் தமிழீழ சினிமாப்பாடலே முதல் பத்து இடங்களிற்குள் தேர்வாகியுள்ளது.



www.tamileelamarchive.com

# பதிவுகள்

**படையினரின் துப்பாக்கி வேட்டில் குடும்பப் பெண் காயம்:**
நுணாவில் பகுதியில், 01.01.2003அன்று அதிகாலை சிங்களப்படையினரின் துப்பாக்கி வேட்டில், குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. புத்தாண்டு பிறக்கையில், சிங்களப்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் எனவும், அவர்களால் தீர்க்கப்பட்ட வேட்டுக்களில் ஒன்று, வீட்டில் படுத்திருந்த குடும்பப் பெண்ணின் வயிற்றைத் தாக்கியிருந்தது.

**புலிகளின் குரல் வானொலி நிலையம் திறப்பு:**
விடுதலைப் புலிகளின் குரல் வானொலி நிலையத்திற்கான புதிய கட்டிடம் 01.01.2003அன்று, வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், நாடா வெட்டி கட்டிடத்தை திறந்துவைத்தார். விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், தளபதிகள், கலைஞர்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**மட்டக்களப்பு, வாழைச்சேனையில் கைக்குண்டுத் தாக்குதல்:**
மட்டக்களப்பு, வாழைச்சேனையில் 02.01.2003 அன்று இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில், முன்னாள் ஊர்காவல் படையினன் உட்பட ஐந்து முஸ்லீம் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். தமிழ் முஸ்லீம் கிராமங்களின் எல்லைப் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல், தற்போதைய சமாதான முயற்சியைக் குழப்பமுனையும் நாசகார சக்திகளின் நடவடிக்கைகளின் தொடர்ச்சியா அல்லது, முஸ்லிம் கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் பிணக்கின் எதிரொலியா என்பது குறித்து அறியப்படவில்லை.

**இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சந்திப்பு:**
மட்டக்களப்பு வவுணதீவு சூனியப் பிரதேசத்தில், சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே 06.01.2003 அன்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது. மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் அவர்கள் இதில் கலந்து கொண்டு, விடுதலைப் புலிகளின் கல்லடிப் பணியகம் இராணுவத்தினரின் சோதனைக்கு உட்பட்ட விடயம் குறித்து தனது கடுமையான அதிருப்தியையும், இத்தகைய நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் குறித்தும் எச்சரித்தார்.



**புலிகளின் அரசியல் பணியகம் இராணுவத்தினரால் சோதனைசெய்யப்பட்டது:**
மட்டக்களப்பு கல்லடி டச்பார் வீதியில் அமைந்திருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பணியகம், சிறீலங்கா இராணுவத்தினரால் 03.01.2003 அன்று, சுற்றிவளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவமானது, இருதரப்பு நல்லிணக்கத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது என, விமர்சிக்கப்படுகிறது.





## நான்காவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆரம்பம்:

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான நான்காவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை 06.01.2003 அன்று, தாய்லாந்தில் ஆரம்பமாகியது. இச்சுற்றுப் பேச்சுவார்த்தை, இறுக்கமான கட்டத்தை அடையக்கூடும் என, அனைத்துத் தரப்பாலும், எதிர்பார்க்கப்பட்டபோதும், பேச்சுவார்த்தை சுமுகமாகவும், நல்லமுறையிலும் நடைபெற்றது.

**நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாள்:**
விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாளான 07.01.2003 அன்று, சிறீலங்காப் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயம், மக்கள் மீள்குடியேற்றம் சம்பந்தமான பிரச்சினைகள் பேசப்பட்டன. அத்துடன், மோதல் தணிவு, இயல்புநிலையை உருவாக்க உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உப குழு, செயலிழந்து போயுள்ளதாகவும், அது கைவிடப்பட்டுவிட்டதாகவும், அன்றைய செய்தியாளர் கூட்டத்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அறிவித்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணகள் காப்பகம்




**சமாதானத்திற்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி:**

சமாதானத்திற்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை, பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி.யினர் 08.01.2003 அன்று கொழும்பில் நடத்தியுள்ளனர். சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இப்பேரணியில், நூற்றுக்கணக்கான பௌத்தபிக்குகளும் கலந்து கொண்டிருந்தனர் என செய்திகள் தெரிவித்தன. பேரினவாதிகளின் இச்சமாதான எதிர்ப்பு பேரணியை முன்னிட்டு, நோர்வேத் தூதரகம் முன் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.



**நான்காவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை நிறைவு:**

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில், தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை, 09-01-2003 அன்று நிறைவுபெற்றது. இச்சுற்றுப் பேச்சுவார்த்தையில், மனிதாபிமானப் பிரச்சினை மற்றும் மனித உரிமை குறித்த விவகாரங்களே முக்கிய இடத்தைப் பிடித்தன.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்களை மீளக்குடியேற்றும் விடயம் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.



**புலிகளின் அரசியல் ஆலோசகர், யப்பான் நாட்டின் விசேட தூதுவர் சந்திப்பு:**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கும், யப்பான் நாட்டின் விசேட தூதுவர் யகசி அகாசி அவர்களுக்கும் இடையே 12-01-2003 அன்று தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையின்போது, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை, மீளக்குடியமைப்பது, குறித்தும், அங்கு மேற்கொள்ளப்படவேண்டியுள்ள மனிதாபிமானப் பணிகள் குறித்தும், பேசப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கு யப்பான் நாடு எவ்வகையில் உதவிபுரியலாம் என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன், தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்தும் இருவரும் விரிவாகப் பேசியுள்ளனர்.



www.tamileelamarchive.com

# பதிவுகள்






**உடனடி மனிதாபிமான மற்றும் மீள்கட்டமைப்பு தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டத்தில், உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உபதலைவர் கலந்துகொண்டிருந்தார்:**

வடக்கு கிழக்கைப் புனரமைப்பதற்காக சர்வதேச நாடுகளால் வழங்கப்படும் நிதியைக் கையாள்வதற்கான திட்ட வரைவொன்றைத் தயாரித்து, அதனை விரைவில் சமர்ப்பிப்பதாக, உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உப தலைவர், 17.01.2003அன்று, கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கை புனரமைப்பதற்கென சர்வதேச நாடுகள் வழங்கும் நிதியை, காப்பாளராக இருந்து கையாள உலகவங்கி ஒத்துக்கொண்டுள்ள நிலையில், கிளிநொச்சியில் நடைபெற்ற உடனடி மனிதாபிமான மற்றும் மீள்கட்டமைப்பு தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டத்தில், உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உப தலைவர் மிய்க்கோ நிசிமிசு கலந்துகொண்டிருந்தார். இந்த உபகுழுக் கூட்டத்தில் யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி அவர்களும் கலந்துகொண்டார்.

**புலிகளின் குரல் வானொலி சேவை விஸ்த்தரிப்பு:**

விடுதலைப் புலிகளின் குரல் வானொலி, அண்மையில் தருவிக்கப்பட்ட நவீன வானொலிக் கருவிகளின் உதவியுடன், வானொலிச் சேவை நேரத்தையும், அதன் வீச்சு எல்லையையும் 17.01.2003அன்றில் இருந்து அதிகரித்துள்ளது. மிகத் தெளிவாகவும், நீண்ட தூரத்திற்கும் இச்சேவையைக் கேட்கக்கூடியதாக இருக்கின்றதென தெரிவிக்கப்படுகின்றது.

**இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் சந்திப்பு:**

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் திரு. ஸ்ரீவன் இவான் அவர்கள் 18.01.2003 அன்று கிளிநொச்சியில், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இங்கு அதிகம் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சமாதான காலத்தில், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு, மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற வழியேற்படுத்திக் கொடுக்கவேண்டியதன் அவசியத்தை, திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள், பிரித்தானிய தூதுவரிடம் தெளிவாக விளக்கிக் கூறியிருந்தார்.

**பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு எழுச்சி நிகழ்வு:**

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு எழுச்சி நிகழ்வு, 17.01.2003 அன்று யாழ் பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகியுள்ளது. எமது தேசம் எமக்கு வேண்டும் என்ற பொதுத் தீர்மானத்துடன், இந்த ஆண்டு பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, லெப்டினன்ட் கேணல் சரா, யாழ் மாவட்ட மாணவர் அமைப்பின் தலைவர், பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர், விரிவுரையாளர்கள், ஏனைய பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள், சர்வதேச மாணவர் அமைப்பின் தலைவர், என பெருமளவிலானோர் கலந்துகொண்ட இப்பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில், முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விமானப்படையின் ஆளில்லாத உளவு விமானம் வீழ்ந்து நொறுங்கியது:**

யாழ் குடாநாட்டில், சிறீலங்கா விமானப்படையின் ஆளில்லாத உளவு விமானம் ஒன்று, 22.01.2003 அன்று, உளவு வேலையில் ஈடுபட்டிருந்த சமயம், அளவெட்டிப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளை மீறும் வகையில், உளவு நடவடிக்கையை சிறீலங்காப் படையினர் தொடர்வது, விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் அப்பட்டமாகியுள்ளதாகத் தெரிவிக்கும் அவதானிகள், இச்சம்பவம் தமிழ் மக்களிடத்திலும், சமாதான ஆர்வலர்கள் மத்தியிலும் பெருத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பதிவுகள்





**சுவிஸ் துாதுவர், சுவிஸ் நாட்டின் மனிதவள அமைச்சர், அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் சந்திப்பு:**

இலங்கைக்கான சுவிஸ் துாதுவர், மற்றும் அந்நாட்டின் மனிதவள அமைச்சர் ஆகியோர் 23.01.2003 அன்று, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர் களைச்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். கிளிநொச்சியில், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கான சுவிஸ் நாட்டின் துாதுவர் திரு. பேர்னாடினோ றெக்காசோனி, மற்றும் சுவிஸ்நாட்டின் மனிதவள அமைச்சர், துாதரக அதிகாரி ஆகியோருடன் நடைபெற்ற இச்சந்திப்பில், திரு. தமிழ்ச்செல்வனுடன், விடுதலைப் புலிகளின் சமாதானப் பணியகச் செயலாளர் திரு. புலித்தேவனும் கலந்து கொண்டிருந்தார்.

**ஒஸ்றின் பெர்னாண்டோ, கேணல் கருணா சந்திப்பு:**

சிறீலங்காப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்றின் பெர்னாண்டோ வுக்கும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணாவிற்கும் இடையே, 30.01.2003அன்று மட்டக்களப்பு வவுணதீவில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் துரொன்ட் புறா கோ டே இச்சந்திப்பிற்கு அனுசரணையாளராகக் கலந்துகொண்டார். வவுணதீவு சூனியப் பிரதேசத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் கேணல் கருணா, மட்டக் களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ், மருத்துவப் பொறுப்பாளர் வாமன் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறீலங்கா தரப்பில் ஒஸ்றின் பெர்னாண்டோவுடன், மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

**காணாமல்போனவர் பற்றிய விசாரணை:**

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில், சிங்களப்படையினர் யாழ் குடா நாட்டை ஆக்கிரமித்தபோது சிங்களப்படையினரால் கைதுசெய்யப் பட்டு காணாமல்போன பலநுாற்றுக்கணக்கானோர் பற்றிய விசாரணை ஒன்று 24.01.2003 அன்று ஆரம்பித்துள்ளது. புதிதாக நியமிக்கப்பட் டுள்ள, இந்த விசாரணைக் கமிசன், 24.01.2003 அன்று யாழ்ப்பாணத் தில், விசாரணையை ஆரம்பித்தது. காணாமல்போனோரில் சிலரது குடும்ப உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருந்தனர்.

**கடல் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்:**

சிங்களக் கடற்படையினர், நான்கு கடல் தொழிலாளர்களைக் கடுமை யாகத் தாக்கிய சம்பவம் 27.01.2003அன்று, வடமராட்சியில் இடம் பெற்றுள்ளது. வடமராட்சிக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த கடற் றொழிலாளர்களின் படகை, டோரா பீரங்கிப்படகில் சென்று நெருங் கிய, சிங்களப்படையினர், படகில் இருக்கும் எரிபொருள், மீன்பிடி உபகரணங்கள், பிடித்தமீன்கள், உணவுப் பொருட்கள் என்பனவற்றை கடலில் வீசுமாறு உத்தரவிட்டனர். கடற்றொழிலாளர்களின் உடமை களை கடலில் வீசுமாறு உத்தரவிட்ட சிங்களப்படையினர் அத்துடன் திருப்தியடையாது, தம்வசம் கொண்டுவந்த பொல்லுகளாலும், வயர் களாலும் மோசமாகத் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

**ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:**

31.01.2003 அன்று கிளிநொச்சி சென்ற, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி யத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெலமி அம்மையார் அவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடியுள்ளார். கிளிநொச்சியி லுள்ள சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. ஒஸ் லோவில் டிசம்பர் மாதம் சிறுவர் நலன் சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியே அன் றைய கலந்துரையாடல் எனத் தெரிவித்துள்ள கரோல் பெலமி அம்மை யார் அவர்கள், இனமுரண்பாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறு வர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்றை, விடுதலைப் புலிகளும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் இணைந்து மேற்கொள்வது என, இணக்கம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவித் துள்ளார். சிறுவர் நலன் காக்கும் இவ்வேலைத் திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து அன்று விரிவாக ஆராய்ந் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஜேர்மனியில் நடைபெறவி ருக்கும் அடுத்தசுற்றுப் பேச்சுவார்த்தைகளையடுத்து, இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வன்னிக்கு விஜயம் செய்தது ஆரோக்கியமானது எனவும், அவ ருடனான சந்திப்பு மகிழ்ச்சிக்குரியது எனவும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக்காப்பகம்

# பதிவுகள்

## தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்

### ஜேர்மனி






### சுவிற்சலாந்து





### பிரான்ஸ்







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு
எதிரான ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை வெளிப்படுத்தும்
உன்னத இலக்கியமாக எரிமலை




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com